Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

திருமணம்



ஜானகி - சேது

●

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஸ்ரீ C. V. கிருஷ்ணமூர்த்தி அய்யர் குமாரரும், C. V. K பப்ளிஷிங் ஹவுஸ் ப்ரொப்ரைட்டருமான ஸ்ரீ K. சேதுராமனுக்கும், மதராஸ் போஸ்டல் ஆடிட் ஆபீஸ், சூபரின்டென்டெண்ட் ஸ்ரீ C. ராஜகோபால அய்யர், B. A. அவர்கள் குமாரத்தி சௌபாக்யவதி ஜானகிக்கும் சென்னை நுங்கம்பாக்கம் "ஜெயவஸந்தில்" சென்ற 12-7-1944 அன்று வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. தம்பதிகளுக்கு அநேக வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வழங்கப்பட்டன. அநேக பிரமுகர்கள் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்தினர்.



நம் உணவு..

அநேக வியாதிகள் தோன்றுவதற்குக் காரணம் நாம் போதுமான சத்துள்ள உணவு சாப்பிடாததுதான். தீட்டாத அரிசி, காய்கறி, கீரை, நல்லெண்ணெய், பருப்பு, பால், பழ வகைகள் இவற்றில் ஜீவசத்துக்கள் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக, நெல்லிக் காயிலும், முருங்கக் கீரையிலும் ஏராளமான வைடமின் 'ஸி' இருக்கிறது. நாம் வைடமின் மாத்திரைகளைச் சாப்பிடும் போது, சாதாரணமாக ஆகாரத்தில் இருக்க வேண்டிய சத்துக்களைத்தான் சாப்பிடுகிறோம் என்பதையும், அவ்விதம் ஆகாரத்தில் சத்தில்லாமல் போவதற்கு முக்கிய காரணம் முன் யோசனையில்லாத சமையலும் மோசமான பக்குவமும்தான் என்பதையும் நாம் எப்பொழுதும் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பிருத்வி எங்கும் பரிபூரண
ஸௌக்கியத்தை நாடுகிறது

கல்கி



ALKI ஆகஸ்ட் 6. 1944 4 அண


விருந்தினர்கள் எப்
பொழுதும் விரும்பும்
மிகச்சிறந்தவை நரஸூஸ்
டீயும் காபியும் தான் என்
பது வீட்டு எஜமானிக்கு
நன்றாகத் தெரியும்.
நரஸூஸ்
இந்தியத்தயாரிப்பில் தலைசிறந்தது
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி சேலம் தென்னிந்தியா

டெண்டுகள் ...		2,904 8 0
வசூல் பில்கள் ...		10,66,178 9 6
பிராஞ்சு அட்ஜெஸ்ட்மென்டுகள் ...		3,76,566 6 8
வழங்கப்பட்ட டிராப்டுகள் சர்டிகள் ...		2,52,597 0 10
சில்லரை இனங்கள் ...		25,031 2 0
லாப நஷ்டக் கணக்கு:		
முன் கணக்குப்படி பாக்கி	5,111 3 1	
நானது அரை வருஷத்திய நிகர லாபம் ...	2,21,292 8 1	2,26,403 11 2
ஆக மொத்தம் ரூ.		2,46,73,084 8 7

[illegible]			
		1,02,013 1 9	
31-12-43 வரை தள்ளுபடி ...		35,411 2 5	66,601 15 4
கைவசமுள்ள புஸ்தகம் ஸ்டேஷனரி			45,020 5 4
வசூல் பில்கள் ...			10,66,178 9 6
சில்லறை இனங்கள் ...			3,48,823 4 11
முதலீடுகள்:			
* கவர்ன்மென்ட் புரோநோட்டு, எழுதப்பட்ட மதிப்பு ரூ.48,74,500 (மார்க்கெட் மதிப்பு ரூ. 48,90,382 3 0)			
வாங்கின விலை ...	48,64,297 11 4		
ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளது ஷேர்களின் மதிப்பு (மார்க்கெட் மதிப்பு ரூ. 47,880 0 0			
வாங்கின விலைப்படி ...	37,265 10 0		
ஷெட்யூல்ட் பாங்கிகளிலுள்ள டிப்பாசிட்கள் செக்யூரிடி ...	14,725 0 0	49,16,288 5 4	
முதல்களில் சேர்ந்துள்ள வட்டி		56,487 3 1	
கைவசமுள்ள ரொக்கம் ...	30,85,064 7 11		
கரண்ட் கணக்கில் பாங்கர்களிடம்	38,33,146 9 5	69,18,211 1 4	
ஆகமொத்தம் ரூ.			2,46,73,084 8 7

* ரூ. 65,000 மதிப்புள்ள கவர்ன்மென்ட் பிராமிசரி நோட்டுகள் சிப்பந்திகள் பிராவிடெண்ட் நிதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

டைரக்டர்கள்:

R. S. A. சங்கர அய்யர்
K. சிவசாமி

T. R. வெங்கட்ராம சாஸ்திரி
சேர்மன்

R. விஸ்வநாதன்
V. வெங்கட்ராமன்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மானேஜிங் டைரக்டர்

P. S. சுப்பிரமணிய அய்யர் B.A., G.D.A., R.A., சார்ட்டர்ட் அக்கவுண்டென்ட் & ஆடிட்டர்

இண்டோ-கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.,

1944ளு ஜூன்-மீ 30உ-ய கணக்கு விவரம்

பொறுப்புகள்

	ரூ. அ. பை.			ரூ. அ. பை.		
மூலதனம் :						
அதிகாரம் பெற்றது ...	25,00,000	0	0			
ரொக்கத்திற்குக் கோரப்பட்ட மூலதனம் ...	21,25,000	0	0			
கோரப்பட்டு செலுத்தப்பட்டது ...				18,75,000	0	0
ரிஸர்வ் நிதி ...				2,25,000	0	0
அவசர நிதி ...				25,000	0	0
வரிகளுக்காக ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளது ...				1,00,000	0	0
பொறுப்புகள் :						
பிக்ஸட், கரண்டு, சேவிங்ஸ் பாங்க், மாதவாரி டிபாஸிட், கேஷ் ஸர்டிபிகேட், சிப்பந்திகள் ஜாமீன், பிராவிடெண்ட் கிராட்டியூட்டி நிதி மற்றும் இதர பொறுப்புகள்				2,04,98,403	2	5
பாங்குகளுக்குக் கொடுக்க வேண்டியவை						

ஆஸ்திகள்

	ரூ. அ. பை.			ரூ. அ. பை.		
கடன்கள், காஷ் கிரெடிட், பில்கள், டிராப்டுகள், புரோ நோட்டுகள் இதர அட்வான்சுகள் முதலியன...				1,12,35,294	8	4
1913ளு இந்திய இந்திய கம்பெனிகளின் சட்டம் VII-ன் படி தேவையான விவரங்கள் :						
1. பாங்கிக்குப் பூர்ணமான செக்யூரிடியுள்ள கடன்கள் ...	77,82,273	5	8			
2. நல்ல கடன்களென்று மதிக்கப்பட்டு ஆதாரமுள்ள கடன்கள் ...						
(a) ஜாமீன்தாருடன் புரோநோட்டுகள்	12,22,358	2	0			
(b) பலர் தனித் தனியாக எழுதிக் கொடுத்த புரோநோட்டுகள் ...	4,75,058	0	9			
(c) பில்கள், டிராப்டுகள் ...	17,03,730	1	8			
(d) தற்காலிக ஓவர் டிராப்டுகள் ...	27,039	4	8			
3. சந்தேகப்படத்தக்க கடன்கள்...	24,835	9	7			
4. டைரக்டர், ஆபீஸர்களது கடன்	Nil					
தற்சமயமாவது எப்பொழுதாவது டைரக்டர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள், அட்வான்சுகள் ...	Nil					
பாங்கி கட்டிடம் :						
வாங்கின விலை ...	24,379	3	5			
31-12-43 வரை தள்ளுபடி செய்யப்பட்டது ...	4,200	0	0	20,179	3	5
சேப்புகள், மரதளவாடங்கள் :						
வாங்கின விலை ...	1,01,424	4	7			
இந்த அரை வருஷத்தில் வாங்கினது	1,007	1	1			

ஒல்லென இரைந்தனால் ;
உயிரில் யாக்கைஅச்

சொல்லெனும் அமிழ்தினன்
அளித்த(து) என்னவே

[நல்லவன் உரைசெய நம்பி கூறலும் : பரதன் ஏவிச் சத்ருக்னன் விளம்பரப்படுத்தியதும் ; அல்லலின் அழுங்கிய அன்பின் மாநகர் : ராமனிடத்திலுள்ள அன்பு காரணமாகத் துன்பத்துக்கு உள்ளாய்ச் சோர்ந்திருந்த அயோத்தி மக்கள் எல்லாரும் ; ஒல்லென இரைந்தனல் : ஆனந்த ஆரவாரம் எங்கும் கேட்டது : ஏதோ உயிர் நீங்கிக் கிடந்த உடம்பு அந்தச் சொல்லாகிய அமிழ்தினால் உயிர் பெற்று எழுந்தது என்று சொல்லும்படியாக இருந்தது.]

சமுத்திரம் போலிருந்தது சேனை. ஆனந்த வெறியிலிருந்து எழுந்த இரைச்சலோ சேனை எழுவதற்கு முன்னமே எழுந்தது :

எழுந்தது பெரும்படை
ஏழு வேலையின் :

மொழிந்த பேர்உவகைநான்
முழங்கி முந்தெழ,

அழிந்தது கேகயன்
மடந்தை ஆசைபோய்க் :

கழிந்தது துயர்,நெடுங்
காதல் தூண்டவே

[ஏழு வேலையின் : ஏழு சமுத்திரங்கள் எழுந்த மாதிரி : மொழிந்த பேர் உவகைதான் : ஜனங்கள் செய்த ஆரவாரம்: முழங்கி முந்து எழ : எங்கும் ஒரே படியாய்ப் பரவி எழுந்த மாத்திரத்தில் : அழிந்தது கேகயன் மடந்தை ஆசைபோய் : கைகேயியினுடைய ஆசை யெல்லாம் அப்படியே தொலைந்தது. ராமன்தான் வரப்போகிறானே என்ற காரணத்தால் : கழிந்தது நெடும் துயர் காதல் தூண்டவே : அளவில்லா ஆனந்தம் பெருக்கெடுத்த காரணமாகத் துயரத்துக்கு இடமில்லாமல் போய் விட்டது.]

இனி ராமன் இருக்கிற இடத்தை நோக்கிப் புறப்பட வேண்டியதுதானே!

ராமன் வனத்துக்கு எப்படிப் போனான் என்று கேட்டான் பரதன். காலினால் நடந்துதான் போனான் என்றார்கள்.

'ஆண்டுநின்(று) ஆண்தகை
அடியின் ஏகினான்

சண்டிய நெறி'எனத்
தானும் ஏகினான் ;—

தூண்டிடு தேர்களும்
துரக ராசியும்

காண்தரு கரிகளும்
தொடரக்,— காலினே !

["ஆண்டு நின்று ஆண்தகை அடியின் ஏகினான் சண்டிய நெறி" என : அயோத்தியிலிருந்து ராமன் காலினாலே நடந்துதான் காடடர்ந்த பாதையில் சென்றான் என்று சொல்லவும் : தானும் ஏகினான் : பரதனும் சென்றான் ; எப்படி? தேர்களும் குதிரைகளும் யானைகளும் தனக்குப் பின்னாலே வந்தன : தான் காலினாலேயே நடந்தான் !]

ஏறிச் செல்ல பரதனுக்குத் தேர் இருக்கிறது : குதிரை யிருக்கிறது : யானை யிருக்கிறது. இருந்த போதிலும் எப்படிப் போனான் தெரியுமா? அடடா, காலினால் அல்லவா நடந்து போகிறான்! இந்தச் சோகபாவம், 'காலினே' என்ற வார்த்தையைத் துண்டாக எடுத்துக் கடையில் வைத்திருப்பதில் தெளிவாகத் தெரிகிறது. கம்பர் பரதனது காலையே பார்க்கிறார் : நம்மையும் பார்க்கச் சொல்லுகிறார்.





கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

71. காலால் நடந்தான்

★

ராமன் முடிசூட வேண்டும் என்று ஜனங்களுக்கு ஒரே ஆசை: ஆனால் அவனைக் காட்டுக்கு அனுப்பி விட்டார்கள். பரதனே அரசன் என்று ஏற்பாடும் செய்து விட்டார்கள். பரதனது மனநிலை எப்படியிருக்கும் என்று யாரால் அறிய முடியும்? கடைசியாக மனநிலை தெரிந்தது. தமையன் இருக்கும்போது தான் அரசாள முடியாது; ராமனை மறுபடியும் கொண்டுவந்து முடிசூட்டித் தரவேண்டும்; அல்லாதபக்ஷம் தானும் காட்டுக்குப் போய் விடுவதாகச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் சொல்லி விட்டான். இந்த வார்த்தையைக் கேட்ட முனிவர்களும், அரசர்களும் ஆனந்த பரவசமாய்ப் பரதனை வாழ்த்தினார்கள். என்றும் வாடாத புகழைச் சம்பாதித்துக் கொண்டாய் என்று வாழ்த்தினார்கள்.

சோகத்தினாலும் கவலையினாலும் சோர்ந்திருந்த பரதனது மனசுக்கு ஒரு எழுச்சியே உண்டாய் விட்டது. அப்படியே சத்ருக்னனைக் கூப்பிடுகிறான்.

“ராமனை அயோத்திக்குக் கொண்டு வந்து விடுகிறோம்” என்று பறை சாற்றச் சொல்லுகிறான்:

ஆரியனும் தம்பியைக்
கூவிக், ‘கொண்டலின்

முர(சு)அறைந்(து) இந்நகர்,
முறைமை வேந்தனைத்

தருதும்ஈண்(டு) என்பது
சாற்றித், தானையை


விரைவினில் எழுகென
விளம்புவாய்’ என்றான்.

[ஆரியனும்: பரதனும்; கொண்டலின் முரசு அறைந்து: மேக முழக்கம் போல முரசை நகர் எங்கும் கொட்டச் செய்து: இந்நகர் முறைமை வேந்தனைத் தருதும் ஈண்டு: இந்நகரத்துக்கு அரசனாக இருக்க வேண்டிய ராமனை இங்கே கொண்டு வருகிறோம்: தானையை விரைவினில் எழுக என விளம்புவாய்: சேனையை உடனேயே புறப்பட வேண்டும் என்று சொல்ல வேண்டும்.]

ராமன் காட்டுக்குப் போய்விட்டானே என்று சோர்ந்து கிடந்த அயோத்தி மக்கள் அந்த ராமனை பரதனே போய் அயோத்திக்குக் கொண்டுவரப் போகிறான் என்ற செய்தியைக் கேட்டார்களோ இல்லையோ, ஏதோ புதிய உயிர் வந்த மாதிரி யிருந்தது அவர்களுக்கு.

நல்லவன் உரைசெய
நம்பி கூறலும்,

அல்லலின் அழுங்கிய
அன்பின் மாநகர்



ஐக்கியம் வேண்டாம்!

—சுத்தானந்த பாரதி—

விசுவநாத நாயக்கன் மதுரையை ஆண்ட மன்னன்; அவனுக்குப் பிறகு மதுரை யரசு தளர்ந்தது; அவன் பேரர் நால்வர் போட்டியிட்டனர். அவருள் **லிங்கையா** என்பவன் ஓர் அழகியைக் காதலித்தான். அண்ணன் குமார கிருஷ்ணப்பன் அவளை வலை போட்டிழுத்து அரசியாக்கிக் கொண்டான். லிங்கையாவுக்கு அண்ணன் மேல் எரிச்சல். வெளியே, "சை! அந்தப் பெண் பேய் போனாலென்ன? பீடை விட்டது. நான் என் காதலைச் சிவனிடமே வைத்து ஐக்கிய சித்தி யடைவேன்" என்று பலமான வேஷம் போட்டான். உள்ளத்தில் எப்படியாவது காதலியை அடைய வேண்டுமென்ற ஆவல் கொண்டான். அண்ணன் ஒற்றரை ஏவித் தம்பியைக் கண்காணித்தான். தலையெல்லாம் பேச்சு; பேச்செல்லாம் வேதாந்தம். 'ஓம்' என்று தொடங்கினால் ஜீவப் பிரம்மைக்கியம் வரையில் பேசித் தீர்ப்பான். தினம் சுந்தரேசர் சந்நிதியில் நின்று, "அப்பனே! என்னை ஐக்கியம் செய்துகொள்; உலகம் பிடிக்கவில்லை" என்று அழுவான். பார்த்தவர்கள் அவனைப் பரம பக்தன் என்றனர். ஒற்றர் மனங்கூடக் கரைந்தது; ஆனால், அண்ணனுக்குத் தம்பியைத் தெரியும். அக்காலம் எங்கும் போர். நல்ல வீரர் தேவை. தம்பியின் வேதாந்தப் பைத்தியம் அரசனாகும் அண்ணனுக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் அண்ணன் கோயில் பட்டரை அழைத்து இரகசியமாகப் பேசி ஒத்திகை நடத்தி யனுப்பினான்.

அன்றிரவு லிங்கையா சுவாமி சந்நிதியில் நெடுநேரம் அழுது தொழுது, கண்ணீர் வடித்து, "சிவனே, என்னை ஐக்கியம் செய்து கொள்" என்று வழக்கம்போல் கதறினான். உடனே சிவன் பேசினான்:

சிவன்:—பக்தா! உன் அன்பை ஏற்றோம். இதோ, ஐக்கிய முக்தி தருவோம். ஆனால், பிறகு நீ அண்ணன் அரசையோ, அந்தப் பெண்ணையோ நினைக்க முடியாது. சம்மதமா?

லிங்கையா:—அப்படியானால் கொஞ்சம் பொறுத்து ஐக்கியத்திற்கு வருகிறேன்!

சிவன்:—முடியாது. இப்போதே உன்னை ஐக்கியம் செய்து கொள்வோம்.


"ஐயோ, வேண்டாம் ஐக்கியம்!" என்று அலறினான் லிங்கையா.

"முடியாது, பக்தா! உன்னை விட மாட்டேன்" என்று பெரிய சத்தம் கேட்டது. பிறகு, "இதோ, பிடி!" என்றொரு மிரட்டல்......

லிங்கையா உடம்பு வேர்த்து நடு நடுங்கி உயிரைப் பிடித்துக்கொண்டு எடுத்தான் ஓட்டம். அங்கிருந்து எடுத்த ஓட்டம் அறையில் வந்துதான் நின்றது. லிங்கையா உதறலெடுத்துக் கதவை மூடிக்கொண்டு மெத்தையில் பொத்தென விழுந்து நித்திரா தேவியுடன் ஐக்கியமாகி விட்டான். சுந்தரேசருக்குப் பின்னால் ஒளிந்து பேசிய பட்டர் அரசனிடம் செய்தி சொல்ல, எல்லாரும் சிரித்தார்கள். அண்ணன் தம்பியை அழைத்து, "தம்பி! அவரவருக்குரிய கடமையை ஒழுங்காகச் செய்து வருவதே இன்ப வழி. நாடெங்கும் கலகம் நடக்கும்போது வீரனாகிய நீ போலி வேதாந்தியாயிருக்க முடியுமா? போ, போர் முனைக்கு!" என்றான்.

மதுரையில் இருந்தால் "ஐக்கியம்" எங்கே வந்துவிடுமோ என்று பயந்த லிங்கையா, வாளைத் தீட்டிக்கொண்டு மறு கணமே போர் முனைக்குப் புறப்பட்டு விட்டான்.

பாரந் துறந்த பரம சிவாக்போகம்
வாசாஞா னத்தாலே வாய்க்குமோ—காரியத்தில்
ஆண்டவன் முக்தி யளித்தாலும் ஆசைமனம்
வேண்டாமென் றோடும் விரைந்து!



இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் பாஸிசத்திற்கு விரோதிகள். ஜப்பானில் இருப்பதுபோல ஒரு சர்வாதிகாரி, சுதந்திர இந்தியாவிற்கு இருக்க முடியாது. இராணுவம் வியாபாரம் என்னும் இரட்டை சர்வாதிகாரியால் ஆளப்பட்டு வரும் ஒரு நாடு சுயேச்சை வழங்குவதாகக் கூறுவது கேலிக் கூத்தாகும். அது ஒரு சுத்தப் பொய். ஜப்பானியரிடமிருந்து எவ்வித உதவியும் நமக்கு வேண்டாம்.

வெற்றி வழியே விடுதலை

1018 T M

ஸ்ரீமான் தந்தி :—இது என்ன கூத்து! இதைவிடப் பெரிய கூத்து இதோ பாரும்.

[இரண்டு தந்திகளைக் கொடுக்கிறார்.]

ஸ்ரீமான் தபால் (வாசிக்கிறார்):—"நான் இன்று புறப்பட்டு வருகிறேன்." "நான் இன்று புறப்பட்டு வரவில்லை." என்ன ஐயா இரண்டு தந்திகளும் ஒருவரே ஒரே நாளில் கொடுத்தது போல் அல்லவா இருக்கிறது?

ஸ்ரீமான் தந்தி :—ஆம், ஒரு நாளில் கொடுத்ததுதான். முதலில் புறப்பட்டு வருவதாகத் தந்தி கொடுத்தார். பிறகு புறப்பட்டுப் போக வேண்டாம் என்று நினைத்து வரவில்லையென்று தந்தி கொடுத்தார். இரண்டு தந்திகளையும் நான் சேர்த்தாற்போல் கொண்டு போய்க் கொடுக்கப் போகிறேன். தந்தி கொடுத்த நேரமோ இரண்டிலும் அழிந்திருக்கிறது. ஆகவே தந்தி பெற்றுக் கொள்ளப் போகிறவர் மூழ்கப் போகிறார்—எந்தத் தந்தி முதலில் அடித்தது என்று.

[சிரிக்கிறார்.]

ஸ்ரீமான் தபால் :—என்ன, உம்ம காரியம் எல்லாம் வேடிக்கையாய் இருக்கிறதே?

ஸ்ரீமான் தந்தி:—இது என்ன பிரமாத வேடிக்கை! இதோ இந்தத் தந்திகளைப் பாரும்.

[மூன்று தந்திகளைக் கொடுக்கிறார்.]

ஸ்ரீமான் தபால் (வாசிக்கிறார்):—"இன்னும் இரண்டு நாட்களுக்குள் பதில் கிடைக்கா விட்டால் கல்யாணம் வேறு இடத்தில் நிச்சயமாகிவிடும்."

"நான்கு நாட்களாகியும் தங்களிடமிருந்து பதில் கிடையாது. ஆகவே கல்யாணத்தை வேறு இடத்தில் நிச்சயம் பண்ணப் போகிறோம்."

"இரண்டாம் தந்தி கொடுத்து இரண்டு நாட்களாகியும் இன்னும் பதில் இல்லை. ஆகவே கல்யாணம் வேறு இடத்தில் நிச்சயம் பண்ணியாகி விட்டது. கல்யாணத்திற்கு வரவும்."

ஸ்ரீமான் தந்தி :—எப்படி என் காரியம்? இம்மூன்று தந்திகளையும் சேர்த்து இன்றுதான் கொடுக்கப் போகிறேன்.

ஸ்ரீமான் தபால் :—தங்கள் காரியம் எனக்குப் புரியவே இல்லை. ஆனால் எனக்கு என்னமோ தங்கள் தந்திரம் வெகு காலம் பலிக்கும் என்று தோன்றவில்லை. தங்கள் தாமதத்தைப் பற்றி விசாரிப்பதற்காகத் தந்தி, தபால் இலாகா அதிகாரிகள் எல்லாரும் சீக்கிரமே ஒரு மகாநாடு கூட்டப் போகிறார்களே, தெரியுமா?

ஸ்ரீமான் தந்தி :—தெரியாமல் என்ன? கூட்டட்டுமே! யார் அதற்கெல்லாம் பயந்தார்கள்! வெறும் என் வேலையையும் சேர்த்து நீர்தான் பாருமே. எனக்கெல்லாம் சம்பளம் முக்கியமே பெரிய வேலை முக்கியமில்லை.

ஸ்ரீமான் தபால் :—நீர் என்னமோ பொது ஜனங்கள் கைக்கு ஆட்சி வரவே வராது, உம் இஷ்டப்படி பொது ஜனங்களை அலட்சியம் பண்ணலாம் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறீர்! ஆனால் ராஜாஜி திட்டத்தை காங்கிரஸ் ஒப்புக் கொண்டு, அது விஷயமாக ராஜாஜிக்கு மேல் தீவிரமாக இருக்கிறார். ஆகவே நிலைமை வெகு காலம் இப்படி இருக்கும் என்று நினைக்காதேயும்.

ஸ்ரீமான் தந்தி :—ஸ்ரீ ஜின்னா இருக்கும் வரையில் நிலைமை மாறும் என்கிற கவலை எனக்கு இல்லை.

ஸ்ரீமான் தபால்:—அட பாவி மனுஷா! இப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறீர்! இன்னும் கொஞ்சம் நான் போனால் நீரே சொல்வீர்! உம்முடைய அசட்டுத்தனத்தைப் பார்த்து எனக்குத் தலை சுற்றுகிறது. மயக்கம் வருகிறது. இதோ கீழே விழப் போகிறேன். உடனேயே என் வீட்டாருக்கு ஒரு தந்தி அனுப்பும்.

[கீழே விழப் பார்க்கிறார்.]



ஸ்ரீமான் தந்தி:—ஓய்! என்னை கம்பி மூர்ச்சை போடாதேயும்! நான் உம்மைப்பற்றித் தந்தி கொண்டு போய்க் கொடுப்பதற்கு இன்னும் பத்து நாளாவது ஆகும்.

[இதைக் கேட்டதும் மூர்ச்சை போட்டுக் கீழே விழ இருந்த ஸ்ரீமான் தபால் சமாளித்துக் கொள்கிறார்.]

இப்படிச் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்? "உடம்பு மிகவும் அபாயமான நிலையில் இருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்" என்று எழுதி இருக்கிறது, பேசாமல் உட்கார்ந்திருக்கிறீரே?



ஸ்ரீமான் தந்தி (சிரித்துக் கொண்டே):— ஆமாம், தேதி என்ன போட்டிருக்கிறது என்று பாரும்!

ஸ்ரீமான் தபால்:— ஐயய்யோ! என்ன ஐயா! தந்தி கொடுத்து நாலு நாளாகிறது, இன்னும் கொண்டுபோய்ச் சேர்க்காமல் இருக்கிறீரே? உம்மை நம்பினதற்குப் பதில் என்னை நம்பியிருந்தால் இத்தனை நாழி கடிதம் போய்ச் சேர்ந்திருக்குமே!

ஸ்ரீமான் தந்தி:— உம்மை நம்பியிருந்தால் கடிதத்தைக் கொண்டுபோய்ச் சேர்த்திருப்பீரோ, இல்லையோ!

ஸ்ரீமான் தபால்:— இதற்குச் சந்தேகம் வேறேயா? கட்டாயம் கடிதம் என் கையில் கிடைத்த மறுநாளே கொண்டுபோய்ச் சேர்த்திருப்பேன்.

ஸ்ரீமான் தந்தி:— இது விஷயம் பொது ஜனங்களுக்கும் தெரியுமோ, இல்லையோ!

ஸ்ரீமான் தபால்:— அதுதான் உம்முடைய லட்சணத்தை எல்லாரும் தெரிந்துகொண்டு இருக்கிறார்களே! தந்தி போய்ச் சேர்வதற்கு முன்னால் தபால் போய்ச் சேர்ந்து விடுகிறது என்று அவர்களுக்குத் தெரியாமலா இருக்கிறது!

ஸ்ரீமான் தந்தி:— தெரிந்து கொண்டிருக்கிறார்களோ, இல்லையோ? பின் ஏன் ஐயா தந்தி அடித்து என் கழுத்தை அறுக்கிறார்கள்? தபாலே போட்டுத் தொலைக்கிறதுதானே!

ஸ்ரீமான் தபால்:— ஓஹோ! இப்பொழுது புரிந்தது உம்முடைய தந்திரம். வேலைக்குச் சோம்பல் பட்டுக்கொண்டு இப்படிச் சொல்கிறீரா?.........ஆனால் எத்தனை நாளைக்கு உம்முடைய தந்திரம் பலித்துக் கொண்டு வரும் என்று நினைத்தீர்?

ஸ்ரீமான் தந்தி:— பலிக்கிற மட்டும் பலிக்கட்டும்! அதுவரை லாபந்தானே?

ஸ்ரீமான் தபால்:— ஹூம். அப்படியா? உம்முடைய காரியம் சர்க்காருக்குத் தெரிந்தால் உம்மை என்ன பண்ணுவார்கள் தெரியுமா?

ஸ்ரீமான் தந்தி (கட கட கட்டுக் கட என்று சிரித்து விட்டு):— அட பயித்தியக்கார மனுஷா! அவர்களுக்குத் தெரியாது என்று நினைத்தீர்? எல்லாம் தெரியும் ஐயா. ஆனால் என்னை அவர்கள் ஒன்றும் பண்ண மாட்டார்கள். இதோ என் உடையைப் பாரும், என் ராணுவ உடையைக் கவனித்தீரா? இப்பொழுதெல்லாம் நான் ராணுவ வேலையாக்கும் செய்து கொண்டிருக்கிறேன். ராணுவ வேலை செய்கிற நான் பொது ஜனங்களின் வேலையைச் செய்யாததற்காக சர்க்கார் என்னை என்ன பண்ணுவார்கள் என்று கேட்கிறேன்! பொது ஜனங்கள் வேண்டுமானால் என்னைத் திட்டலாம். ஆனால், பொதுஜன அபிப்பிராயத்தை இந்தக் காலத்தில் யார் கவனிக்கிறார்கள்? சர்க்காரே கவனிக்காமலிருக்கும்போது நான் கவனிப்பேன் என்று எதிர்பார்ப்பது மடத்தனம். இது இருக்கட்டும். இதோ ஒரு வேடிக்கை பார்த்தீரா?

[ஒரு தந்தியை எடுத்துக் கொடுக்கிறார்.]

ஸ்ரீமான் தபால் (படிக்கிறார்):— "இம்மாதம் பதினைந்தாம் தேதியன்று பங்களூருக்கு வருகிறேன். ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பவும்."

ஸ்ரீமான் தந்தி:— பார்த்தீரா வேடிக்கையை! ஆசாமி ஸ்டேஷனுக்கு வண்டி வராமல், திக்கு முக்காடி பங்களூர் போய்ச் சேர்ந்து, காரியத்தை முடித்துக் கொண்டு ஊருக்கும் திரும்பியாகி விட்டது. நான் இன்றைக்குத்தான் தந்தியைக் கொண்டு போய்ப் பங்களூரில் கொடுக்கப் போகிறேன். அந்த மனுஷர் இந்த மாதம் பதினைந்தாம் தேதி ஆசாமி திரும்பவும் வரப் போகிறார் என்று நினைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்பப் போகிறார்!

[கடகட்டுக்கட்டுக்கட என்று சிரிக்கிறார்.]

ஸ்ரீமான் தபால்:— இது என்ன, கூத்தாகவல்லவா இருக்கிறது!



தந்தியும் தபாலும்

நாடோடி

ஸ்ரீமான் தந்தி:—ஹல்லோ மிஸ்டர் தபால்! எங்கே இத்தனை அவசரமாகப் போய்க் கொண்டிருக்கிறீர்! சற்று நின்று பேசிவிட்டுப் போனால்தான் என்ன?

ஸ்ரீமான் தபால்:—ஐயய்யோ! என்னால் முடியாது. என்னையும் உம்மைப்போல் குஷிப் பேர்வழி என்று நினைத்துக் கொண்டீரா, என்ன? எனக்கு அவசர வேலை இருக்கிறது. என்னை விடும். நான் போயாக வேண்டும்.

ஸ்ரீமான் தந்தி (ஸ்ரீமான் தபாலைத் தடுத்துக்கொண்டு):—இரும் ஐயா, எல்லாம் போகலாம்! என்னமோ பிரமாத அவசரம்! என்னைவிட உமக்கு என்ன அவசரம் தட்டுக் கெட்டுப் போகிறது, கேட்கிறேன்.

ஸ்ரீமான் தபால் (கையில் வைத்திருக்கும் கார்டைக் காண்பித்து):—இதோ, இந்தக் கார்டைப் பாரும். என்ன எழுதியிருக்கிறது? "இக்கார்டு நாளைக்கே உனக்குக் கிடைக்கும் என்று நினைக்கிறேன். மறு நாளே இதற்குப் பதில் எதிர்பார்ப்பேன்" என்று எழுதியிருக்கிறதா, இல்லையா? அப்படியிருக்கும்போது நான் உம்மோடு அரட்டையடித்துக் கொண்டிருந்தால் இந்தக் கார்டு எப்படி நாளைக்கே இந்த விலாசதாரைப் போய்ச் சேருகிறது? எப்படி இந்த விலாசதார் பதில் மறு நாளே இங்கே வந்து கிடைக்கிறது?

ஸ்ரீமான் தந்தி (கடகட கட்டுக்கட என்று சிரித்துக்கொண்டு):—பேஷ்! பேஷ்! ரொம்ப அழகாயிருக்கிறது உம்முடைய காரியம்! அப்படித்தான் உம்முடைய கார்டில் ஏதாவது தலை போகிற காரியம் எழுதியிருக்கிறதோ என்றால் அதையும் காணோமே? நான் சௌக்கியம், நீ சௌக்கியமா என்று கேட்டிருக்கிறது. அவ்வளவுதானே? பூ! இதற்காகவா இத்தனை அவசரப்பட்டீர்?

ஸ்ரீமான் தபால்:—ரொம்ப அழகாயிருக்கிறது நீர் சொல்வது? அவர்கள் அவசர காரியம் ஒன்றும் எழுதவில்லையே என்பதற்காக நாம் தாமதப்படுத்தாமல் கடிதத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்கக் கூடாது என்கிறீரா? நான் சௌக்கியம், நீ சௌக்கியமா என்று கேட்டிருக்கிற செய்தியைச் சீக்கிரம் போய்ச் சேர்த்தால் இரண்டு பேருமே சந்தோஷப்படுவார்கள். எனக்குக் கஷ்டமாக இருக்குமே என்பதற்காக அவர்கள் சந்தோஷத்தைக் கெடுக்கச் சொல்கிறீரா?

ஸ்ரீமான் தந்தி (ஏகத்தாளமாக):—பலே! பலே! எத்தனை நாளாக ஐயா, நீர் இந்நாட்டு பொதுஜன உபகாரி ஆனீர்! பொதுஜனங்களின் சந்தோஷத்துக்காக உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டவர் போல் பேசுகிறீரே!

ஸ்ரீமான் தபால்:—நான் ஒன்றும் என்னைத் தியாக புருஷன் என்றோ, தியாகமூர்த்தி என்றோ கூறிக்கொள்ள விரும்பவில்லை. நான் வாங்கும் மூக்காலணா கூலிக்கு என் வேலையைச் சரியாகச் செய்ய வேண்டாமா என்றுதான் கேட்கிறேன்.

ஸ்ரீமான் தந்தி:—நீர் வாங்கும் இந்த மூக்காலணா காசுக்காக இப்படி விழுந்து விழுந்து உழைக்கிறீரே, என்னைப்போல் ஒரு ரூபாயும் இரண்டு ரூபாயும் வார்த்தைக் கணக்கில் சம்பளம் வாங்கினால் என்ன பண்ணுவீரோ? இதோ பாரும், இந்தத் தந்தியை......! பரவாயில்லை, படித்துப்பாரும்: என்ன எழுதியிருக்கிறது?

ஸ்ரீமான் தபால் (படித்துப் பார்த்துவிட்டு):—ஐயய்யோ! என்ன ஐயா!

"பின் ஏன் அப்படித் திடீரென்று விழுந்து விட்டாய்?"

"என்னமோ விழுந்து விட்டேன்!"

"கருமாரி! நீ ஏன் விழுந்து விட்டாய் என்று எனக்குத் தெரியும். உள்ளதைச் சொல். என்னிடம் உண்மையை ஒளிக்காதே!"

"ஒளிப்பதற்கு என்னிடம் ஏதாவது இருந்தால்தானே!"

"இருப்பதும் இல்லாததும் எனக்குத் தெரியும்!"

"என்ன தெரியும்? தெரிந்தால் சொல்லுங்களேன்!"

"நீ சுதர்சனை நினைத்துக்கொண்டு விட்டாய். அதுதான் அப்படி விழுந்து விட்டாய்!"

"சுதர்சன்" என்றதும் கருமாரிக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என் வாழ்க்கையை நிர்மூலமாக்கிய அந்தத் துரோகியை உனக்கு எப்படித் தெரியும்?" என்று அவள் ஆவேசத்துடன் கேட்டாள்.

"கருமாரி! உன் வாழ்க்கையை நிர்மூலமாக்கிய பாவி சுதர்சன் அல்ல; நான்தான்! என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்காத உன்னை நடுத்தெருவில் அலைய விடுவதென்று இந்தப் பாவிதான் தீர்மானித்தேன். உங்கள் வீட்டு வேலைக்காரிக்கு லஞ்சம் கொடுத்து உன்னைப் பிள்ளையார் கோயிலுக்கு வரும்படி சுதர்சன் சொன்னதாக நான்தான் சொல்லச் சொன்னேன். அவன்மீது வைத்திருந்த அளவற்ற அன்பின் காரணமாக, நீ அங்கு நிச்சயமாய் வருவாயென்று எனக்குத் தெரியும். அதே மாதிரி, அங்கு அவனைக் காணாவிட்டால் நீ மானத்துக்கு அஞ்சி வீடு திரும்ப மாட்டாய் என்று நம்பியதும் இதே பாவிதான். என்னுடைய நம்பிக்கையெல்லாம் இது வரை ஒன்றும் வீண் போகவில்லை. இன்னும் ஒரே ஒரு நம்பிக்கைதான் இந்தப் பாவிக்கு இருக்கிறது. அது......" என்று மேலே சொல்லச் சிறிது தயங்கினான் நவநீதம்.



"என்ன நம்பிக்கை அது? நான் சாக வேண்டுமா?" என்று ஆத்திரம் பொங்கக் கேட்டாள் கருமாரி.

"அதற்காகவா நான் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்கிறேன்? உன் அழகுக்கு நான் அடிமையாகி விட்டேன். என்னைக் கைவிட்டு விடாதே! என்னுடைய கடைசி நம்பிக்கை நிறைவேற நீதான் துணை செய்ய வேண்டும்......"

"அடபாவி! என் வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்கிய உன்னையா நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்? நீ என்னைக் காரில் ஏற்றிக் கொண்டு வந்த மறு நாளே உன்னை யாரென்று எனக்குத் தெரியும். ஆனால் உன்னுடைய அயோக்கியத்தனமான வேலைதான் இதுவரை எனக்குத் தெரியாமலிருந்தது. தெரிந்திருந்தால் உன் அருகில் ஒரு நிமிஷம்கூட இருந்திருக்க மாட்டேன். இதெல்லாம் தெரியாமல் பாவி நான் சுதர்சனை 'துரோகி' என்று நினைத்துக் கொண்டிருந்தேனே! ஐயோ! சுதர்சன்!"

இப்படிச் சொன்னதும் ஒரு கணம் அவள் மௌனமாக இருந்தாள். மறு கணம் பயங்கரமாகச் சிரித்தாள். அடுத்த கணம் தலை மயிரைப் பிய்த்துக் கொண்டு, "சுதர்சன்! சுதர்சன்!" என்று அலறிக் கொண்டே அவள் நடுத் தெருவில் ஓடினாள்.

* * *

ஆசை வெறியில் அவளுடைய வாழ்க்கைக்குக் கேடு விளைவித்ததின் மூலம், தன்னுடைய வாழ்க்கைக்கும் குழி தோண்டிக் கொண்டே நவநீதம், பைத்தியக்காரியான கருமாரிக்கு வேண்டிய உதவியை செய்து வந்தான். அதுவே தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் என்றும் கருதினான்.

வருக்கொருவர் தெரிந்து கொண்டும் தெரியாதவர்கள் போல் நடித்து வந்தனர்.

எங்கே மதுபாடியும் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி நவநீதம் வற்புறுத்த ஆரம்பித்து விடுவானோ என்று சுகுமாரி பயந்து கொண்டிருந்தாள். நவநீதம் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு நீண்ட பெருமூச்சு விடுவதின் மூலம் தன் மனத்தைத் தேற்றிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் சுகுமாரியிடம், "உன்னுடைய தோற்றத்துக்கு நீ நடனம் கற்றுக்கொண்டால் நன்றாயிருக்கும்" என்றான் நவநீதம்.

"அதற்கென்ன, கற்றுக் கொள்கிறேன்!" என்றாள் சுகுமாரி.

உடனே தனது கம்பெனியைச் சேர்ந்த நாட்டியக்காரி நளினிவிடம் சுகுமாரியை ஒப்புவித்தான் நவநீதம். சுகுமாரியும் மூன்றே மாதத்தில் ஒரு சிறந்த நடனராணியாகி விட்டாள்.

ஃ

ஒரு நாள் சுகுமாரி ஆயிரக்கணக்கான ரஸிகர்களுக்கு முன்னால் மேடையின்மீது நடனமாடிக் கொண்டிருந்தாள். அவள் அப்பொழுது தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் வேதனையைச் சித்தரிக்கும் அமரகவி பாரதியாரின், "துண்டிற் புழுவினைப் போல்" என்ற பாட்டிற்கு உணர்ச்சியுடன் பாவம் பிடித்துக் கொண்டிருந்தாள்.

ரஸிகர்கள் உள்ளம் உருகி, மெய்மறந்து வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று உண்மையிலேயே அவள் ஏதோ ஏக்கம் பிடித்தவள் போலாகி விட்டாள். அவளையும் அறியாமல் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்துவிட்டது. ரஸிகர்கள் எங்கே கூச்சலிடப் போகிறார்களோ என்று நவநீதம் பயந்து விட்டான். அவளுடைய அழுகை அளவுக்கு மீறிவிட்டது. அடுத்த கிஷணம் அவள் தடாலென்று கீழே விழுந்து மூர்ச்சையானாள்.

நவநீதம் செய்வது இன்னதென்று தெரியாமல் திருதிருவென்று விழித்தான். அந்தச் சமயத்தில் கோமாளி திடீரென்று மேடைமீது தோன்றி, நிலைமையைச் சமாளித்துக் கொண்டான். ரஸிகர்களும் உண்மை நடிப்பால்தான் அவள் உணர்ச்சியுற்று விழுந்து விட்டதாக நினைத்துக்கொண்டு சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

* * *


அவளுடைய தேகம் அன்று மெத்தென்ற மஞ்சத்தின்மீது கிடந்தது. அவளுடைய தலைமாட்டில் சோகமே உருவாய் உட்கார்ந்திருந்தான் நவநீதம். அவளுடைய தலையை அன்புடன் தடவி விட்டுக் கொண்டே, "சுகுமாரி!" என்றான்.

"ஏன்?" என்று ஈனக் குரலில் கேட்டாள் சுகுமாரி.

"இப்பொழுது உடம்பு எப்படியிருக்கிறது?"

"உடம்பிற்கு என்ன! அது எப்பொழுதும் போல் தான் இருக்கிறது!"





அவள் பைத்தியக்காரி. பிறப்பிலேயே அவளைப் பைத்தியம் பின் தொடர்ந்து வரவில்லை. வாழ்க்கையின் நடுவில் ஏற்பட்ட ஓர் அதிர்ச்சி அவளைப் பைத்தியமாகச் செய்து விட்டது. முதலில் அவளைக் கொண்டு வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தவர்கள் மூலம் அவளுடைய பெயர் சுகுமாரி என்று தெரிந்தது. அந்தப் பெயருக்குத் தகுந்தபடி அவள் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. அந்த ஆஸ்பத்திரியில் அவளைக் கவனிப்பது போன்று வேறு ஒருவரையும் கவனிப்பது கிடையாது. காரணம், அவளுக்கு வேண்டிய பணமெல்லாம் நாடகக் கலைஞன் நவனீதத்தினிட மிருந்து வந்து கொண்டிருந்ததுதான்.

நவனீதத்தைப் பற்றியும் அவனுடைய நாடகக் கலையைப் பற்றியும் தமிழ் நாட்டில் தெரியாதவர்கள் ஒருவரும் இருக்க முடியாது. அவனுக்கும் சுகுமாரிக்கும் நடுவில் இருந்த தொடர்பு என்ன? அவள் ஏன் பைத்தியக்காரியானாள்?—அதுதான் கதை.

ஃ

நாடகக் கம்பெனி திருவாரூரில் நடந்துகொண்டிருந்த சமயம். ஒரு நாள் நவனீதம் காரில் தன் ஜாகையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு உருவம் தள்ளாடிக்கொண்டு வந்து அவனுடைய காரில் மோதிக்கொள்ளப் பார்த்தது. அவனையும் அறியாமல் அந்த உருவத்தின் மீது அவனுக்கு இரக்கம் தோன்றிற்று.—வாழ்க்கையில் சஞ்சலம் சகிக்கவில்லை போலிருக்கிறது; அதைக் காரின் மூலம் சகித்துக்கொள்ளலாம் என்று அந்த உருவம் தீர்மானித்து விட்டதோ?—நவனீதம் காரை நிறுத்திக் கீழே இறங்கினான். அப்பொழுதுதான் அந்த உருவம் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தது. கையிலிருந்த 'டார்ச் லைட்'டை அடித்துப் பார்த்தான். ஓர் இளம் பெண். அழகில் மட்டும் வறுமை இல்லாமலிருந்தாள். அவளுடைய முகம் எப்பொழுதோ பார்த்த முகம்போல் தோன்றிற்று. ஒரு நிமிஷம் யோசித்துப் பார்த்தான். பழைய சம்பவங்கள் ஒவ்வொன்றாக அவனது கவனத்திற்கு வந்தன.

நவனீதத்தின் உணர்ச்சி வசமான மனம் இறந்த காலத்திலும் எதிர் காலத்திலும் சுழல ஆரம்பித்தது. "மனிதனுடைய மனம் ஆகாய விமானம் போன்றது. விசாலமான நிரந்த வெளியில்தான் அது பறக்க முடியும். அந்த நிரந்த வெளி இறந்த காலமாயினும் சரி, எதிர்காலமாயினும் சரி" என்ற வாக்கியம் அவன் நினைவிற்கு வந்ததும் அவன் மனம் கலங்கி விட்டது.

"நான் பாவி!" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். கரை கடந்து வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே அவன் அந்தக் கட்டழகியைத் தூக்கிக் காரில் ஏற்றிக் கொண்டான். கார் கண வேகத்தில் கிளம்பிற்று.

தன் வீட்டை அடைந்ததும் நவனீதம் அவசரம் அவசரமாக டாக்டருக்குச் சொல்லியனுப்பினான். டாக்டர் வந்து பார்த்துவிட்டு, "ஒன்றுமில்லை, ஆகாரமில்லாத வியாதி; அவ்வளவுதான். நாலைந்து நாட்களுக்கு மட்டும் பழச்சார், பார்லி போன்ற எளிதில் ஜீரணிக்கக்கூடிய ஆகாரமாகக் கொடுங்கள். எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றார்.

இதைக் கேட்டதும் நவனீதம் ஒரு பெருமூச்செறிந்தான். அந்த மூச்சில் அவனுடைய கவலையெல்லாம் காற்றாய்ப் பறந்தது.

* * *

அந்த அனாதையின் பெயர்தான் சுகுமாரி. மூர்ச்சை தெளிந்ததும் அவளுக்கு நவனீதம் யார் என்பது தெரிந்தது. ஆனால் அவன்தான் தனது வாழ்க்கையை நாசமாக்கியவன் என்பதுமட்டும் அவளுக்குத் தெரியாது. ஏனெனில், அந்தச் சம்பவம் அவளுக்குத் தெரியாத மூடு மந்திரமாகவே யிருந்தது. அவன் தன்னைப் பற்றி அவளிடம் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை; அவளும் தன்னைப் பற்றி அவனிடம் ஒன்றும் சொல்லிக் கொள்ளவில்லை. அவளுக்கு நம்மைத் தெரியவில்லை என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான்; அவனுக்கு நம்மைத் தெரியவில்லை என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். இப்படி ஒரு




சேலத்தில்
கலியாண பட்டு ஜவுளி ரகங்கள்
வாங்க சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி, சேலம்.

Props :- S. N. RAMASWAMY CHETTY & BROS.



குழந்தைகளுக்கு ஆரோக்யத்துடன் தேக புஷ்டியையும் முக மலர்ச்சியையும் கொடுப்பது **பெரீஸ் பிஸ்கட்டுகள்** என்று ஒவ்வொரு தாய் தந்தையர்களும் அறிந்திருப்பதால் அவர்கள் எப்பொழுதும் பெரீஸ் பிஸ்கட்டுகளையே விரும்புகிறார்கள்.

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

குழந்தைகளை போஷித்து வளர்க்கும் ஆகாரம்
சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு

PERRY & CO. Biscuits Manufacturers, Usilampatti

காந்தி மலர் 2.

'பெண்களுக்கு'

பெண்கள் சம்பந்தமாகவும், அவர்கள் செய்யவேண்டிய சேவை, கடமை ஆகியவைகளை பற்றியும் அவர்களுக்குரிய உரிமை, பெண்மை ஆகியவைகளை பற்றியும் காந்திஜி இந்தப் புத்தகத்தில் நன்கு விளக்கி இருக்கிறார். 'மாணவருக்கு' என்ற புத்தகத்தை தமிழில் மொழி பெயர்த்த வெ. ராமசாமி, அ. வெ. நடராஜன் ஆகிய இருவருமே இந்தப் புத்தகத்தையும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள்.

கதர் பைண்டு—அழகிய பதிப்பு
காந்திஜியின் படமும் சேர்ந்தது

விலை ரூ. 6/-

புதுமைப் பதிப்பகம்

பூரண விற்பனை உரிமையாளர் :

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி

சொறி, சிரங்கு, படை முதலிய
சர்மவியாதிகளுக்கு-

மாடர்ன் சாண்டல் ஆயின்ட்மெண்ட்

சோல் ஏஜண்ட் : P. G. S. வாசன்,
54, பந்தர் தெரு :: சென்னை.

காலக்ஷேபம்

தீபாவளிப் புடவை!

சௌபதி:—என் மாமி, உங்கள் தொண்டை இப்படிப் பாறையாய்க் கட்டிக் கிடக்கிறது?



மாமி:—எங்காத்துக்காரர் தீபாவளிக்கு நான் சொன்னதை விட்டு, வேறு ஏதோ புடவையை வாங்கி வந்தார். அதனால்தான்.

—சாரதா.

○

சந்தேகம்!

பொதுஜன நன்மைக்காகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில், தலைவர் வந்தனோபசாரம் கூறுகிறார்: "சபையோர்களே! உங்களுக்கு இக் கூட்டத்தைப் பற்றி ஏதாவது சந்தேகம் இருந்தால் விஷயத்தைத் தெரிவிக்கவும்."

ஒருவர்:—ஐயா, இக்கூட்டத்திற்கு மண்ணெண்ணெய் எங்கு வாங்கினீர்கள்?

—மா. வே. ராமசாமி.

○

மன்னிக்கவும்!

ஒருவர் கையில் கடப்பாரையுடன் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து தன் மனைவியைத் தான் தாக்கி விட்டதாகவும் அதனால் தம்மை லாக்கப்பில் வைக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.



இன்ஸ்பெக்டர்:—உமது மனைவி இறந்து போய் விட்டாளா?

தாக்கியவர்:—இல்லை; அதனால்தான் இங்கு ஓடிவந்து உங்களிடம் சரண் அடைந்திருக்கிறேன்.

—என். ஆர். சுப்புசாமி.

காரணம்!

"என், ஸார்! முன்பெல்லாம் ரமணியும், மோகினியும், காதல் கட்டங்களில் வெகு உணர்ச்சியுடன் நடித்துக் கொண்டிருந்தார்களே! இப்போது என் அப்படி நடிப்பதில்லை."

"ஓ! அதுவா? இப்போது அவர்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது!"

—நாதன்.

○

பெரிய ஜோலி!

நண்பர்:—என்ன ஸார்! உங்களிடம் வைத்தியம் செய்துகொண்டு வந்த ரங்கு ஐயர் இறந்து விட்டாராமே! நீங்கள் துக்கம் விசாரிக்கப் போகவில்லையா?

டாக்டர்:—அந்த கர்நாடக வழக்கமெல்லாம் என்னிடம் கிடையாது. மேலும் என் வேலை ஜோலியில்......


நண்பர்:—வாஸ்தவம்; துக்கம் கேட்கும் வழக்கமெல்லாம் நீங்கள் வைத்துக்கொண்டால், பிறகு அதுவே ஒரு பெரிய ஜோலியாகப் போய்விடும்.

—எஸ். அம்புஜம்.

○

ஜோஸ்யர் வாக்கு

மகன்:—ஜோஸ்யரே, அப்பா இரண்டு நாளில் வந்து விடுவார் என்று சொன்னீர்களே? வியாழன் போச்சு, வெள்ளி போச்சு, இன்னும் வரவில்லையே?



ஜோஸ்யர்:—கவலைப் படாதே! சனி போனால் வந்து விடுவார்.

—வி. எஸ். நம்பிராஜன்.

○

எதிர்பாராத வெட்கம்

ஒரு டாம்பீகன்:—என் வீட்டில், என் மனைவிக்கு எவ்வளவு கௌரவம் கொடுத்திருக்கிறேன் தெரியுமா? அவளை நான் அடுப்பண்டை போகவிட மாட்டேன்.

நண்பன்:—தெரியும்; தனக்குச் சமைக்கத் தெரியாதென்று உன் மனைவி என் மனைவியிடம் சொன்னாளாம்.

—நாணு.

ளிப்பதே இல்லை. அப்படி இருக்கும் அது வகுப்பில் எந்தப் பரீக்ஷை நடந்தாலும் ரொம்ப மார்க்குகள் வாங்கி வந்தது. இது உபாத்தியாயர் குள்ள வாத்தைத் தவிர மற்றப் பையன்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆனால் ஒட்டைச் சிவிங்கி மார்க்கு வாங்கும் ரகசியம் குள்ள வாத்துக்குத் தெரியும். வாத்து, உருவத்தில் குள்ளமாக இருந்தாலும், ஒட்டைச் சிவிங்கி தன் நீளமான கழுத்தின் உதவியால் முதல் மார்க்கு வாங்கும் புலிக் குட்டியைப் பார்த்துக் காப்பி அடிப்பதை நன்றாகக் கவனித்திருந்தது. அதற்காக ஒட்டைச் சிவிங்கிக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் அது தீர்மானித்திருந்தது.





வருஷாந்திரப் பரீக்ஷை வந்தது. வழக்கம்போல் ஒட்டைச் சிவிங்கி புலிக் குட்டியைப் பார்த்துக் காப்பியடித்துக் கணக்குகளைப் போட்டு உபாத்தியாயர் வாத்திடம் கொடுத்து விட்டுப் புலிக் குட்டிக்கு முன்பாகவே அறையை விட்டு வெளியே வந்தது. ஒட்டைச் சிவிங்கிக்கு, தான் எல்லாக் கணக்குகளையும் சரியாகப் போட்டதைப் பற்றி மிகவும் சந்தோஷம்.

மறு நாள் பள்ளிக் கூடத்தில் ஏகக் கூட்டம். மிருகப் பையன்கள் எல்லோரும் தாங்கள் மேல் வகுப்புகளுக்கு மாறியதைப் பற்றிச் சந்தோஷம் கொண்டனர். ஆனால் ஒட்டைச் சிவிங்கிக்கு மாத்திரம் ஏகக் கோபம். ஏனெனில் அது பரீக்ஷையில் தேறவில்லை. ஆகவே, அது கோபத்துடன் உபாத்தியாயர் வாத்திடம் ஓடி, "நான் ஏன் பரீக்ஷையில் தேறவில்லை?" என்று கேட்டது.

அதற்குக் குள்ள வாத்து, "ஒட்டைச் சிவிங்கியே! கணக்கில் நூற்றுக்கு "0" பூஜ்யம் வாங்கியதால், நீ இன்னொரு வருஷம் இதே வகுப்பில் படிக்கவேண்டியதுதான்" என்று பதில் சொல்லிற்று. அதைக் கேட்ட ஒட்டைச் சிவிங்கித் தூக்கி வாரிப் போட்டது. "இது என்ன இது? என் விடை எல்லாம் புலிக் குட்டியின் விடைக்குச் சரியாக இருந்ததே!" என்று ஒட்டைச் சிவிங்கி சொல்லிற்று.

அதைக் கேட்ட வாத்து வாத்தியார் சிரித்துக் கொண்டே, "ஒட்டைச் சிவிங்கியே! நீ வகுப்பில் புலிக் குட்டியைப் பார்த்துக் காப்பி அடித்து மார்க்கு வாங்கி வந்தது எனக்குத் தெரியும். ஆகவேதான் இந்தப் பரீக்ஷையில் உன்னை மாற்றுவதற்காக புலிக் குட்டியைத் தப்புத் தப்பாகக் கணக்குகளைப் போடும்படி சொல்லியிருந்தேன். நீயும் விஷயம் தெரியாமல் புலிக் குட்டி போட்ட தப்புக் கணக்குகளைப் பார்த்துக் காப்பி அடித்தாய்!" என்றது.

ஒட்டைச் சிவிங்கி அவமானத்தினால் தலை குனிந்தது. அது முதல் அது வகுப்பில் விஷமம் செய்வதை விட்டு விட்டு நன்றாகப் படித்து வந்தது.



தாயார் :—ஏண்டா, குழந்தை அழுகிறான்?

பையன் :—நீ அவனுக்குக் கொடுத்த வாழைப்பழத்தை சாப்பிடத் தெரியவில்லை. வாங்கிச் சாப்பிட்டுக் காண்பித்தேன்.

பரிட்சை தேறவில்லை!



உபாத்தியாயர் குள்ள, வாத்து அறைக்குள் வந்தவுடன் வகுப்பில் அமைதி ஏற்படும். அதுவரை மிருகப் பையன்கள் யாவரும் கூக்குரலிட்டு விளையாடிக் கொண்டிருப்பார்கள். குள்ள வாத்து குள்ளமாக இருந்தாலும் அதனிடம் படிக்கும் பையன்கள் யாவரும் உபாத்தியாயரிடம் பயந்தே நடந்தனர். ஆனால் ஒட்டைச் சிவிங்கி மாத்திரம் உபாத்தியாயர் குள்ள வாத்துக்குப் பக்கத்தில் நிற்க நேரிட்டால், தன் உயரத்தையும் ஒட்டைச் சிவிங்கியின் உயரத்தையும் பார்த்தவுடன் வாத்துக்குப் பயம் ஏற்படும். குள்ள வாத்து வகுப்பில் படிக்கும் புலிக் குட்டிக்குக் கூடப் பயப்படுவது கிடையாது. ஆனால் ஒட்டைச் சிவிங்கியைக் கண்டால் மட்டும் அதற்குக் கொஞ்சம் பயம் உண்டு. இது ஒட்டைச் சிவிங்கிக்கும் தெரியும்.



வகுப்பில் ஒட்டைச் சிவிங்கி மற்ற மிருகப் பையன்களைப் போல் இல்லாமல் ஏதாவது விஷமம் செய்து கொண்டிருக்கும். வகுப்பில் உபாத்தியாயர், "ஒட்டைச் சிவிங்கியே! இங்கே வா!" என்று கூப்பிட்டால், ஒட்டைச் சிவிங்கி உபாத்தியாயர் அருகில் போவதில்லை. அதற்குப் பதிலாக உட்கார்ந்த இடத்திலேயே இருந்துகொண்டு கழுத்தை மாத்திரம் நீட்டித் தலையை உபாத்தியாயர் அருகில் கொண்டுபோய் நிறுத்தும். மற்றப் பையன்கள் அதைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பார்கள். வகுப்பில் பாடம் நடந்துகொண்டு இருக்கும் பொழுது ஒட்டைச் சிவிங்கி உட்கார்ந்த இடத்திலேயே இருந்து தோட்டத்துப் பக்கமாகத் தலையை நீட்டி இலைகளைத் தின்றுகொண்டிருக்கும். உபாத்தியாயர் குள்ள வாத்து வெகு சிரமப்பட்டு மேஜையின் மீது ஏறிக் கரும்பலகையில் ஏதாவது ஒரு கணக்கைப் போடும். பிறகு கீழிறங்கி தன் நாற்காலியில் உட்காருவதற்குள் ஒட்டைச் சிவிங்கி உட்கார்ந்த இடத்திலேயே இருந்து கொண்டு கழுத்தை நீட்டி நாக்கின் உதவியால் ஒருவரும் பார்க்காத சமயத்தில் கரும்பலகையில் எழுதி யிருப்பதை அழித்து விடும். பாவம்! உபாத்தியாயர் வாத்துக்குத் தான் கரும் பலகையில் எழுதினோமா இல்லையா என்ற சந்தேகம் வந்து விடும்.



ஒட்டைச் சிவிங்கி வகுப்பில் நடக்கும் பாடங்களைக் கொஞ்சங்கூடக் கவ

அது உண்மையான யுத்த முயற்சிதான்...



நர்ஸிங் என்றால் ஒவ்வொரு ஸ்திரீயும் பெருமைப்படக் கூடிய தொழில் தான். அதிலும் யுத்த காலத்தில் அது பிரமாதமான தொழில் என்றே கூறலாம். நோய்வாய்ப்பட்ட அல்லது காயமடைந்த நமது வீரர்களில் வசதியுற்றவர்களுக்கும் வேதனையுற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசந்தான், யுத்தத்திற்கு முந்திய நர்ஸிங் சேவைக்கும் யுத்த காலத்திலுள்ள நர்ஸிங் சேவைக்கும் உள்ள வித்தியாசம். இன்னும் அதிகமாகச் சொல்லப் போனால் வாழ்வுக்கும் சாவுக்கும் உள்ள வித்தியாசம் என்று கூறலாம். இந்த உன்னத சேவைக்கு ஏராளமான நர்ஸ்கள் தேவை. காலதாமதம் செய்யாதீர்கள். உடனே சேருங்கள். முன் அனுபவம் அவசியமில்லை. வேலையில் சேருமுன் சிறு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏற்கனவே நர்ஸ் வேலையில் தேர்ந்தவர்கள் நேரடியாக சேர்ந்து விடலாம். அனுபவமுள்ளவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படும். திருப்திகரமான சேவையின் முடிவில் சன்மானம் வழங்கப்படும். யோக்யதா பத்திரம் பெற்ற நர்ஸ்கள் ஐ. எம். என். எஸ். நிபந்தனைகளுக்குச் சம்மதிக்காவிடில் விசேஷ நிபந்தனைப்படி ஏ. என். எஸ். சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் டிவிஷனிலுள்ள டெபுடி சூப்பரின்டென்டெண்ட், ஸெயின்ட் ஜான் அம்புலன்ஸ் ப்ரிகேட், ஓவர்ஸீஸ்க்கு எழுதவும். இந்த விலாஸத்தை அறிந்துகொள்ள முடியாமல் போனால் டைரக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் ஸர்வீஸ், நியூ டெல்லி என்ற விலாஸத்திற்கு எழுதுங்கள்.

ஏ. என். எஸ்.

(ஆக்ஸிலரி நர்ஸிங் ஸர்விஸ்)

இதில் சேர்ந்து இந்தியாவுக்குச் சேவை செய்யுங்கள்.

AAA. 990

பார்த்தவர்களெல்லாம் பயந்து ஓடும் பராக்கிரமசாலியாயுமிருந்த பொன்னன் என்பவன், வள்ளி என்ற பெண்ணை நேசித்து வந்தான். அவள் அவனைக் கல்யாணம் செய்து கொண்டால், பிள்ளையாருக்குப் புதுக் கோயில் ஒன்று கட்டி வைப்பதாக அவன் பிரார்த்தனை. பிள்ளையார் ஆவலுடன் புதுக் கோயிலில் வாசம் செய்யப்போகும் நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தபொழுது, வள்ளி தன்னுடைய ஏழைக் காதலனை கப்பலுடன் ஊரை விட்டு மறைந்து விட்டாள். அவளைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாத பொன்னனின் கோபம் பிள்ளையாரின் மேல் திரும்பிற்று. பாவம்! எங்கோ குளக்கரையில் பழைய மண்டபம் ஒன்றில் தவம் செய்து கொண்டிருந்த பிள்ளையாரைத் தூக்கி அவன் குளத்திற்குள் போட்டுவிட்டான். பொன்னனை எதிர்த்துப் பிள்ளையாரைக் கரை சேர்க்க அந்த ஊரில் யாருக்கும் தைரியம் வரவில்லை.



எனக்கு இருக்கிற அசட்டுத் தனத்தை நான் யாரிடம் சொல்வேன்! இன்றைக்குக் காலையில் பாருங்கள், கண்ணாடியில் போய் எட்டிப் பார்த்தேன். அதில் நான் தென்படவில்லை. சரிதான்; ஆபீஸ் போய்விட்டேனோ என்று சந்தேகப்பட்டு செருப்பு இருக்கிறதா என்று வாசலில் போய்ப் பார்த்தேன். அதையும் காணோம். நிச்சயமாக ஆபீஸ் போய்விட்டேன் என்று தீர்மானித்தேன். சிறிது நேரம் சென்றதும்தான் சட்டத்திலிருந்து கண்ணாடி கழன்று விழுந்து விட்டதும், செருப்பு காணாமற் போய்விட்டதும், நான் நானேதான் என்பதும் எனக்குத் தெரியவந்தன! —சாமா.

இந்தச் செய்தியை ரொம்பவும் ஸ்வாரஸ்யமாக நாகராஜனுக்கு எழுதி விட்டான் பனையூர் நண்பன்.

நாகராஜன் அதைப் படித்துவிட்டு விலாவைப் பிடித்துக்கொண்டு சிரித்தான். விஷயத்தை உணர்ந்துகொண்ட கமலாவிற்கு அவன் சிரிப்பு நெருப்பாயிருந்தது. அவள் உள்ளத்திலே ஏதோ ஒன்று, 'பிள்ளையாருக்குச் செய்து கொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றவில்லை. அதனால் ஏதோ ஆபத்து வரப் போகிறது' என்று அவளை எச்சரித்தது.

3

அன்று சாயங்கிரம் தன் மனைவியுடனும், குழந்தையுடனும் சினிமா பார்க்கக் காரில் கிளம்பினான் நாகராஜன்.

வேகமாய்ப் போய்க் கொண்டிருந்த கார் மெயின் ரோடிலிருந்து சந்தில் திரும்பிய பொழுது எதிரே குதிரை வண்டி ஒன்று வந்து விட்டது. அதன் மேல் மோதாமல் காரைத் திருப்ப முயன்றபோது, கார் அருகிலிருந்த மின்சாரக் கம்பத்தின் மீது பலமாக மோதிற்று.

அந்த விபத்திலே பலத்த காயத்திற்குள்ளான நாகராஜனும், அவன் குழந்தை சாரதாவும் ஆஸ்பத்திரிக்கு உடனே கொண்டு போகப்பட்டனர். அவர்கள் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிவர சுமார் ஒரு மாதகாலமாகி விட்டது.

தானும் தன் குழந்தையும் அப்படிக் கோர விபத்திற்குள்ளானது, பிள்ளையாருக்குச் செய்ய வேண்டிய பிரார்த்தனையை நிறைவேற்றாததால்தான் என்று திடமாக நம்பினான் நாகராஜன். ஆகவே, "கமலா! இம்மாதக் கடைசியில் பனையூர் போவதென்று தீர்மானம் பண்ணியிருக்கிறேன். உனக்குச் சம்மதம் தானே?" என்று கேட்டான் அவன்.

"எதற்காக?" என்று கேள்வி கமலாவை அறியாமலேயே வெளிப்பட்டது.

"எதற்காகவா? பனையூர்க் குளத்துச் சேற்றில் புதைந்து கிடக்கும் பிள்ளையாரைக் கரை சேர்த்து அவருக்கு ஒரு சின்னக் கோயில் கட்டி வைப்பதற்குத்தான். அவருக்குச் செய்துகொண்ட பிரார்த்தனையைக் காலத்தில் நிறைவேற்றாமற் போனதினால்தானே நமக்கு இந்த ஆபத்து வந்தது?"

"இப்பொழுதாவது தெரிந்ததே!" என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் கமலா.

* * *

குளத்திலிருந்த பிள்ளையாரைக் கரை சேர்க்க நாகராஜனும், கமலாவும் வருவதற்கு முன்னமேயே பொன்னன் திடீரென்று ஏதோ வியாதியால் இறந்து விட்டான். ஊரார் பிள்ளையார்தான் அவனைக் கொன்று விட்டதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

இந்தச் செய்தி நாகராஜன் தம்பதிகளுக்குப் பிள்ளையார் மீதிருந்த பக்தியை இன்னும் அதிகமாக்கிற்று. ஆகவே, பிள்ளையாருக்குச் சின்னக் கோயில் கட்டி வைப்பதென்று முடிவு செய்திருந்த அவர்கள், பெரிய கோயிலாகவே கட்டி வைத்தனர்!

[illegible] விடும் பொறுப்பைக் கமலாவும், குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை அந்தப் பாட்டியும் எடுத்துக் கொண்டனர்.

ஜுரம் வந்த அன்றும் தான் காலை.

“அம்மா! நீ பட்டணத்துக்காரி. உனக்குத் தெய்வம் தெய்வாதீ என்பதிலெல்லாம் நம்பிக்கை இருக்குமோ இராதோ? ஆனால் எனக்கு அதிலே பூர்ண நம்பிக்கை. தெய்வபலம் இல்லாமல் ஒன்றுமே நடக்காது. குழந்தையின் உடம்பைப் பார்த்தால் எனக்கு ரொம்பக் கவலையாயிருக்கிறது. ஆகையால் இந்த ஊர்க் குளக்கரைப் பிள்ளையாருக்குக் குளிரக் குளிரப் பாலாபிஷேகம் செய்வதாய் வேண்டிக்கொள். குழந்தை உடம்பு உடனே சரியாகி விடும்” என்றாள் பாட்டி கமலாவிடம்.

குழந்தைக்கு எந்த விதத்திலாவது உடம்பு சரியானால் சரி என்று எண்ணிய கமலா, பாட்டி சொன்னபடியே குழந்தை உடம்பு சொஸ்தமானால் பிள்ளையாருக்குப் பாலாபிஷேகம் செய்வதுமின்றி நூற்றெட்டுத் தேங்காய்கள் உடைப்பதாயும் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

அன்று சாயந்திரமே ஆச்சரியப்படும் விதத்தில் சாரதாவின் ஜுரம் குணமாயிற்று. கண்ணால் காணாத அந்தக் குளக்கரைப் பிள்ளையார் மேல் கமலாவிற்கும் அபார பக்தியுண்டாகிவிட்டது. மறுநாளே கணவனுடன் குளக்கரைப் பிள்ளையார் கோவிலுக்குப் போய் மூன்று பிரதட்சணங்கள் செய்துவிட்டு வந்தாள் அவள்.

அதற்கு அடுத்த நாள் நல்ல நாளாயிருந்ததால், அன்றே அந்த ஊர்க் குளக்கரைப் பிள்ளையாருக்குப் பிரார்த்தனையை நிறைவேற்றி விட்டுப் பட்டணம் போக விரும்பினாள் கமலா. ஆனால் நாகராஜன், “பின்னிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுதே ஒருநாள் அதிகமாய் இங்கே தங்கி விட்டோம். ஆபீஸிலே துரை என்னமாய் எரிந்து விழப்போகிறாரோ, தெரியவில்லை!” என்று பிடிவாதமாய்ச் சொல்லி அவளையும், குழந்தையையும் கூட்டிக்கொண்டு பட்டணம் புறப்பட்டு விட்டான்.

2

பட்டணத்தை யடைந்த மூன்றாம் நாளே நாகராஜனை உத்தியோக விஷயமாக டில்லிக்கு மாற்றி விட்டார்கள். அந்தச் செய்தியை அவன் கமலாவிடம் சொல்லியபொழுது, “பிள்ளையாருக்குச் செய்துகொண்ட பிரார்த்தனையை நிறைவேற்றவில்லையே! அவ்வளவு தூரம் போய்விட்டால் மறுபடி எப்பொழுது இந்தப் பக்கம் வந்து அதை நிறைவேற்றப் போகிறோம்?” என்று வருத்தத்துடன் சொன்னாள் அவள்.

“பிள்ளையார் எங்கே போகிறார்? நாம் எங்கே போகிறோம்? பிரார்த்தனையை நிதானமாய் நிறைவேற்றலாம்” என்றான் நாகராஜன்.

டில்லிக்கு மாற்றலானதில் அவன் மிகவும் சந்தோஷமடைந்திருந்தான். காரணம் அவனுடைய ஆப்த நண்பர்கள் பலர் அங்கிருந்ததுதான். அந்த மகிழ்ச்சியிலே பிள்ளையாரைப் பற்றி அவனுக்கென்ன கவலை?

கமலா அந்தப் பேச்சை மறுபடியும் எடுக்கவில்லை. தன் கணவனின் சுபாவம் அவளுக்கு நன்கு தெரிந்திருந்ததுதான் அதற்குக் காரணம்.

டில்லி வந்து இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன.

“அடுத்த மாதம் போகலாம்; அடுத்த மாதம் போகலாம்” என்று லீவில் தென்னிந்தியா போவதை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தான் நாகராஜன்.

கடைசியாகக் கமலாவின் மனச் சாந்திக்காகவாவது திட்டமாய் ஒரு நாளைக் குறித்துக்கொண்டு புறப்பட வேண்டியது என்ற தீர்மானத்திற்கு வந்தான் அவன்.

இதைப் பற்றிப் பனையூரிலிருந்த தன் நண்பனுக்கும் கடிதம் எழுதி விட்டான் நாகராஜன்.

கமலா குதூகலத்தில் ஆழ்ந்திருந்தாள். பனையூரிலே ஜுரத்தில் படுத்து எழுந்த சாரதா, அன்றுவரை சாதாரணத் தலைவலியால் கூடக் கஷ்டப்படவில்லை. அதற்கு அந்தப் பிள்ளையாரின் மகோன்னதமான சக்திதான் காரணம் என்று மனப்பூர்வமாய் நம்பிய கமலா, அந்தப் பிரார்த்தனையைச் சீக்கிரமே நிறைவேற்ற விரும்பினாள்.



“நீங்கள் புதிதாகக் கண்ணாடி போட்டுக் கொண்டதில் உங்கள் அடையாளமே தெரியவில்லையே! கழற்றினதும்தான் தெரிகிறது.”

“எனக்குந்தான்! மூக்குக் கண்ணாடியைக் கழற்றினதும்தான் நீங்கள் யார் என்று தெரிகிறது!”

ஆனால், பிள்ளையார் பிறத்தியார் வாழ்வில் குறுக்கிடுவது போய் அவர் வாழ்க்கையிலேயே குறுக்கிட்டு விட்டான் ஒருவன். பனையூரிலேயே மிகவும் செல்வாக்கு வாய்ந்தவனும், தன்னைப்



பிரார்த்தனை

டி. ஜி. ஸ்ரீநிவாஸன்

நாகராஜனுக்கு என்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை. சண்பகவின் கல்யாணத்திற்கு வந்த இடத்திலா தன் குழந்தை இப்படி ஜுரமாய்ப் படுத்துக் கொள்ள வேண்டும்? அந்தப் பட்டிக் காட்டிலோ, அதன் சுற்று வட்டாரத்திலோ நல்ல டாக்டர் என்று ஒருவருங் கிடையாது.

நாகராஜனை விட மிகவும் கவலைப் பட்டவள் அவன் மனைவி கமலாதான். "எங்கேயோ பனையூர்ப் பட்டிக் காட்டில் நடக்கும் கல்யாணத்திற்கு நான் வரத் தயாராயில்லை. நீங்கள் வேண்டுமானால் போய் வாருங்கள்" என்று கணவன் தன்னைக் கல்யாணத்திற்கு அழைத்த பொழுதே சொன்னாள் அவள்.

"இதோ பார், கமலா! அவன் என்னுடைய பிராண சிநேகிதன். குழந்தையையும், உன்னையும் கண்டிப்பாய் அழைத்து வரும்படி எழுதியிருக்கிறான். நான் அழைத்துப் போகாவிட்டால் வருத்தப் படுவான். போய் அதிக நாள் இருக்கப் போகிறோமா? மிஞ்சிப் போனால் நாலு நாள். அத்துடன் கிராம வாசம். பால், தயிர் முதலானவைகளும் ஏராளமாய்க் கிடைக்கும்" என்றெல்லாம் பேசி அவளைச் சம்மதிக்கச் செய்து விட்டான் அவன்.

குழந்தை சாரதா இரண்டு நாள் சௌக்கியமாய்த்தா னிருந்தாள். ஆறாம் கல்யாணத்தன்று இரவு, "தலைவலிக்கிறது, அம்மா!" என்று அம்மா மடியில் வந்து படுத்தாள்.

தனக்கிருந்த அலுப்பிலே, "கண்டதைத் தின்னாதே, தின்னாதே என்று அடித்துக் கொண்டேனே, கேட்டாயா? படு!" என்றாள் கமலா கோபத்துடன்.

மறுநாள் காலையே சாரதா ஜுரத்தில் படுத்தாள். அவ்வூரில் இருந்த ஒரு நாட்டு வைத்தியன் வந்து பார்த்துவிட்டு ஏதோ சூரணத்தைக் கொடுத்து மூன்று வேளை தேனில் குழைத்துக் கொடுக்கும் படியும், மறுநாள் தான் வந்து நல்ல மருந்து கொடுப்பதாயும் சொல்லிப் போனான்.

நாகராஜனின் நண்பனுக்கு அத்தை உறவு கொண்ட பாட்டி ஒருத்தி இருந்தாள். அவள் ரொம்பவும் நல்லவள்.

தயவுசெய்து மன்னிக்கணும்



சோமாஸ்

நாம் சினிமாவுக்கோ சங்கீதக் கச்சேரிக்கோ போகிறோம்; கச்சேரி முடிந்ததும் பெருங் கூட்டமாக ஜனங்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டு வெளியே வருகிறார்கள். அந்தக் கூட்டத்தில் நம் கால் விரல் இன்னொருவர் காலுக்கடியில் வகையாக அகப்பட்டுக் கொண்டுவிடுகிறது. ராணுவத்தில் சேர்ந்த அந்த மனிதர் தம் பூட்ஸ் காலால் நம் காலை ஒரு அமுக்கு அமுக்குகிறார். வலி தாங்க முடியாமல் நமக்குப் பிராணன் போய்விடும் போலிருக்கிறது! நமக்குக் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. அதற்குள் அவர் நம்மைக் கெஞ்சும் பாவனையில் "ஸாரி, மன்னிக்கணும்!" என்கிறார். அவ்வளவு பெரிய மனிதர் நம்மிடம் மன்னிப்பு கேட்டால் நாம் எப்படி மாட்டேன் என்று சொல்லுவது?

அவர் "ஸாரி" என்று கூறிவிட்டதினால் நம் வலி போய்விட்டதா என்றால் அதுதான் இல்லை. ஆனால் அவர் அப்படிக் கூறியதும் பாழாய்ப் போன நம் சுய கௌரவம் என்று ஒன்று இருக்கிறதே, அது தோன்றி நம் கோபத்தை மாற்றி விடுகிறது.

நாம் தெரு வழியே போய்க்கொண்டிருக்கிறோம். பின்னால் யாரோ கை தட்டும் சத்தம் கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறோம். வெகு தூரத்திலுள்ள ஒருவர் சைகை காட்டி நம்மை அழைக்கிறார்; நாம் அவரிடம் போகிறோம். அவர் நம்மைப் பார்த்துவிட்டு, "ஓஹோ, நீங்களா? என் சிநேகிதன் பிரணநாத் என்று நினைத்தேன்! தயவு செய்து மன்னிக்கணும்!" என்கிறார்.

"பரவாயில்லை!" என்று சொல்வதைத் தவிர நம்மால் அவரை என்ன செய்ய முடியும்?

ரயிலில் நாம் விலை உயர்ந்த சாமான்கள் உள்ள பெட்டியுடன் பிரயாணம் செய்கிறோம். ஒரு போக்கிரி பெரிய மனிதனைப்போல் தடபுடலாக ஆடைகளை அணிந்து கொண்டு வருகிறான்; தன் கையில் வைத்திருக்கும் காலிப் பெட்டியை நம் பெட்டிக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு உட்கார்ந்து கொள்கிறான். வண்டி ஒரு ஸ்டேஷனை அடைந்ததும் அவன் நமது பெட்டியை எடுத்துக் கொண்டு போகப் பார்க்கிறான். தற்செயலாக நாம் அதைப் பார்த்து, "அது என் பெட்டி ஸார்!" என்று பரிதாபமாகக் கூறுகிறோம்.

உடனே அவன், "மன்னிக்க வேண்டும். அவசரத்தில் கவனிக்கவில்லை!" என்று சொல்லிக் கொண்டே அதை வைத்து விட்டு நழுவுகிறான். இம்மாதிரி சந்தர்ப்பத்தில் அகப்பட்டுச் சிறைச்சாலைக்குப் போக வேண்டிய அவனை ஆபத்பாந்தவனாக இருந்து காப்பாற்றியது யார்? 'மன்னிக்க வேண்டும்' என்னும் வார்த்தைதான்! இதில் என்ன சந்தேகம்?


கோபுவும் சோமுவும் நவரஸங்களும் ததும்பும் ஒரு நாடகத்திற்குச் செல்லுகிறார்கள். கதாநாயகன் உணர்ச்சியுடன் நடித்துச் சோக ரசத்தையே எட்டிப் பிடித்து விடுகிறான். சபையில் ஒரே கரகோஷம். சோமுவோ உற்சாக மிகுதியால் பக்கத்திலிருந்த கோபுவின் தொடையில் இரண்டு போடு போடுகிறான்.

ஆனால் அவன் அடித்தது கோபுவை அல்ல; வலது பக்கத்திலிருந்த ஒரு பெரிய மனிதரே இவனுடைய அடிக்கு ஆளானார்! உடனே, "தயவு செய்து மன்னிக்கணும்!" என்கிறான் சோமு. அந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில், கோபாவேசத்துடனிருந்த அந்தப் பெரிய மனிதர் அடங்கி ஒடுங்கி பெட்டிப் பாம்பாகி விடுகிறார்!



"மன்னிக்கணும்" என்பதன் மந்திர சக்தியை விளக்க இன்னும் எவ்வளவோ உதாரணங்கள் காட்டலாம். ஆனால், என்னுடைய கட்டுரையின் நீளத்தை நீங்கள் தயவு செய்து மன்னிக்க வேண்டுமே!

யுத்த காலக் கேள்விகள்



சர்மாவுக்குச் சொல்ல வேண்டும். சீக்கிரம் தலை வாரிக்கொண்டு புறப்படு" என்றேன்.

எங்களை அன்புடன் வரவேற்ற சர்மா மிகுந்த சோர்வுடன், "டாக்டர்! எனக்கு நல்ல நினைவு உள்ளபோதே எல்லாம் சொல்லிவிடுகிறேன். என் மனைவி இறந்து வெகு நாட்களுக்குப் பிறகு, நான் ஒரு சிறு பெண்ணை மணந்து கொண்டேன். ஆனால், சீக்கிரமே நான் என் தவறை உணர்ந்தேன். அவளைச் சந்தோஷிக்கச் செய்ய ஏராளமான பணத்தை வாரியிறைத்தேன். அதனால் கண்ட பலன் கடனாளியானதுதான். டாக்டர்! என்னுடைய சந்தோஷத்தை இழந்த அப்பெண் சீக்கிரமே மரணப் படுக்கையில் வீழ்ந்தாள். அவள் கடைசி வேண்டுகோள், மீனுவை அவள் விரும்பிய வரனுக்குக் கொடுக்க வேண்டுமென்பதே. ஆனால், மீனுவின் அழகை மட்டும் ஸ்ரீதனமாக ஏற்க எந்த இளைஞனும் முன்வரவில்லை. வேறு வழியின்றி அவள் சம்மதத்துடன் உங்களுக்கே......" என்று மேலே சொல்லி முடிப்பதற்குள், நான் இடைமறித்து, "இல்லை, இல்லை! நான் மீனுவை என் மருமகளாக ஏற்றுக் கொள்வது என்று முடிவுசெய்து விட்டேன்! இனி உங்கள் கவலையை விடுங்கள். சீக்கிரமே விவாகத்தை நடத்தி விடுகிறேன். அம்மா மீனு! இப்படி வந்து, ஸ்ரீதரன் கையைப் பிடித்துக் கொண்டு அப்பாவுக்கு நமஸ்காரம் செய்" என்றேன்.

"ஆ! டாக்டர்! தாங்கள் ஒரு தெய்வம்!" என்றார் ஆனந்த சாகரத்திலாழ்ந்த சர்மா.

* * *

"அம்மா, சகுந்தலா! தாத்தாவுக்கு இலை போடட்டுமான்னு கேளு" என்ற மீனுவின் அன்பு கனிந்த குரல் சிந்தனையிலிருந்த என்னை விழிப்படையச் செய்தது. தளர் நடையுடன் "தாத்தா" என்று சொல்லிக்கொண்டு வரும் என் பேத்தியை எடுத்து வாரி அணைத்துக் கொண்டேன். அச்சமயம், "என் தாத்தான்னு? நீ போடி!" என்று சொல்லிக் கொண்டே ஓடி வந்தான் என் பேரன்.

"இல்லை, என் அப்பான்னு" என்று மகிழ்ச்சி பொங்கும் குரலில் பரிகாசம் செய்து கொண்டே நுழைந்தான் ஸ்ரீதர்.

அச்சமயம் இந்த ஆனந்தத்தில் என்னுடன் பங்கு கொள்ளக் கொடுத்து வைக்காத என் மனைவி சகுந்தலையை நினைத்து நான் பெருமூச்சு விட்டேன்.

இருபத்தைந்து வருஷத்துக் கடினமான உழைப்பால் என் உடல் கிழத்தனத்தை அடைந்து விட்டது. இந்தக் கிழத்தை யுவதியான மீனு எப்படி விரும்புவாள்? ஐம்பது வயதான எனக்கும், பதினைந்து வயதே ஆன அவளுக்கும் இடையில் முப்பத்தைந்து வருஷங்கள் மலைபோலக் குறுக்கிடுகிறதே!

சட்டென எழுந்து என் மகன் ஸ்ரீதரனின் அறைக்குள் நுழைந்தேன். அவனை அழைத்துக்கொண்டு சர்மாவின் வீட்டுக்குப் போனேன்.

உள்ளே நுழைந்ததும் என்னை வரவேற்ற மீனு, "டாக்டர்!......" என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள், சட்டெனத் தன் வார்த்தைகளை நிறுத்தி விட்டாள். அவள் கண்கள் புதுமையுடன் என் பின்வரும் ஸ்ரீதரனை நோக்கின. அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

"இவன் உங்கள் புதல்வனா?" என்று கேட்ட சர்மாவின் முகத்திலும் ஆச்சரியம் தோன்றியது. ஸ்ரீதரனின் முகத்தையும், அவனைத் தன் கண்களால் விழுங்குவது போல் பார்த்து நின்ற மீனுவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டார் சர்மா.



"கமலா! நான் உனக்காக பாதம் அல்வா வாங்கிக் கொண்டு வந்தேன். வழியில் டிராமிலே வருகிற போது மறந்து போய..."
"தெரியுமே. வைத்து விட்டு வந்திருப்பீர்கள்!"
"இல்லே! நானே சாப்பிட்டு விட்டேனே"

4

அன்று எனக்குப் பல வேலைகள் இருந்ததால், சர்மாவின் தேக நிலையை அறிந்து வருவதற்காக ஸ்ரீதரனை மட்டும் அனுப்பினேன். வெளியே சென்று திரும்பிய நான், சர்மாவின் உடல் நிலை பற்றி அறியும் ஆவலுடன் ஸ்ரீதரன் அறைக்குள் நுழைந்தேன். வாரி விடப்படாத தலையும், சோர்வுற்ற வதனமும் கொண்டு உட்கார்ந்திருந்த ஸ்ரீதரனைக் கண்டதும் திடுக்கிட்டேன்.

"ஸ்ரீதர்! உடம்புக்கு என்ன?" என்றேன் பதட்டத்துடன்.

"ஒன்றுமில்லை ..." என்று இழுத்தான்.

"ஸ்ரீதர்! சர்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?"

"அவருக்கு நோய் அதிகமாகி விட்டது! அவர் இன்று உங்களை அவசியம் பார்க்க வேண்டுமென்றார்!"

"ஸ்ரீதர்! இன்று நான் அவருக்கு என் அபிப்பிராயத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். அதற்கு முன் உன் அபிப்பிராயத்தையும் நான் தெரிந்து கொள்ள வேண்டும். மீனுவை மனைவியாக ஏற்றுக் கொள்வதில் உனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லையல்லவா?"

"என் மனைவியாகவா?" என்றான் வியப்புடன்.

"ஆம்; உன் மனைவியாகத்தான்! அதாவது, என் மருமகளாக!"

"அப்பா! அவள் ......" என்று அவன் மேலே சொல்லத் தயங்கினான்.

"என்ன? தயங்காமற் சொல்" என்றேன் அவன் முன் மயிரைக் கோதிய வண்ணம்.

"அப்பா! நேற்று அவள் என்னிடம், 'நான் உங்கள் சித்தி?' என்று சொன்னாளே?"

நான் ஒரு க்ஷணம் ஸ்தம்பித்து விட்டேன். ஸ்ரீதரனின் மனச் சோர்வுக்குக் காரணம் அப்பொழுதுதான் எனக்கு விளங்கிற்று. புன்சிரிப்புடன், "ஸ்ரீதர்! பணமில்லாத காரணத்தால் சர்மா எனக்கு அப் பெண்ணை இரண்டாந்தாரமாகக் கொடுக்க விரும்பியதில் ஆச்சரியமில்லை. எனக்கு வேண்டியது பணமல்ல; என் வீட்டை லக்ஷ்மீகரமாக்கவும், வயது சென்ற என்னை அன்புடன் உபசரிக்கவும் ஒரு மருமகள் வேண்டும். அதற்கு மீனுவே ஏற்றவள். உம், நாழியாகி விட்டது; இச் சுபச் செய்தியை சீக்கிரமே

காலம் உழைத்து அலுத்துப் போய் ஓய்வை விரும்பியது என் சரீரம். "உஸ், அப்பாடா!" என்று சுவிச்சேரில் சாய்ந்தேன். "ஸார்! இலை போட்டு விட்டேன்" என்றான் சமையற்காரன். என் தாய் இறந்து வெகு நாட்களாகி விட்டன. ஆயினும் இன்றுதான் என் வீடு சூன்யமாயிருப்பதை என் மனம் உணர்ந்தது. அலுத்து வரும் ஆடவனை இன்முகங் கொண்டு உபசரிக்கும் சூழல் அங்கு இல்லை. இருபது வருஷ காலம் உழைத்து அலுப்படைந்த என் மனம் அமைதியை விரும்பிற்று; அவ்வமைதியில் சிறிது ஆனந்தத்தையும் விரும்பிற்று!

மறுதினம் எனக்கு ஏற்கெனவே பழக்கமானவரும் கிருஷ்ண சர்மா என்பவருமான ஒரு நோயாளி, என்னைத் தம் வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தார். அவர் வீட்டுக்குச் சென்ற நான், அங்கு வந்த ஒரு பெண்ணைக் கண்டு திகைப்படைந்தேன். செயற்கை அலங்காரங்களால் தன்னை அழகு படுத்திக் கொள்ளும் பெண் மனித உள்ளத்திற்கு வெறும் போதையையே உண்டாக்குகிறாள். ஆனால், என் முன் நிற்கும் அப்பெண் இயற்கை அழகையே ஆபரணமாகப் பெற்றிருந்தாள்.

படுக்கையிலிருந்த நோயாளி, "டாக்டர்! இவள்தான் என் மகள் மீனு. இவளைப் பற்றிய கவலையே என்னை வாட்டுகிறது. தாங்கள்தான் என் குழந்தையை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டதும், என் உடம்பில் புதியதொரு சுறுசுறுப்பு ஏற்பட்டது. மறுநாள் வந்து அவரைப் பார்ப்பதாகச் சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

சூன்யமாக இருந்த என் வீட்டை லக்ஷ்மீகரமாக்கவும், எஞ்சிய என் காலத்தை அமைதியாகவும், ஆனந்தமாகவும் கழிக்கவும் மீனுவை இரண்டாந்தாரமாக மணப்பது என்ற முடிவிற்கு வந்தேன்.



"ராமு! இந்தக் குதிரைகளை ஏன் எப்பொழுதும் வண்டியோடு கட்டி வைத்திருக்கிறான்?"

"அவிழ்த்தால் குதிரை கீழே விழுந்து விடுமோ என்றுதான்!"

3

மறுநாள் நான் சென்றபோது, கிருஷ்ண சர்மா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவர் மகள் மீனுவே என்னை வரவேற்றாள்.

"அப்பாவுக்கு உடம்பு எப்படி யிருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே மீனுவின் முகத்தை நான் உற்று நோக்கினேன்.

நான் நினைத்ததற்கு மாறாக அவள் சிறிதும் சங்கோஜமின்றி, "அப்பா, நேற்று இரவு அமைதியாகத் தூங்கினார்; அவர் உபாதையும் சற்றுக் குறைவாகவே காணப்பட்டது" என்றாள்.

நான் கனிந்த குரலில், "மீனு! உன் அப்பா நேற்றுச் சொன்னவைகளையெல்லாம் கேட்டிருந்தாயல்லவா? அதில் உனக்கும் சம்மதந்தானே?" என்று கேட்டேன்.

மீனு தலை நிமிர்ந்து என்னை நோக்கினாள். அவள் கண்கள் கலங்கின. வெட்கம் நிறைந்த குரலில், "நான் சம்மதிக்காமல் வேறு என்ன செய்வது?" என்றாள்.

நான் திடுக்கிட்டேன். மெள்ள என் மனத்தைத் திடம் செய்து கொண்டு, "என்னை உனக்குப் பிடிக்கிறதல்லவா?" என்றேன் கெஞ்சும் குரலில்.

மீனுவின் அழகிய விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன. "என்ன, உங்களை எனக்குப் பிடிப்பதா?" என்றாள். அப்பொழுது அவள் குரல் கணீரென்று அவ்வறை முழுவதும் எதிரொலித்தது. அந்த எதிரொலி என்னைக் கேலி செய்வது போலிருந்தது.

என் தலை சுழன்றது. சிறிது நேரத்திற்குப் பிறகு நிதானத்தை யடைந்த நான், "அப்பா விழித்துக் கொண்டால் நான் வந்து போனதாகச் சொல்" என்று சொல்லி விட்டு, எழுந்து வேகமாக நடந்தேன்.

வீட்டை யடைந்ததும் சுவிச்சேரில் பொத்தென்று விழுந்தேன் — "என்னை அவளுக்குப் பிடிக்க வில்லையா? ஏன்?" — இந்தக் கேள்வி அடிக்கடி என் மூளையில் உதயமாயிற்று. வெகு நாட்களுக்குப் பின் அன்றுதான் என் முகத்தைக் கண்ணாடியில் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. எழுந்து எதிரே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்தேன். ஆ! இதென்ன? நரைத்த மயிரும், சுருக்கம் விழுந்த முகமும் என் முகம்தானா?

"சகுந்தலா! நான் செய்தது மன்னிக்க முடியாத தவறுதான்; ஆயினும், உன் அன்பினால் நீ என்னை மன்னிக்க முடியும்."

சகுந்தலையின் அகன்ற விழிகளில் நீர் துளித்தது. "அன்பினால் என் உள்ளத்தின் ஒவ்வொரு மூலையையும் நிறைத்து வைத்துக் கொண்டு அநேக தினங்கள் காத்திருந்தேன். அப்பொழுது கடமையில் மூழ்கியிருந்த உங்களுக்கு என் அன்பு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை! அளவற்ற ஏமாற்றத்தால் என் உள்ளம் இப்பொழுது முற்றிலும் அடைபட்டுப் போய்விட்டது. அதை மறுபடியும் திறக்கும் சக்தி கூட எனக்கு இப்பொழுது இல்லை!" என்றாள். அவள் குரல் கம்மிற்று.

அவள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் என் உள்ளத்தைப் பிளந்தன. துக்கத்தால் வாடித் துவண்டு நிற்கும் அவள் முகத்தை நிமிர்ந்து நோக்கவும் தைரியமற்றவனாய் ஸ்தம்பித்து நின்றேன்.

சில தினங்களுக்குப் பின் சகுந்தலையின் தந்தை அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

2

நாட்கள் சென்றன. அன்று வந்த தந்தியை அவசரம் அவசரமாக உடைத்துப் படித்தேன். 'ஆண் குழந்தை' என்ற வார்த்தை என்னை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியது.

ஆனால், இரண்டு தினங்களுக்குப் பிறகு வந்த தந்தி என்னைத் திகைக்கச் செய்தது. "சகுந்தலைக்கு உடம்பு அதிகம்; உடனே புறப்படவும்" என்ற வாக்கியம் என் சித்தத்தைக் கலக்கிற்று.


சகுந்தலையின் உயிர் என் வருகைக்காகவே ஊசலாடிக் கொண்டிருந்தது.

"இந்தச் சொற்ப தினங்களில் டாக்டரின் கடமை எத்தகையது என்பதை நான் நன்றாக உணர்ந்தேன்! ஆயினும் அக் கடமையில் உங்கள் உடல் நலத்தையும், குழந்தையையும் மறந்து விடாதீர்கள்" என்றாள் மரணப் படுக்கையிலிருந்த என் மனைவி.

அதுவே அவள் என்னுடன் பேசிய கடைசி வார்த்தைகள்.

'சகுந்தலையின் உயிருக்கு நாமே எமனாக இருந்தோம்' — இந்த எண்ணம் என்னைப் பைத்தியம் கொள்ளச் செய்தது. அவ் வெண்ணத்தை மறப்பதற்காக நான் வைத்தியத் தொழிலில் முன்னைவிடத் தீவிரமாக இறங்கினேன். கர்ப்ப ஸ்திரீகள் விஷயத்தில் என் திறமை முழுவதையும் உபயோகித்தேன். ஆயினும் என் மனைவியின் கடைசி வார்த்தைகளை மறந்தவனல்ல. அவள் ஞாபகார்த்தமாக விட்டுச் சென்ற குழந்தை ஸ்ரீதரனை என் உயிராக எண்ணினேன். அவன் வளர்ச்சிக்கு வேண்டிய சௌகரியங்கள் எதிலும் நான் அசிரத்தையாக இருந்ததில்லை.

இதுசென்ற ஒரு நாள் என் மனத்தில் சொல்ல முடியாத அலுப்பு ஏற்பட்டது. இருபது வருஷ



படுத்திக் கொள்ள வில்லை! — பார்க்கப் போனால், தாம்பத்ய வாழ்க்கையில் கணவன், மனைவியின் பரிபூர்ண அன்பைப் பெறுவது அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகு முன்னர் தான். அப்பால் அவன் அன்பை முக்கால் பாகத்திற்கு மேல் கவர்ந்து கொண்டு விடுகிறது அந்தச் சின்னஞ் சிறு குழவி. விலை மதிப்பற்ற அந் நாட்களை நான் உதாசீனம் செய்து விட்டேன். சென்று போன அந் நாட்களை இனி நினைப்பதில் பயனில்லை. ஆனால் சகுந்தலையின் நிலை என் மனத்தைப் பெரிதும் புண் படுத்திற்று. அவள் ஏக்கம் நிறைந்த வதனம் என் மனத்தை என்னவோ செய்தது. தன் அன்பைக் கொண்டு, "கணவனை மகிழ்விக்க வேண்டும்" என்ற மனக்கோட்டையுடன் வந்த அவளை முற்றிலும் ஏமாற்றமடையச் செய்தேன்.

எனக்குக் கனவுபோல் நினைவு வருகிறது. சகுந்தலை வந்த புதிதில் ஒரு நாள். அன்று



நான் நோயாளிகளைக் கவனித்துவிட்டு வீட்டிற்கு வரும் பொழுது மணி பதினொன்று. அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் அறைக்குள் வந்த சகுந்தலை மேஜைமேல் பாலை வைத்து விட்டுத் தயங்கிய வண்ணம் நின்றாள்.

"ஏன்? உனக்கு என்ன வேண்டும்?" என்றேன் கடுமையான குரலில்.

அவள் கனிந்த குரலில், "ரொம்ப நேரமாகிவிட்டதே, படுத்துக் கொள்ளக் கூடாதா? காலையில் இவைகளைப் பார்த்துக் கொண்டால் போகிறது" என்றாள்.

"ரொம்ப அழகுதான்! காலையில் எவ்வளவோ வேலையிருக்கே! இதைச் சொல்லத்தானா என் நேரத்தை வீணாக்கினாய்?" என்று சொல்லி விட்டு, மீண்டும் நான் என் வேலையைப் பார்க்கத் தொடங்கினேன்.

இதற்குமேல் சற்றுத் தயங்கி நின்றவள், ஒரு பெருமூச்சுடன், "நல்ல வேலை!" என்று முணுமுணுத்துக் கொண்டே போய் விட்டாள்.

அவள் சென்ற பின் என் மனம் தன் தவறை உணர்ந்தது. வேலை முடிந்த பிறகு, படுக்கையறைக்குள் நுழைந்த நான் மெல்ல "சகுந்தலா!" என்றேன். அவள் ஆச்சரியத்துடன் என்னை நிமிர்ந்து நோக்கினாள். "உங்கள் வேலை என்ன வாயிற்று?" என்ற கேள்வி அவள் பார்வையில் தொனித்தது. நான் அவளை நெருங்கி, "சகுந்தலா! ஏன் என்னிடத்தில் இதை முன்னமேயே சொல்லவில்லை? இந்தச் சமயம் நீ இவ்வளவு பலஹீனமாக இருப்பது கூடாது. நாளை முதல் உனக்கு நல்ல மருந்துகள் தருகிறேன்" என்றேன் அன்பு கனிந்த குரலில்.

சகுந்தலை தன் அகன்ற விழிகளை உயர்த்தி என்னைக் கூர்ந்து நோக்கினாள். ஆச்சரியம் நிரம்பிய அவ்விழிகள் ஆயிரக் கணக்கான கேள்விகளைப் பொழிந்தன. நான் சட்டென அவள் கையைப் பற்றி, "சகுந்தலா! என்னை மன்னித்துவிடு. என் கடமையில் நீ என் மனைவி என்பதைக் கூட நான் மறந்துவிட்டேன்" என்றேன்.

"போகட்டும்; இப்பொழுதாவது நினைவு வந்ததே!" என்று சொல்லி அவள் லேசாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஏனோ ஜீவனில்லை!

சபலச் சித்தம்

கிரிஜா

பளபளவென்று தேய்த்த குத்து விளக்கை ஏற்றிக் கடவுளின் சன்னிதியில் வைத்த மீனு, சட்டென என்னை நமஸ்கரித்தாள். என் ஆசியைப் பெற்ற பின்னரே அவள் கடவுளை நமஸ்கரித்தாள். அப்பொழுது அவள் அழகிய களை சொட்டும் முகத்தில் ஆனந்தம் பொங்கிக் கொண்டிருந்தது. மகிழ்ச்சியே உருவாய்த் திகழும் அப் பெண் மலரை என் சபல சித்தத்தால் ஒரு சமயம் நான் கருக்கிவிட எண்ணினேனே! என்ன மடமை! — இதை நினைக்கும்போது என் பால்யம் முதல் அன்று வரை நடந்த சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக என் நினைவுக்கு வருகின்றன.

* * *


ஐந்து வருஷ காலம் வைத்தியக் கல்லூரியை முற்றுகையிட்டு எம். பி. பி. எஸ். என்ற பட்டத்தைப் பெற்று வெளியில் வந்த என் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கிக் கொண்டிருந்தது. நான் அப் பட்டத்தைப் பெற்றுவிட்டது பெரிதல்ல; அப் பட்டத்திற்குரிய கடமையைச் செய்வதில் வெற்றி பெறவேண்டும். "தன் சுகத்தைத் தியாகம் செய்பவனே டாக்டர். இரவு, பகல் என்று பாராமல் உழைக்க வேண்டும்" என்றெல்லாம் மனத்துள் திட்டம் வகுத்துக் கொண்டேன். சில மாதங்களில் சர்க்கார் அனுமதி பெற்றுத் தொழிலை ஆரம்பித்தேன். என் மனத்துள் எண்ணியதைச் செய்கையில் செய்தேன். சாப்பிடுவதற்கும், தூங்குவதற்கும் சில மணி அவகாசமே எடுத்துக்கொண்டேன். பல மணி நேரத்தை என் தொழிலில் செலவு செய்தேன். 'கடமை' 'கடமை' — இதுவே நான் ஜபிக்கும் மந்திரமாக இருந்தது.

காலம் மெள்ள நகர்ந்து சென்றது. ஒரு நாள் வைத்திய சம்பந்தமான ஒரு விஷயத்தைச் சிந்தனை செய்துகொண்டே மாடி வராந்தாவில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தேன். தற்செயலாக என் பார்வை ஜன்னலை நோக்கிற்று. அச்சமயம் ஸ்நானம் செய்து வீட்டுக் கண்ணாடியின் எதிரே தலை மயிரை ஆற்றிக்கொண்டு நின்ற என் மனைவி சகுந்தலையின் மீது என் பார்வை சென்றது. வெளிச்சமான முற்றத்தில் நிற்கும் அவள் ஓர் தெய்வ கன்னிகையைப் போல் இருந்தாள். அவள் உடல்தான் என்ன வெளுப்பு! அவள் உடலில் ஓடும் பச்சை நரம்புகள் அவ் வெளுப்பை இன்னும் அதிகமாக்கின. அவள் முகத்தை உற்று நோக்கிய நான் திகைத்துவிட்டேன். வெகு நாட்களுக்குப் பின் அன்றே நான் அவள் அழகைக் கூர்ந்து கவனிக்க முடிந்தது. ஆம், மகத்தான என் கடமையில் மனைவியின் அழகைப் பார்க்கக் கூட எனக்கு அவகாசமேது!

இரவுச் சாப்பாட்டிற்காக மாடியினின்றும் கீழே இறங்கினேன். அச் சமயம் என் தாயார் இன்னொரு ஸ்திரீயுடன் பேசிய வார்த்தைகள் என்னைத் திகைப்படையச் செய்தன.

"என் மாமி, உங்கள் நாட்டுப் பெண் எப்பொழுது பிறந்தகம் போகிறாள்?"

"இதுதானே ஆறாவது மாதம்? ஏழாம் மாத முதலில் நாள் பார்த்து வந்து அழைத்துப் போவார்கள். என்னவோ அம்மா எனக்கு ரொம்பக் கவலையாக இருக்கு; அவள் பெற்றுப் பிழைத்து வரவேண்டும்! ரொம்பத் தள்ளாமையா யிருக்கிறாள். அவனானால் 'வேலை, வேலை' என்று போய் விடுகிறான்; நானென்ன தள்ளாத கிழம்!"



என் மனைவி புக்ககம் வந்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. இந்த இரண்டு வருஷ காலத்தில் எனக்கு அவளுடன் சல்லாபமாய்ப் பேசிப் பழக அவகாசமே ஏற்படவில்லை—இல்லை; நான் அவகாசம் ஏற்


T.S.R.&Co.
Araikeeraividhai
Thailam
PERFUMERS, KUMBAKONAM.

னுகைப் பெயரைச் சொல்லித் தனக்கு நியாயப்படி அடிமையானான் என்று சபையோருக்கு வெகு ஆரவாரத்துடன் பிரகடனம் செய்தான்.

அவ்வாறு சபையோரைக் கலங்கச் செய்த பின், சகுனி யுதிஷ்டிரனைப் பார்த்து, "உன்னிடம் இழக்காத பொருள் ஒன்று இன்னும் இருக்கிறது. அதைப் பந்தயம் வைத்து மறுபடியும் உன்னை நீ மீட்டுக் கொள்ளலாம். பாஞ்சாலியைப் பணயமாக வைத்து ஏன் ஆடலாகாது?" என்றான். "அவளையும் வைத்தேன்" என்று யுதிஷ்டிரன் சொல்லி விட்டான். சொல்லி விட்டுத் தன்னையும் அறியாமல் கதறினான்.

சபையிலிருந்து விருத்தர் இருந்த பக்கத்தில் சத்தம் கிளம்பிற்று. "சீ! சீ!" என்று எல்லாப் பக்கத்திலும் பெரும் கலக்கம் உண்டாயிற்று. சிலர் கண்ணீர் விட்டார்கள். பலருடைய உடல் வேர்வை கொட்டிற்று.

துரியோதனனும் தம்பிகளும் கர்ணனும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். திருதராஷ்டிரன் மகன் யுயுத்ஸு என்பவன் மட்டும் துக்கம் தாங்காமல் தலைகுனிந்து பெருமூச்சு விட்டான். சகுனியும் காய்களை எறிந்து, "ஜயித்தேன், பாருங்கள்!" என்றான்.

உடனே துரியோதனன் விதுரனைப் பார்த்து, "வாரும்! பாண்டவர்களுக்குப் பிரியமான திரௌபதியை அழைத்து வாரும். எங்கள் வீட்டைக் குப்பை கூட்டிச் சுத்தப்படுத்த வேண்டும். சீக்கிரம் வரட்டும்" என்றான்.

"மூடனே! யமன் வீட்டுக்குப் போகாதே. கயிற்றினால் கட்டப்பட்டுப் படுகுழியில் தொங்குகிறாய். அது தெரியாமல் மூடனைப்போல் பேசுகிறாய். உன் பதவிக்குத் தகாத பேச்சுகள் உன் வாயிலிருந்து வெளியாயின" என்று விதுரன் துரியோதனனைக் கண்டித்து விட்டுச் சபையோரைப் பார்த்து, "தர்மபுத்திரன் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த பின் பாஞ்சாலியைப் பந்தயம் வைக்க அவனுக்கு உரிமை இல்லை. கௌரவர்களின் முடிவு நெருங்கி விட்டது. நண்பர்களுடைய சொற்களை மதிக்காமல் திருதராஷ்டிர புத்திரர்கள் நரகத்துக்கு வழி தேடிக் கொள்ளுகிறார்கள்" என்றான்.

துரியோதனன் விதுரன் சொன்னதைக் கேட்டுச் சினங் கொண்டு தன் தேரோட்டி பிரதிகாமியை அழைத்து, "இந்த விதுரன் எங்களிடம் அசூயை கொண்டவர். பாண்டவர்களைக் கண்டு பயந்தவர். உனக்கு அவ்வாறான பயமில்லையே? நீ போய்த் திரௌபதியை உடனே கூட்டி வா!" என்றான்.

ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

முதலில் ரத்தினங்கள் பந்தயம் வைக்கப்பட்டன. பிறகு பொன்னும், பொக்கிஷங்களும் வைக்கப்பட்டன. பிறகு, தேர்களும் குதிரைகளும் வைக்கப்பட்டன. இவற்றை இழந்தபின் யுதிஷ்டிரன் தன் வேலைக்காரர்களையும் பந்தயம் வைத்து அவர்களையும் இழந்தான். பிறகு தனக்குள்ள யானைகளையும், சேனைகளையும் பந்தயமாக வைத்து அவற்றையும் இழந்தான். சகுனியின் பாய்ச்சிகை ஒவ்வொரு வீச்சிலும் அவன் சொன்னபடி நடந்துகொண்டது.

பசுக்கள், ஆடுகள், நகரங்கள், தேசங்கள், பிரஜைகள் எல்லாவற்றையும் யுதிஷ்டிரன் இழந்தான். ஆட்டத்தை நிறுத்தவில்லை. தம்பிகளின் உடல் மேலிருந்த ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் இழந்தான். "வேறு ஏதாவது உண்டா?" என்றான் சகுனி.

"இதோ அழகிய சியாம வர்ணமான நகுலன் இருக்கிறான். இவனும் எனக்கு ஒரு பொருள் ஆவான். அவனைப் பந்தயம் வைக்கிறேன்" என்றான் யுதிஷ்டிரன்.

"அப்படியா? இதோ, உன் பிரியமான ராஜகுமாரன் எங்கள் வசமானான்" என்று சொல்லிப் பாய்ச்சிகை வீசினான். சொல்லியபடியே ஜயித்தான் சகுனி.

"இதோ, என் தம்பி சகதேவன். கல்விகளின் கரையைக் கண்டு புகழ் பெற்றவன். இவனைப் பந்தயமாக வைப்பது தவறு. ஆயினும் வைக்கிறேன். ஆடுவாயாக!" என்றான் யுதிஷ்டிரன்.

"ஆடினேன், ஜயித்தேன்" என்று சொல்லிக்கொண்டே ஆடினான் சகுனி. தம்பி சகதேவனையும் இழந்தான் தருமபுத்திரன்.

ஒருவேளை இத்துடன் யுதிஷ்டிரன் ஆட்டத்தை நிறுத்தி விடுவானோ என்று அந்தத் துராத்மா சகுனி, "உன் மதிப்பில் பீமனும் அருச்சுனனும் மாத்ரி புத்திரர்களைவிட மிக அதிகம் போலும்! அவர்களை வைத்து ஆடமாட்டாய்!" என்று குத்திச் சொன்னான்.

"மூடனே! எங்களைப் பிரித்துவிடப் பார்க்கிறாயா? அதர்மத்தில் வாழ்பவனாகிய உனக்கு எங்களுக்குள் இருக்கும் தருமநிலை எங்கே தெரியப்போகிறது?" என்று கூறிய யுதிஷ்டிரன், "யுத்தத்தில் எங்களைக் கரை சேர்க்கும் கப்பலைப் போன்றவன், ஒப்பற்ற பராக்கிரமம் படைத்தவன், எப்போதும் வெற்றிக்கு ஸ்தானமானவன், இந்த அருச்சுனனைப் பந்தயமாக வைத்தேன், ஆடு!" என்றான்.


"இதோ ஆடுகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சகுனி ஆடினான். யுதிஷ்டிரன் அருச்சுனனையும் இழந்தான்.


யுதிஷ்டிரன் கண்களில் நீர் கலங்க, "அரசனே! யுத்தத்தில் எங்களுக்குத் தலைவன், அசுரர்களுக்குப் பயத்தைத் தரும் வச்சிராயுதம் எடுத்த இந்திரனைப் போன்றவன், அவமதிப்பை ஒருபோதும் பொறுத்தவன், உலகத்தில் இவனுக்குச் சமமான தேகவன்மை படைத்தவன் எவனுமில்லை, இந்த பீமனைப் பந்தயமாக வைக்கிறேன்" என்றான். மறுபடியும் யுதிஷ்டிரன் தோற்றான்.

"இன்னும் ஏதாவது பந்தயம் வைக்கப் பொருள் உண்டோ?" என்றான் துராத்மா சகுனி.

"ஆம், இருக்கிறது. இதோ, நீ ஜயித்தாயானால் நானும் உனக்கு அடிமையாக இருப்பேன்" என்றான் தருமபுத்திரன்.

"இதோ, ஜயித்தேன்!" என்று சகுனி சொல்லிக்கொண்டே ஆடி ஜயித்தும் விட்டான். அதன் பிறகு சகுனி பாண்டு புத்திரர்கள் ஐவரையும் ஒவ்வொருவ





பெற்ற முனிவர்கள் பலரும் சூதாட்டம் கூடாது, அது மோசத்தோடு சேர்ந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். யுத்தத்தில் ஜயிப்பதே க்ஷத்திரியர்களுக்கு யோக்கியமான முறை என்று சொல்லியிருக்கிறார்கள். இது உனக்குத் தெரியாதது அல்ல!" என்றான் யுதிஷ்டிரன்.

ஒரு பக்கம் பழக்கத்தினால் தூண்டப்பட்டு யுதிஷ்டிரன் ஆடவும் ஆசைப்பட்டான்; மற்றொரு புறம் அது கூடாது என்கிற விவேகமும் அவனைத் தடுத்துக் கொண்டுதான் இருந்தது. சகுனியுடன் வாதம் செய்யும் சாக்காகத் தன் உள்ளத்தில் நடைபெற்ற மனக்குழப்பத்தை வெளிப்படுத்திக் கொண்டான். கூர்மையான மூளையைப் படைத்த சகுனி இதை உணர்ந்து, மறுபடியும் சொன்னான்:

"மோசமாவது என்ன, யுத்தமாவது என்ன? வேதம் படித்தவர்களில் ஒருவரோடு ஒருவர் போட்டி போடவில்லையா? படித்தவன் படிக்காதவனை ஜயிக்கிறான். அதில் மோசம் என்று யாராவது சொல்லுகிறார்களா? ஆயுதத் தேர்ச்சி பெற்றவன் தேர்ச்சி பெறாதவனை யுத்தத்தில் தோற்கடிக்கிறான். இதுமட்டும் தர்மமா? தேக பலமுள்ளவன் தேகபலம் இல்லாதவனை ஜயிக்கிறான்; இதுவும் மோசம்தான். எல்லாச் செய்கைகளிலும் தெரிந்தவன் தெரியாதவனைத் தோற்கடிக்கிறான். இதில் மோசம் என்ன, தர்மம் என்ன? பாய்ச்சிகை ஆட்டத்திலும் ஆடத் தெரிந்தவன் ஜயிக்கிறான்; தெரியாதவன் தோல்வி யடைகிறான். இதை மோசம் என்று எவ்வாறு சொல்லலாம்? உனக்குப் பயமாயிருந்தால் ஆடவேண்டாம். ஆனால் தர்மத்தின் பேரில் சாக்குச் சொல்ல வேண்டாம்" என்றான்.

"அரசனே! அழைத்த பிறகு இல்லை என்று சொல்லமாட்டேன். இது என் விரதம். யார் என்னுடன் ஆட வருகிறார்கள்?" என்றான் யுதிஷ்டிரன்.


துரியோதனன், "பணயம் வைக்க நான் தனமும் ரத்தினமும் தருவேன். எனக்காக என் மாமா சகுனி ஆடுவார்" என்றான்.

யுதிஷ்டிரன் துரியோதனனை ஆட்டத்தில் தோற்கடிக்கலாம் என்று எண்ணினான். சகுனியின் சாமர்த்தியத்தை அறிந்தவனாதலால் தயங்கினான்.

"ஒருவனுக்காக மற்றொருவன் ஆடுவது சாதாரண முறையல்ல என்பது என் அபிப்பிராயம்" என்றான் யுதிஷ்டிரன். "ஓ! வேறு சாக்கு எடுத்தாயோ?" என்று சகுனி ஏளனம் செய்தான்.

"சரி, ஆடுகிறேன்" என்றான் யுதிஷ்டிரன்.

மண்டபம் நிறையக் கூட்டம். மண்டபத்தில் துரோணரும், கிருபரும், பீஷ்மரும், விதுரனும், திருதராஷ்டிரனும் இருந்தார்கள். கலகத்துக்குக் காரணமான சூதாட்டம் நடைபெறுகிறது என்று தெரிந்திருந்தும் தடுக்க முடியாமல் அதிருப்தியோடு உட்கார்ந்திருந்தார்கள். சபையில் கூடியிருந்த ராஜகுமாரர்கள் மிக்க உற்சாகத்தோடு





வியாசர் விருந்து

சக்ரவர்த்தி-ராஜகோபாலாச்சாரியார்

பந்தயம்

"ஏன் சந்தோஷமற்ற முகத்தோடு வருகிறீர்? ஹஸ்தினாபுரத்தில் எல்லாரும் சுகமா? அரசனும் ராஜகுமாரர்களும் நன்றாயிருக்கிறார்களா? நகரத்துப் பிரஜைகளின் நடத்தை சரியாயிருக்கிறதா?" என்று விதுரனைக் கண்டதும் கவலையோடு யுதிஷ்டிரன் கேட்டான்.

"ஹஸ்தினாபுரத்தில் அனைவரும் சுகம். உங்கள் சுகத்தை விசாரித்துவிட்டுப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மண்டபத்தைப் பார்த்துவிட்டுப் போக உங்களைத் திருதராஷ்டிர ராஜன் சார்பாக அழைக்க வந்தேன். உங்களுடைய மண்டபத்திற்குச் சமானமான அழகிய மண்டபம் அங்கே கட்டப்பட்டிருக்கிறது. சகோதரர்களுடன் நீயும் வந்து பார்த்துப் பாய்ச்சிகை ஆடிவிட்டுத் திரும்பிப் போக வேண்டும் என்பது அரசன் வேண்டுகோள்" என்று விதுரன் தான் வந்த விஷயத்தை முறைப்படி சொன்னான்.

"சூதாட்டம் க்ஷத்திரியர்களுக்குள் கலகம் விளைவிக்கும். புத்திசாலிகள் அதை விரும்பமாட்டார்கள். நாங்கள் உம்முடைய சொல்லைப் பின்பற்றி நடப்பவர்கள். உம்முடைய யோசனை என்ன?" என்று யுதிஷ்டிரன் விதுரனைக் கேட்டான்.


"காய் விளையாட்டு அனர்த்தத்திற்கு மூலம் என்பது அனைவரும் அறிந்த விஷயம். நான் இந்த ஏற்பாட்டைத் தடுக்கத்தான் முயற்சி செய்தேன். ஆனாலும் அரசன் உங்களை அழைக்கச் சொன்னான்; அதனால் வந்தேன். உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்" என்றான் விதுரன்.

இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டும், யுதிஷ்டிரன் சகோதரர்களையும் பரிவாரங்களையும் கூட்டிக் கொண்டு ஹஸ்தினாபுரம் சென்றான்.

காம விவகாரம், காம மயக்கம், சூதாட்டம், கட்குடிப் பழக்கம் இவை மனிதனைத் தெரிந்தே ஏமாற்றி இழுத்துக் குழியில் தள்ளுகின்றன. யுதிஷ்டிரனுக்குச் சூதாட்டத்தில் மோகம் என்பது பாரதத்தில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது, பாய்ச்சிகை ஆட்டத்திற்கும் பந்தயங்களுக்கும் விடும் அழைப்பை மறுதலிப்பது கூடாது என்கிற அரசகுலப் பண்பாடு. மூன்றாவது, குலநாசத்திற்குக் காரணமாக கலகம் வரும் என்று வியாசர் சொல்லியிருந்தபடியிருந்தும் திருதராஷ்டிரன் பேச்சை அவமதித்துக் கோபத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது என்கிற எண்ணம். இவை எல்லாம் காரணமாகப் புத்திசாலியான யுதிஷ்டிரன் அழைப்பை ஒப்புக் கொண்டு ஹஸ்தினாபுரத்துக்குப் போனான். நகரத்துக்குச் சமீபத்தில் தனக்கும் தன் பரிவாரத்திற்கும் கட்டப் பட்டிருந்த அழகிய விடுதியில் தங்கிச் சிரம பரிகாரம் செய்த பின் அடுத்த நாள் காலைக் கடமைகளை முடித்துவிட்டுச் சபா மண்டபம் சென்றான்.

ஆசனப் பிரசங்கங்கள் முடிந்த பின் சகுனி பேசினான். "யுதிஷ்டிரனே! ஆட்டத்திற்குத் துணி விரிக்கப்பட்டிருக்கிறது. வா, ஆடலாம்" என்றான்.

"ராஜனே! சூதாட்டம் நல்ல விஷயமல்ல. பந்தய ஆட்டங்களில் ஜயிப்பது பராக்கிரமத்தோடு சேராது. அஸிதரும் தேவலரும் இன்னும் வைதிக விஷயங்களில் அனுபவம்



இருமல்
இதைப் போல் அபாயகரமானது
இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும்
உயர்ந்த மருந்து
ஸிரோலின்
'ரோச்'



கே.பி.ஆர். ஜுவல்லரி
பெரியகடை வீதி
கோயமுத்தூர்.
KBR
பொன் கலைக்குப் புதுக் கோயில்!
ஆனந்தமளிக்கும் அற்புத நகைகளுக்கு
இங்கு விஜயம் செய்யுங்கள்!
Alvar

சொன்னார். ஐந்து மலைக்கோயில்களும் ஆறு மாதத்தில் முடிய வேண்டும் என்றார். உடனே ஒரு மாதத்திற்குள், 'கோயில் வேலையை நிறுத்து!' என்று கட்டளையிட்டார். ஆஹா! சக்கரவர்த்தி முன்போல் இல்லை, தம்பி! ரொம்பவும் மாறிப் போய்விட்டார்!" என்றார் ஆயனர்.

"சக்கரவர்த்தி அப்படியொன்றும் மாறவில்லை, சித்தப்பா! ஆனால், யுத்தம் காரணமாகச் சில காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது..."

"யுத்தம்! பாழும் யுத்தம்! இப்போது நடக்கிற யுத்தம் போதாதென்று பழைய பாரத யுத்தத்தை வேறே கட்டிக்கொண்டு அழ வேண்டுமாம். ஒவ்வொரு ஊரிலும் பாரத மண்டபங்கள் கட்ட வேண்டுமாம். நான் சொல்லட்டுமா, தம்பி! உண்மையில் மாமல்லபுரத்துச் சிற்ப வேலையைச் சக்கரவர்த்தி நிறுத்தியது பாரத மண்டபம் கட்டுவதற்காக அல்ல. சிற்பிகளுக்கும் சிற்றாள்களுக்கும் படியாகக் கொடுத்து வந்த அரிசி, பருப்பு மிச்சமாகட்டும் என்றுதான்! துறைமுகப் பண்டக சாலைகளில் இருந்த அவ்வளவு தானியங்களையும் காஞ்சிக்குக் கொண்டுபோய் விட்டார்களாம்! உனக்குத் தெரியுமா, தம்பி!"

"தெரியும்; தெரியும். ஆனால், யுத்தம் நடத்துவதற்கு இவையெல்லாம் அவசியமான காரியங்கள், சித்தப்பா! காஞ்சிக் கோட்டை ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ கூட முற்றுகைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். வாதாபியின் சமுத்திரம் போன்ற சைனியம் திரண்டு வருவதை நீங்கள் மட்டும் பார்த்திருந்தால்..."



"ஆஹா! வாதாபி சைனியம் வருகிறது. வருகிறது என்று எட்டு மாதமாய்த்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்......"

"ஆமாம்; ஆனால் இன்னும் ஏன் இங்கே வந்து சேரவில்லை, தெரியுமா? ஆஹா! மகேந்திர பல்லவர் மட்டும் அப்போது போர்க்களத்துக்குப் போயிராவிட்டால், இதற்குள் காஞ்சிமா நகர் இருந்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும்! வாதாபி சைனியத்தில் பத்தில் ஒரு பங்குகூட இராது பல்லவ சைன்யம், சித்தப்பா! வாதாபி சைனியத்தில் வரிசை வரிசையாக, மலை மலையாக,

நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் நின்ற ஆயிரக்கணக்கான போர் யானைகளை என் கண்ணாலேயே நான் பார்த்தேன். பல்லவ சைனியத்திலோ மொத்தம் நூறு யானைகளுக்குமேல் கிடையாது. அப்படியிருந்தும், எட்டு மாத காலம் வாதாபி சைனியத்தை வட பெண்ணைக் கரையிலேயே நிறுத்திவைத்திருந்தோம். இது எதனால் சாத்தியமாயிற்று, தெரியுமா? மகேந்திர பல்லவரின் அறிவின் பலம் ஒன்றைக் கொண்டுதான், சித்தப்பா! பாரத யுத்தத்தில் பஞ்ச பாண்டவர்களின் வெற்றி ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அறிவு பலத்தினாலும் அர்ச்சுனனுடைய வில்லின் வீரத்தினாலும் சாத்தியமாயிற்று. இந்த நாளில் கிருஷ்ண பகவானும் அர்ச்சுனனும் ஒரே உடம்பில் மகேந்திர பல்லவராக அவதரித்திருக்கிறார்கள், சித்தப்பா!"



"தம்பி! சக்கரவர்த்தியிடம் உன்னுடைய பக்தி அபரிமிதமாயிருக்கிறது. மிகவும் சந்தோஷம். எனக்குச் சக்கரவர்த்தி என்ன சொல்லி அனுப்பினார், அதைச் சொல்லு!" என்று ஆயனர் கேட்க, பரஞ்சோதி கூறினான் :—

"புலிகேசியின் படைகள் வட பெண்ணையைக் கடந்து விட்டன, சித்தப்பா! வேங்கியை வென்ற புலிகேசியின் சகோதரன் விஷ்ணு வர்த்தனன் படைகளும் சேர்ந்து கொண்டிருக்கின்றன. இனி அவற்றை வெகு காலம் தடுத்து நிறுத்துவது அசாத்தியம்! ஆகையினால்தான் காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தம் செய்ய என்னைச் சக்கரவர்த்தி அனுப்பி வைத்தார். ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ, முற்றுகை நீடித்திருக்கலாம். ஆகையால், கோட்டைக்குள்ளிருந்து அநாவசியமான ஜனங்களை யெல்லாம் வெளியேற்றப் போகிறோம். கோட்டையைச் சுற்றிலும் உள்ள கிராமங்களிலிருந்தும் ஜனங்கள் வெளியேறும்படி இருக்கும். இது சம்பந்தமாகத்தான் உடனே தங்களைப் பார்க்கும்படியும் தங்களுடைய விருப்பத்தைத் தெரிந்து கொள்ளும்படியும் சக்கரவர்த்தி எனக்குக் கட்டளை யிட்டார். எதிரி சைனியம் வரும் சமயம் தாங்கள் இங்கே இருப்பது உசிதமாயிராது..."

"ஆஹா! இந்த வீட்டிலேயிருந்தும் சக்கரவர்த்தி என்னைத் துரத்திவிடப் பார்க்கிறாரா? எந்த ராஜா எந்தப் பட்டணத்துக்கு வந்தாலென்ன, போனாலென்ன, எனக்கு என்ன வந்தது? இந்தக் காட்டுக்குள்ளே வந்து என்னை யார் எட்டிப் பார்க்கப் போகிறார்கள்? பார்த்தால்தான் இங்கிருந்து என்னத்தை எடுத்துக் கொண்டு போகப் போகிறார்கள்? இந்தக் கற்சிலைகளையும் கல்லுளிகளையும் வேணுமானால் கொண்டு போகட்டும்; சுவரிலே எழுதிய சித்திரங்களை வேணுமானாலும் சுரண்டிக் கொண்டு போகட்டும்!..."

"சித்தப்பா! தாங்கள் ஏதோ கோபத்தில் பேசுகிறீர்கள்! எத்தனையோ காலமாகச் சிறந்தோங்கி வந்த பல்லவ ராஜ்யத்துக்கு எப்பேர்ப்பட்ட ஆபத்து வந்திருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்கள்......"

"சக்கரவர்த்தி எங்களுக்கு என்ன தான் கட்டளை யிடுகிறார், பரஞ்சோதி?"

"தாங்களும் தங்கள் குமாரியும் காஞ்சிக் கோட்டைக்குள்ளேயே வந்து இருந்தாலும் இருக்கலாம்; அல்லது சோழ நாட்டுக்குப் போய்த் தங்கள் சிநேகிதர் நமசிவாய வைத்தியருடன் சில காலம் தங்கியிருந்தாலும் இருக்கலாம். திருவெண்காட்டுக்குப் போவதாயிருந்தால், தக்க பாதுகாப்புடன் தங்களை அனுப்பி வைக்கும்படி எனக்குக் கட்டளை யிட்டிருக்கிறார்... தங்கள் விருப்பம் எதுவோ, அப்படிச் செய்யலாம்" என்றான் பரஞ்சோதி.

"சிவகாமி! நீ என்ன அம்மா சொல்லுகிறாய்?" என்று கேட்டார் ஆயனர் திரும்பிப் பார்த்து.

ஆனால், சிவகாமி நின்ற இடத்தில் அவளைக் காணவில்லை.

போயிருக்கக் கூடாதா என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது."

"ஏன் அவ்வளவு ஆர்வம், சித்தப்பா?"

"வாதாபி சக்கரவர்த்தி இளம் பிராயத்தில் காட்டிலே ஒளிந்திருந்த காலத்தில் அஜந்தா மலையில் இரண்டு வருஷம் இருந்ததுண்டாம், தம்பி! ஆகையால் அவனுக்கு அஜந்தா வர்ணத்தின் இரகசியம் தெரிந்திருக்குமல்லவா?"

வீரன் வஜ்ரபாஹு கலைகளை இகழ்ந்து கூறியதெல்லாம் பரஞ்சோதிக்கு அப்போது நினைவு வந்தது. அது எவ்வளவு உண்மை? ஆயனரின் கலை வெறி அவரை எப்படிப் பைத்தியமாக அடித்திருக்கிறது? புலிகேசி பகை அரசன் என்பதைக் கூட மறந்து அவனைப் பார்க்கும் ஆவலை உண்டாக்கியிருக்கிறதல்லவா?

"சித்தப்பா! நான் முக்கியமாக எதற்காக வந்தேனோ, அந்தக் காரியத்தை இன்னும் சொல்லவில்லை. சக்கரவர்த்தி தங்களிடம் ஒரு செய்தி தெரிவிக்கச் சொல்லி எனக்கு ஆக்ஞாபித்தார்......"

"எந்தச் சக்கரவர்த்தி?" என்றார் ஆயனர்.

"எந்தச் சக்கரவர்த்தியா? மகேந்திர பல்லவர்தான்!"

"ஆ! மகேந்திர பல்லவர்! – தம்பி! மகேந்திர பல்லவரைப் பற்றி நான் என்னவெல்லாமோ நினைத்திருந்தேன். ஒரு சமயம் இந்தப் பல்லவ ராஜ்யத்திலுள்ள சிற்பிகள் எல்லாம் சேர்ந்து சபை கூடி மகேந்திர பல்லவருக்கு 'விசித்திர சித்தர்' என்று பட்டம் கொடுத்தோம். அதைக் காட்டிலும் 'சபல சித்தர்' என்று அவருக்குப் பெயர் கொடுத்திருக்கலாம்."

"ஏன் இப்படிச் சொல்கிறீர்கள், சித்தப்பா?"

"பார், தம்பி! இங்கிருந்து என்னை மாமல்லபுரத்துக்குப் போகச்



அத்தியாயம் 6

கலை வெறி

ஆயனர் வீட்டுச் சிற்ப மண்டபமானது கிட்டத்தட்டத் தான் எட்டு மாதத்துக்கு முன்பு பார்த்தது போலவே இருப்பதையும், ஆயனர் அப்போது அரைகுறையாக வேலைசெய்து விட்டிருந்த சிலைகள் இன்னும் அரைகுறையாகவே இருப்பதையும் பரஞ்சோதி பார்த்தபோது, அவனுடைய மனதில் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு சோர்வு உண்டாயிற்று.

"இந்த யுத்தம் என்னத்திற்காக வந்தது?" என்ற எண்ணம் அந்த வீர வாலிபனுடைய உள்ளத்திலும் அச்சமயம் உண்டாயிற்று.

தாழ்வாரத்தின் முனையில் ஆயனரும் பரஞ்சோதியும் உட்கார்ந்தார்கள்.

சிவகாமி முன்னொரு சமயம் நின்றது போலவே இப்போதும் அருகிலிருந்த தூணைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

இருவரும் ஒன்றும் பேசாமல் சும்மா இருப்பதைப் பார்த்த சிவகாமி, "உங்களுக்குத் தெரியுமா, அப்பா? இவர்தான் இப்போது காஞ்சிக் கோட்டையின் தளபதி!" என்றாள்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். தம்பியின் முகக் களையைப் பார்த்து, இவன் பெரிய பதவிக்கு வருவான் என்று அப்பொழுதே நாகநந்தியடிகள் சொன்னார்........." என்று கூறிய ஆயனர், சட்டென்று நினைத்துக் கொண்டு, "தம்பி! ஓலையை என்ன செய்தாய்? தப்பித் தவறி அது......" என்று தயங்கி நிறுத்தினார்.

"சித்தப்பா! அது விஷயத்திலே தான் ஏமாந்து போய்விட்டேன் ..."

"ஏமாந்து போய் விட்டாயா? அப்படியானால் ......"

"ஆமாம்; தாங்களும் நாகநந்தியும் எவ்வளவோ எச்சரித்திருந்தும் பயனில்லாமல் போய் விட்டது. ஓலை..."

"அடாடா! சக்கரவர்த்தியிடம்..."

"ஆமாம், ஐயா! ஓலை சக்கரவர்த்தியிடம் சிக்கி விட்டது."

"ஆஹா!" என்றார் ஆயனர்.

பிறகு, "மகேந்திர பல்லவர் அதைப் பற்றி என்ன சொன்னார்?" என்று கேட்டார்.

"மகேந்திர பல்லவரா? நான் பல்லவ சக்கரவர்த்தியைச் சொல்லவில்லையே! வாதாபி சக்கரவர்த்தியையல்லவா சொன்னேன்? வழியில் என்னை வாதாபி வீரர்கள் பிடித்துக் கொண்டுபோய்ப் புலிகேசி சக்கரவர்த்தியின் முன்னால் நிறுத்தினார்கள். ஓலையையும் அவர்கள் தான் பலாத்காரமாய்க் கைப்பற்றி வாதாபி சக்கரவர்த்தியிடம் கொடுத்தார்கள் ......"

ஆயனர் வாயிலிருந்து மீண்டும், "ஆஹா!" என்னும் வியப்பொலி எழுந்தது. அதே சமயத்தில் எங்கேயோ, யாரோ, பெருமூச்சு விடுவதுபோல் சத்தமும் கேட்டது.

பாம்பின் சீறல் போன்ற அந்தச் சத்தத்தைப் பரஞ்சோதி கவனித்தான். ஆனால், ஆயனராவது சிவகாமியாவது கவனிக்கவில்லை.

சிவகாமி அப்போது வாசற் பக்கத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அங்கே, உள் வாசற்படியண்டை நின்ற கண்ணபிரான் சிவகாமியை நோக்கி ஏதோ சமிக்ஞை செய்துகொண்டிருந்தான்.

சற்றுப் பொறுத்து ஆயனர், "தம்பி! உண்மையாகவே நீ வாதாபி புலிகேசி சக்கரவர்த்தியைப் பார்த்தாயா?" என்று வியப்புடன் கேட்டார்.

"ஆம், ஐயா! அதோ, அந்தப் புத்த விக்கிரகம் உள்ள தூரத்தில், வாதாபி சக்கரவர்த்தி இருந்தார்; நேருக்கு நேர் அவரை நான் பார்த்தேன்."

"சக்கரவர்த்தி என்ன சொன்னார்?"

"யாருக்குத் தெரியும்? அவர் என்னமோ பாஷை பேசினார் ... உங்களுக்கு இருக்கும் ஆவலைப் பார்த்தால், வாதாபி சக்கரவர்த்தியைப் பார்க்க உங்களுக்கே விருப்பம் உண்டு போலிருக்கிறதே?"

"ஆம், தம்பி! உன்னை அனுப்பாமல் நானே ஓலையை எடுத்துக் கொண்டு

காஞ்சிமா நகர்க் கோட்டையின் பிரதம தளபதி. கோட்டைக் காவலுக்காகச் சக்கரவர்த்தியே அனுப்பியிருக்கிறார். இனிமேல் காஞ்சிக் கோட்டையைப் போல் ஒளிந்து கொள்வதற்குப் பத்திரமான இடம் பூலோகத்திலேயே கிடையாது. இவருடைய கட்டளையில்லாமல் யமன் கூட இனிமேல் கோட்டைக்குள் நுழைய முடியாது!" என்றான்.

கண்ணபிரான் ஒரு மாதிரி விதூஷகன். இந்த மாதிரியெல்லாம் மாமல்லரிடமே பேசுவதற்கு உரிமை பெற்றவன்.—என்று பரஞ்சோதி அறிந்திருந்தான். எனவே, அவனுடைய பேச்சைப் பொருட்படுத்தாமல், சிவகாமியை நோக்கி, "அப்பா எங்கே? உள்ளே இருக்கிறாரா?" என்று கேட்டான்.

கண்ணபிரானுடைய வேடிக்கைப் பேச்சு அந்தச் சமயம் சிவகாமிக்கும் பிடிக்கவில்லை என்று அவனுடைய முகக் குறி காட்டிற்று. "அப்பா அதோ வருகிறார். அண்ணா!" என்றாள்.

பரஞ்சோதி திரும்பிப் பார்த்தான். ஆயனர் மரத்தடியிலிருந்து வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அவர் அருகில் வந்ததும், பரஞ்சோதி, "சித்தப்பா! என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டான்.

உடனே ஆயனர் அவனுடன், "யார்? பரஞ்சோதியா?" என்று விரைந்து வந்து அவனைத் தழுவிக் கொண்டார். பிறகு, சற்றுத் தாழ்ந்த குரலில், "தம்பி! போன காரியம் எப்படி? காயா? பழமா?" என்று கேட்டார். அப்போது அவருடைய கண்களில் தோன்றிய வெறியையும், குரலில் தொனித்த பரபரப்பையும் கவனித்த பரஞ்சோதிக்குக் கண்ணில் நீர் துளித்தது.


அவன் தழுதழுத்த குரலில், "சித்தப்பா! இந்தத் தடவை காரியம் ஜயமாகவில்லை. வெறுங் கையுடனே தான் திரும்பி வந்திருக்கிறேன். ஆனால் என்றைக்காவது ஒருநாள் நிச்சயமாக அஜந்தா இரகசியத்தை அறிந்து கொண்டு வந்து உங்களுக்குத் தெரிவிப்பேன்" என்றான்.

"வேண்டாம், தம்பி! வேண்டாம். நீ ஸ்ரீபர்வதம் போகவில்லை என்று நானும் கேள்விப்பட்டேன். வழியில் பல்லவ சைன்யத்தில் சேர்ந்து விட்டதாகச் சொன்னார்கள். ஒருவேளை பொய்யாயிருக்குமோ என்று நினைத்தேன். அதனால் பாதகமில்லை. என்னும் அறியாத அஜந்தா இரகசியத்தை நானே சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடுவேன். தம்பி! சில புதிய சோதனைகள் செய்து கொண்டிருக்கிறேன். வருகிறாயா, காட்டுகிறேன்!" என்று ஆயனர், தாம் உட்கார்ந்திருந்த மரத்தடியை நோக்கினார்.

இதற்குள், சிவகாமி, "அப்பா! அண்ணன் எட்டு மாதம் கழித்து வந்திருக்கிறார். உள்ளே வந்து உட்காரச் சொல்லுங்கள். எல்லாம் விவரமாய்க் கேட்கலாம்" என்றாள்.

"ஆமாம், ஆமாம்! வா, தம்பி!" என்று கூறி, ஆயனர் பரஞ்சோதியை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.





அவன் மனதில் பய பக்தியும் மரியாதையும் அன்பும் அபிமானமும் சங்கோசமும் வாத்ஸல்யமும் கலந்த புனிதமான தெய்வீக உணர்ச்சி தோன்றிற்று. சிவகாமி விஷயத்தில் அவனுடைய மனோ நிலைமைக்குத் தகுந்த உதாரணம் சொல்ல வேண்டுமானால், சீதாதேவி விஷயத்தில் லக்ஷ்மணனுடைய மனோ நிலைமையைத் தான் சொல்ல வேண்டும்.

ஆயனர் வீட்டு முகப்பில் சிவகாமியைக் கண்டதும், பரஞ்சோதி ஏன் தலையைக் குனிந்து கொண்டான் என்பதை இப்போது நாம் நன்கறியலாம்.

* * *

ரதத்தில் இருந்தது மாமல்லர் அல்ல என்று கண்டதும், அதனால் ஏற்பட்ட ஏமாற்றத்தினால், வருகிறவர் வேறு யார் என்று தெரிந்து கொள்ளக்கூடச் சிவகாமி ஆசைப்படவில்லை. உடனே அவளுடைய கண்கள் ரதத்தை ஓட்டிக் கொண்டுவந்த கண்ணபிரான் மீது சென்றது.

கண்ணபிரான் ரதத்தின் முகப்புத் தட்டிலிருந்து குதித்து முன்னால் வர, பரஞ்சோதி அவனைத் தொடர்ந்து பின்னால் வந்தான். மதுவுண்டு வெறி கொண்ட வாதாபியின் யானைப் படையை எத்தனையோ தடவை எதிர்த்துச் சின்னாபின்னமாகச் சிதறி ஓடப் பண்ணிய மகா வீரன் ஒரு அபலைப் பெண்ணை ஏறிட்டுப் பார்க்கவும் தைரியம் வாராமல் புது மருமகளைப்போல் அடக்க ஒடுக்கத்துடன் தலைகுனிந்து நடந்து வந்த காட்சியைப் பார்ப்பதற்கு நல்லவேளையாக அங்கு யாரும் இல்லை!

அவர்கள் நெருங்கி வந்ததும், சிவகாமி, "அண்ணா! வீட்டில் எல்லாரும் சௌக்கியமா?" என்று கேட்டாள். அவளுடைய குரலில் தீனமும் ஏமாற்றமும் நன்கு தொனித்தன.

"இல்லை, தாயே! இல்லை! வீட்டில் ஒருவரும் சௌக்கியம் இல்லை. கமலிக்குத் தலைவலி. அப்பாவுக்கு முழங்கால் வலி. எனக்கும் உடம்பு சரியாகவே இல்லை......"

"உங்களுக்கு என்ன, அண்ணா!" என்று சிவகாமி கேட்டாள்.

"அது தான் தெரியவில்லை. வயிற்றில் ஏதோ கோளாறு இருக்கிறது. கமலி சொல்லுகிறாள்: 'உன் வியாதிக்கு மருந்து பூனை தான்!' என்று."

"பூனையா?"

"ஆமாம், தாயே! இப்போதெல்லாம் எனக்கு அசாத்தியமாகப் பசிக்கிறது. நேற்று ராத்திரி கமலி கட்டு வைத்திருந்த ஒன்பது அப்பம், ஏழு தோசை, பன்னிரண்டு கொழுக்கட்டை அவ்வளவையும் தின்றுவிட்டு, 'இன்னும் ஏதாவது இருக்கிறதா, கமலி!' என்று கேட்டேன். 'உன் வயிற்றில் ஏதோ எலிதான் இருக்கிறது; ஒரு நாளைக்குப் பூனையைச் சாப்பிடு; அப்போதுதான் உன் பசி தீரும்' என்றாள்!"

இதைக்கேட்ட சிவகாமி கலீரென்று சிரித்தாள். கண்ணபிரானுக்குப் பின்னால் வந்து நின்ற பரஞ்சோதியினாலும் சிரிக்காமலிருக்க முடியவில்லை.

பரஞ்சோதியின் சிரிப்புச் சத்தத்தைக் கேட்ட சிவகாமி அவன் பக்கம் திரும்பிப் பார்த்தாள். ஆஹா! இது யார்? தெரிந்த முகமாயிருக்கிறதே?

பரஞ்சோதி தைரியமடைந்து, "தங்கச்சி! என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டான்.

"யார்? — நீங்களா? — திருவெண்காட்டிலிருந்து......"

"ஆம், நான் தான்! திருவெண்காட்டு நமசிவாய வைத்தியரிடமிருந்து அப்பாவுக்கு ஓலை கொண்டுவந்த பரஞ்சோதி தான்......"

அப்போது, கண்ணபிரான் குறுக்கிட்டு, "மன்னிக்க வேண்டும்! கல்யாணச் சந்தடியில் மாப்பிள்ளையை மறந்து போனேன். தாயே! இவர் யார் தெரியுமா?

இன்று காலையில் குமார சக்கரவர்த்தியின் ரதத்தில் ஏறிப் பரஞ்சோதி ஆயனச் சிற்பியின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தபோது, யுத்த ஆயத்தங்களையும், கோட்டைக் காவலையும் பற்றிக்கூட அவனால் சிந்திக்க முடியவில்லை. பல்லவ குமாரரின் காதலுக்கும் தன்னுடைய காதலுக்கும் உள்ள வேற்றுமையைப் பற்றியும் அதன் காரணங்களைப் பற்றியும் அவன் வெகு நேரம் சிந்தித்துப் பின் வரும் முடிவுக்கு வந்தான் :—

ஆற்று வெள்ளத்தைத் தடை செய்து நிறுத்த நிறுத்த, அதன் வேக சக்தி பெருகிக்கொண்டு வருவது போல, காதலும் எவ்வளவுக் கெவ்வளவு தடைகள் ஏற்படுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அதிக வேகம் அடைகிறது போலும்! அதிலும், காதலர்களுக்குள்ளே வாழ்க்கை அந்தஸ்தில் எவ்வளவுக் கெவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ, அவ்வளவுக்குக் காதலின் வலிமை மிகுதியாகும் போலும்! சமதரைப் பிரதேசங்களில் ஓடும் நதியின் வெள்ளம் ஒரே மாதிரியான கம்பீர நடையுடனும், 'ஹோ' என்ற ஒரே சுருதியான சத்தத்துடனும் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால், மலை உச்சியிலிருந்து கீழே பள்ளத்தில் விழும் அருவிக்கு என்ன வேகம்? என்ன இரைச்சல்? பாறுங் கல்லையே பள்ளமாகத் தோண்டி விடும் அபார சக்தி அல்லவா அதற்கு ஏற்பட்டு விடுகிறது? அருவி விழுகிற வேகம் ஒருபுறம் இருக்க, விழுகிற பள்ளத்திலே தான் தண்ணீர் எப்படிப் பொங்கிக் கொந்தளிக்கிறது?

மாமல்லருக்கும் சிவகாமிக்கும் ஏற்பட்டிருந்த நேயம் மலைவீழ் அருவி போன்றது என்று பரஞ்சோதி தீர்மானித்தான். அவர்களுடைய காதல் பூர்த்தியாவதற்கு எத்தனை எத்தனை தடைகள் இருக்கின்றன என்பதை எண்ணியபோது அவனுடைய மனம் கனிந்தது. எல்லாவற்றிலும் பெரிய தடை, மகேந்திர சக்கரவர்த்தியின் விருப்பம் வேறு விதமாயிருந்ததே யாகும். அந்தப் பெருந் தடைக்குப் பரிகாரம் உண்டா? அது எப்போதாவது நிவர்த்தியாகக் கூடுமா?

சென்ற எட்டு மாதத்தில் சக்கரவர்த்தியிடம் நெருங்கிப் பழகி, அவருடைய அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாகி, அநேக விஷயங்களில் அவருடைய அந்தரங்கக் கருத்துக்களை யெல்லாம் அறிந்திருந்த பரஞ்சோதி, மாமல்லரின் காதலைப் பற்றிச் சக்கரவர்த்திக்குத் தெரியுமென்றும், அதை அவர் விரும்பவில்லையென்றும் திட்டமாய்த் தெரிந்து கொண்டிருந்தான்.

எனவே, இப்போது அவனுடைய நிலைமை மிகவும் தர்ம சங்கடமாய்ப் போயிருந்தது. ஒரு பக்கத்தில், அவனுடைய மனப் பூர்வமான பக்திக்குப் பாத்திரமானவரும், தந்தையின் ஸ்தானத்தை வகிப்பவருமான மகேந்திரர், குமார சக்கரவர்த்தியின் உள்ளத்தைச் சிவகாமியிடமிருந்து திருப்ப விரும்புகிறார் என்பதை அவன் அறிந்திருந்தான். மாமல்லரோ, தம்முடைய இருதய அந்தரங்கத்தை யெல்லாம் வெளியிடுவதற்குரிய உற்ற துணைவனாக அவனைப் பாவித்து, தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அவனுடைய ஒத்தாசையை எதிர்பார்க்கிறார். சக்கரவர்த்திக்கு உகந்ததைச் செய்தால், தன்னை நம்பிய சிநேகிதனுக்குத் துரோகம் செய்வதாகும். சிநேகிதனுக்கு உகந்ததைச் செய்தாலோ, சக்கரவர்த்திக்கு விருப்பமில்லாததைச் செய்ததாக முடியும்.

இந்த தர்மசங்கடம் ஒருபுறமிருக்க, சிவகாமியின் மனோ நிலைமை என்ன? அவளுக்கு நன்மையானது எது? இந்தப் பொருத்தமில்லாத காதலினால், அவளுக்கு உண்மையில் நன்மை உண்டாகுமா? இது விஷயத்தில், ஆயனருடைய அபிப்பிராயந்தான் என்ன?

இம்மாதிரியான பலவாறான எண்ணங்கள் ரதத்தில் அப்போதெல்லாம் பரஞ்சோதியின் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருந்தன.

ஆனாலும், இத்தனை மனக் குழப்பங்களுக்கிடையே ஒன்றுமட்டும் மிகத் தெளிவாயிருந்தது. சிவகாமி தேவியிடம் அவன் உள்ளத்தில் தோன்றிய பக்தி சிரத்தை சம்பந்தமாக மட்டும் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. சிவகாமி என்று எண்ணியதுமே,

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் ௫

காதற் புயல்

சிற்ப வீட்டின் வாசலில் வந்து நின்ற சிவகாமியைக் கண்டதும், பரஞ்சோதியின் கண்கள் அவளை ஏறிட்டுப் பார்க்க முடியாமல் தரையை நோக்கின.

ஆயனச் சிற்பியின் மகள் சாதாரண மானிடப் பெண் அல்ல,—தெய்வப் பிறவி என்ற எண்ணம் முதன் முதலில் அந்த வீட்டுக்கு வந்திருந்த போது பரஞ்சோதியின் உள்ளத்தில் தோன்றியிருந்தது. அவளுக்கும் மாமல்லருக்கும் ஏற்பட்டிருந்த இருதய பாசத்தைப் பற்றி ஒருவாறு அவன் ஊகித்துத் தெரிந்து கொண்டிருந்தான். நேற்றிரவு பல்லவ குமாரரின் வாய் மொழியினாலேயே அது உறுதிப்பட்டது.

அரண்மனை நிலா மாடத்தில் சரத்கால சந்திரனின் அமுத கிரண போதையை அநுபவித்துக் கொண்டு, சிநேகிதர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது, மாமல்லர் தம்முடைய இருதயத்தையே அவனுக்குத் திறந்து காட்டிவிட்டார். அணை போட்டுத் தடுத்திருந்த நதிப் பிரவாகம் ஒரு சிறு வழி ஏற்பட்டதும் அணையையே இடித்துத் தள்ளிக் கொண்டு அலை மோதும் வெள்ளமாகப் பாய்வது போல, இத்தனை நாளும் மாமல்லரின் உள்ளத்தில் அணை போட்டுத் தடுத்து வைத்திருந்த பிரேமைப் பிரவாகமானது, அவருடைய இருதய அந்தரங்கத்தை வெளியிடக் கூடிய உற்ற தோழன் ஒருவன் கிடைத்த உடனே, அணையை ஒரே மோதலில் இடித்துத் தள்ளிவிட்டுப் பெரும் வெள்ளமாகப் பாய்ந்தது.

பரஞ்சோதி அந்த வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு திக்கு முக்காடிப் போனான்.

இந்த மாதிரி காதல் வெறி அவனுக்கு முற்றிலும் புதுமையாயிருந்தது. திருவெண்காட்டில் நமசிவாய வைத்தியர் வீட்டில் அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்த நங்கை ஒருத்தியும் இருக்கத்தான் இருந்தாள். ஆனால், அவளுடைய நினைவானது பரஞ்சோதிக்கு இம்மாதிரி வெறியை உண்டாக்கவில்லை; அமைதி கலந்த இன்பத்தையே உண்டாக்கியது.

மாமல்லருடைய காதலோ அவருடைய உள்ளத்தை, கடும் புயல் சுழன்று சுழன்று அடிக்கும் மலை சூழ்ந்த பிரதேசமாகவும், திடீர் திடீர் என்று தீயையும் புகையையும் கக்கும் எரிமலையாகவும், பிரம்மாண்டமான அலைகள் மலை மலையாக எழுந்து மோதும் குடாக் கடலாகவும் செய்திருப்பதைப் பரஞ்சோதி கண்டான்.

மாமல்லருடைய காதல் வேகம் பரஞ்சோதிக்குப் பெரு வியப்பை உண்டாக்கிற்று; அவரிடம் அநுதாபத்தை உண்டாக்கிற்று; அதோடு, பயத்தையும் உண்டாக்கிற்று.

ஒன்றே ஒன்று மட்டும் பாக்கி இருக்கிறது:

கச்சேரியின் கடைசியில், பாடகி, "வாழ்க நீ எம்மான்" என்னும் பாரதியாரின் பாடலை விம்மெக்கிரமத்திமம், சஹானா, கேதாரகௌளம், மோஹனம் என்னும் நாலு ராகங்களில் பாடினார்.



கேஸரி பாய்

பாட்டை அடியிலிருந்து ஒரு முறை மோகனத்தில் பாடி, "மகாத்மா நீ வாழ்க வாழ்க!" என்று உச்சஸ்தாயியில் முடித்ததும், அந்தப் பெரிய சபையில் "மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷம் கோலாகலமாய் எழுந்து வெகு நேரம் வரையில் ஜெய கோஷமும் பிரதித்வனியுமாய் நீடித்திருந்தது.

* * *

ஸ்ரீமதி கேஸரி பாய்

நமது அட்டைப் படத்தில் காட்சி தரும் உஸ்தாத் அலாதியா கான் அகில இந்திய சங்கீதக் காங்கிரஸில் பாடியபோது, மேடையில் அவர் அருகில் உட்கார்ந்து ஒத்தாசையாக ஒரு பெண்மணி பாடினார். அவர், அலாதியா கான் அவர்களின் பிரதம சிஷ்யை. பெயர், ஸ்ரீமதி கேஸரிபாய். ஹிந்துஸ்தானி பாடகர்களுக்குள்ளே எப்படி அலாதியா கான் இமய சிகரமாய் விளங்குகிறாரோ, அப்படியே ஹிந்துஸ்தானி பாடகிகளுக்குள்ளே ஸ்ரீமதி கேஸரிபாய் தலைமை ஸ்தானம் வகிக்கிறார்.

செல்வமும் அந்தஸ்தும் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர் கேஸரி பாய். கச்சேரிகள் அடிக்கடி ஒப்புக்கொள்வதில்லை. ரேடியோவில் பாடுகிறதில்லை. அவருடைய இசைத் தட்டுகளுக்கு, மற்றவர்களுடையதைவிட எப்போதும் விலை அதிகமாம்.

ஸ்ரீமதி கேஸரி பாய் நாளது ஆகஸ்டு 6-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மயிலை சங்கீத சபையில் பாடுகிறார். மீண்டும் 8-ந் தேதி பாடுகிறார். உயர்ந்த, கலப்பற்ற ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் உண்மையான ஸ்வரூபம் எப்படியிருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்புவோருக்கு நல்ல சந்தர்ப்பம்.

* * *

தியாகப் பிரம்ம சபை

விளம்பரங்களைப் பற்றி எத்தனையோ விளம்பரங்கள் வந்துகொண்டேதானிருக்கின்றன. அவற்றில் எல்லாம், "தியாகய்யாவில் நாகய்யா" என்னும் விளம்பரத்தைப் போல் என் கவனத்தைக் கவர்ந்தது வேறொன்றுமில்லை. தியாகய்யர் பாத்திரமாக நடிப்பதற்கு ஸ்ரீ நாகய்யாவைக் காட்டிலும் தகுந்தவர்கள் யார் இருக்கிறார்கள்?

"தியாகய்யாவில் நாகய்யா" எவ்வளவு பொருத்தமாகத் தொனிக்கிறதோ, அவ்வாறு "தியாகராஜ நகரில் தியாகப் பிரம்ம சபை" என்பதும் தொனிக்கிறது.

எங்கே பார்த்தாலும் சங்கீத சபைகள் காளான்கள் மாதிரி முளைத்துக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், தியாகராஜ நகரில் மட்டும் சங்கீத சபை ஏற்படாதது ஒரு பெரிய குறையாகவே இருந்து வந்தது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு ஸ்ரீ நாகய்யாவே காரண புருஷரானார். அவரும் டாக்டர் ராமய்யங்கார் முதலிய சங்கீத உத்ஸாகிகளும் சேர்ந்து தியாகராஜ நகரிலும் கடைசியாக ஒரு சங்கீத சபையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு, "தியாகப் பிரம்ம சபை" என்னும் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

சங்கீதக் கச்சேரி நடத்துவதற்கு வசதியான கட்டிடம் இல்லாத இடையூறைக் கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஹிந்தி பிரசார சபையின் இரு கட்டிடங்களையும் சேர்த்துப் பந்தல் போட்டு, நாதக் கட்டு வாய்ந்த அழகான சபா மண்டபத்தைத் தயார் செய்து விட்டார்கள்.

சர்க்கரைப் பந்தல் இல்லை; வெறும் கீற்றுப் பந்தல்தான். அதிலும் சென்ற மாதத்தில் இரண்டு தினங்கள் அப்பந்தலில் இன்னிசைத் தேன்மாரி பொழிந்தது. வேணுகான பாலவித்வான் ஸ்ரீ மகாலிங்கம், பூர்வ வாசனையினால் சங்கீத வித்தையைச் சுயமாகவே கற்றுணர்ந்த மேதாவி, தன்னுடைய வேய்ங்குழல் நாதத்தையே ஞாபகப்படுத்தும்படியாக இசை மாரி பொழிந்தார்.

மறுநாள் ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் தமது பழைய சங்கீத மேன்மையை ஸ்திரமாக நிலைநாட்டும்படியான சங்கீதக் கச்சேரி செய்தார். அவருடைய கச்சேரி உயர்தரமாயிருந்ததோடு தமிழ்மயமாகவும் இருந்தது.

தியாகராஜ நகரில் தியாகப் பிரம்ம சபை மேலும் மேலும் சிறந்தோங்குமாறு நாதப் பிரம்மம் அருள் செய்யட்டும்.

ஆடல் பாடல்

மயிலாப்பூர் பி. எஸ். ஹைஸ்கூல் நிர்வாகிகள், பள்ளிக்கூடக் கட்டிடத்துக்குப் பின்னால் ஒரு நகரக் கொட்டகையைக் கட்டியபோது, அது இவ்வளவு பிரபலமடையுமென்றும் இவ்வளவு அரிய காரியங்களுக்கு உபயோகமாகு மென்றும் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள்.

மயிலை சங்கீத சபையின் ஆதரவில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகள் மேற்படி கொட்டகையில்தான் நடக்கின்றன என்பதை நேயர்கள் அறிவார்கள்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை அதே இடத்தில் அன்னை கஸ்தூரிபா நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது.

இந்தக் கச்சேரியை நடத்த வேண்டுமென்று சொன்னவர்களும், நடத்தி வைத்தவர்களும் எதிர்பார்த்ததைக் காட்டிலும், எல்லாவிதத்திலும் மகத்தான வெற்றிகரமாகக் கச்சேரி நடந்தேறியது.

சங்கீத உலகத்தில் இதுவரை கண்டும் கேட்டுமறியாத பெருந்தொகை ரூபாய் **பன்னிரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்து ஏழு** (ரூ. 12,367) கச்சேரிக்கு வசூலாயிற்று.

நிதிக் கமிட்டியின் தலைவர் ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயருக்காக அன்று பேசிய ராஜாஜி, "சங்கீதத்தில் சொல்வதுபோல் சொல்கிறேன்" என்று குறிப்பிட்டு, மேற்படி தொகையை மூன்று தடவை திருப்பித் திருப்பிச் சொன்னபோது, சபையோர் ஒவ்வொரு தடவையும் பலமான கரகோஷம் செய்து ஆரவாரித்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாமே அவ்வளவு பணமும் கஸ்தூரிபா நிதிக்குக் கொடுத்ததாக எண்ணி உற்சாக மடைந்ததாகத் தோன்றியது!



மேலும் ராஜாஜி, ஸ்ரீமதி கஸ்தூரிபாயின் தெய்விக வாழ்க்கையையும், புனிதமான மரணத்தையும் பற்றிச் சொன்னார். அவருடைய ஞாபகார்த்தமாக வசூலிக்கும் நிதிக்குப் பணம் கொடுத்தது எவ்வளவு பாக்கியம் என்றும் சொன்னார்.

இன்னும் நமது சங்கீதத்தின் மகிமையைப் பற்றியும் பேசினார். "வேறு எதிலே நாம் குறைவாயிருந்தாலும் சங்கீதக் கலையில் மட்டும் நாம் உயர்ந்திருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. வடநாட்டில் இவ்வளவு உயர்ந்த சங்கீதமும் கிடையாது; சங்கீதம் கேட்க இவ்வளவு பேர் வருகிறதுமில்லை. ஒருவேளை பணங் கொடுத்தாலும் பாட்டுக் கேட்க வராமல் வீட்டிலேயே இருந்து விடுவார்கள் !" என்று சொன்னபோது, தென்னாட்டைப் பற்றி எல்லாருக்கும் வெகு பெருமையாயிருந்தது.

அன்று கச்சேரி செய்த "அம்மையா"ருக்கும், அவருக்குப் பக்கவாத்தியம் வாசித்து உதவி புரிந்த பிடில் சக்கரய்யர், மிருதங்கம் ராமநாதய்யர், கஞ்சிரா வேணு நாயக்கர் ஆகியவர்களுக்கும் ராஜாஜி வந்தனம் சொன்னார்.

மேலும், "கச்சேரியைப் பற்றி நான் ஏதாவது சொன்னால் அதிகப் பிரசங்கமாகும். ஏனெனில் என்னைவிட அதிகமாக நீங்கள் சங்கீதம் கேட்டவர்கள். இந்த அம்மையாரின் ஞானமும் வித்வத்தும் மேலும் மேலும் சிறந்து நெடுங்காலம் நீடித்திருக்க வேண்டுமென்று ஆசீர்வதிக்கிறேன். நீங்களும் ஆசீர்வதியுங்கள் !" என்றபோது, சபையோர் ஒருமுகமாகக் கரகோஷம் செய்து அவ்விதமே ஆசி கூறினார்கள்.

கச்சேரியைப் பற்றி விவரமான விமரிசனம் வேண்டுமென்று விரும்புகிறவர்கள், தயவுசெய்து டிசம். 8உ கச்சேரியைப்பற்றி "கல்கி"யில் வெளியான விமரிசனத்தைப் படிக்கக்கோருகிறேன். அதன் முடிவில் "எல்லாவிதத்திலும் இன்னும் ஒருபடி இந்தக் கச்சேரி உயர்வாக இருந்தது" என்பதையும் சேர்த்துக் கொள்ளக் கோருகிறேன்.

இதற்குமேல் கச்சேரியைப் பற்றிச் சொல்ல வேண்டியது இன்னும்

ஜின்னா :—எனக்கா ஞாபகப்படுத்து கிறீர்கள்? நீங்கள் யார் எனக்கு ஞாபகப் படுத்துவதற்கு ?...இருக்கட்டும் ! இந்த யானையை என்னத்திற்காகக் கொண்டு வந்தீர்கள் ? எந்த முட்டாள் கொண்டு வரச் சொன்னது ?

லியா :—ஹுஜூர் ! தாங்கள்தான் கொண்டுவரச் சொன்னீர்கள் !

ஜின்னா :—நானா கொண்டுவரச் சொன்னேன் ! இந்த தரித்திரம் பிடித்த, காலு காலும் ஒரு கையும் ஒரு வாலும் உள்ள யானையையா நான் கொண்டு வரச் சொன்னேன் ? இந்த முறக்காதும், பூனைக்கண்ணும், உலக்கைக் காலும் உள்ள யானையையா கொண்டு வரச் சொன்னேன் ! ஒரு வெள்ளை யானை, ஒரு சிவப்பு யானை, ஒரு மஞ்சள் யானை ஒன்றும் கிடைக்கவில்லையா ? இந்த அவலட்சணம் பிடித்த கறுப்பு யானை தானா அகப்பட்டது ?

லியா :— ஹுஜூருக்குப் பிடிக்கா விட்டால் திருப்பி அனுப்பிவிடுகிறோம்.

ஜின்னா :—ஆகா ! என் மானத்தை வாங்கத்தானே இந்தச் சூழ்ச்சி செய்தீர்கள் ? 'யானை ஊர்வலம்' என்று பத்திரிகைகளில் எல்லாம் விளம்பரம் செய்துவிட்டு, இப்போது ஊர்வலம் விடா விட்டால் என்ன ஆகும் ? "ஜின்னாவுக்கு யானை ஏறத் தெரியாது" என்று தானே எல்லாரும் சொல்வார்கள் ?...... இந்த எழவெடுத்த மூதேவிக் கழுதை யானையின் மேல் எப்படி ஏறுகிறது ? சொல்லிவிட்டு நாசமாய்ப் போங்கள்.

அப்துல் :—நாங்கள் தூக்கி விடுகிறோம், ஹுஜூர் !

[பலர் சேர்ந்து ஜின்னாவைத் தூக்கி யானை மேல் ஏற்றுகிறார்கள். யானை நடக்கிறது !]

ஜின்னா :—ஐயையோ ! ஐயையோ ! வலிக்கிறதே ! வலிக்கிறதே !

எல்லாரும் :—கீழே குதியுங்கள் ! கீழே குதியுங்கள் !

[ஜின்னா குதிக்கிறார். எல்லோரும் தாங்கிக் கொள்ளுகிறார்கள்]

ஜின்னா :—அப்பா ! பிழைத்தேன் ! பட்டாபிஷேகம் ஆனதும், முதல் காரியம், உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு வெள்ளை யானையைக் கட்டுகிறேன், பாருங்கள் !

எல் :— ஐயையோ ! வேண்டாம் ! மன்னியுங்கள் ! மன்னியுங்கள்.

ஜின்னா :—அப்படியானால் உடனே ஓடிப்போய் ஒரு ரோல்ஸ்ராய்ஸ் மோட்டார் கொண்டு வாருங்கள்.

[எல்லோரும் ஓடுகிறார்கள்.]

காட்சி 3

இடம் : பாகிஸ்தான் தர்பார்.
காலம் : அகாலம்.

[சகலவிதமான அபஸ்வர வாத்திய கோஷங்களும் சப்திக்க, ஜனாப் ஜின்னாவின் தலையில் பாகிஸ்தான் கிரீடம் வைக்கப்படுகிறது.]

ஜின்னா :—ஐயையையையோ !

[கிரீடத்தைக் கையில் எடுத்துக் கொள்கிறார்.]

ஆகா ! என்ன சூழ்ச்சி ! என்ன மோசடி ? என்ன பித்தலாட்டம் ? என்ன புனை சுருட்டு ? இந்தச் செல்லரித்த, சிரிக்கத் தக்க, சின்னா பின்னமான, உளுத்துப் போன, ஆபத்தான அவலட்சண, சர்வ விகார கிரீடத்தை எதற்காக என் தலையிலே வைத்தீர்கள் ? அந்தப் பொல்லாத புகைக் கண்ணாடி போட்ட சூழ்ச்சிக்கார ராஜாஜி நம்முடைய தலையிலே பாகிஸ்தானைக் கட்டியது போலல்லவா இருக்கிறது ?

அலி :—பாதுஷா ஸலாமத் ! மாப் கீஜியே ! (மன்னியுங்கள் !) தாங்கள் தானே கிரீடம் வேண்டுமென்று சொன்னீர்கள் ?

ஜின்னா:—நான் எங்கே சொன்னேன்? நான் சொல்லியிருந்தாலும் இந்த ஓட்டை உடைசல் செப்பு பித்தளை மண்ணாங்கட்டி தெருப் புழுதிக் கிரீடமா வேண்டுமென்று சொன்னேன்? அப்படியே நான் சொல்லி யிருந்தாலும், உங்களுக்கு அறிவு எங்கே போச்சு !

அப்துல் :—ஹுஜூர் ! பாகிஸ்தானில் எங்கள் எல்லாருடைய அறிவையும் தங்களிடமே ஒப்படைத்துவிட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப் படவில்லையா ?

ஜின்னா :—ஆஹா ! அதிகப் பிரசங்கிகளே ! என்னை எதிர்த்தா பேசுகிறீர்கள் ? அவ்வளவு தைரியமா ? நீங்களும் உங்கள் பாகிஸ்தானும் எப்படியாவது நாசமாய்ப் போங்கள் ! இதோ உங்கள் தரித்திரம் பிடித்த ஓட்டைக் கிரீடம் !

[ஓங்கித் தரையில் மோதுகிறார். கிரீடம் சுக்கு நூறாகிறது.]

எனக்குப் பாகிஸ்தானும் வேண்டாம், பட்டாபிஷேகமும் வேண்டாம். இதோ நான் என் அருமையான 'மலபார் ஹில்' பங்களாவுக்குப் போகிறேன். ஆயிரம் பாகிஸ்தான் ஒரு பம்பாய்க்கு ஈடாகாது. இதோ நடையைக் கட்டுகிறேன்.

[ஜின்னா விரைந்து பட்டாபிஷேக மண்டபத்தை விட்டுப் போகிறார்]

எல்லாரும் (பாடுகிறார்கள்) :—

பாகிஸ்தான் பாதுஷாவைப் பறிகொடுத்தோமே
பறிகொடுத்தோமே, மனம் பதைவித்தோமே !

பாகிஸ்தான் பாதுஷா

யமன்

காட்சி 1

இடம் : பாகிஸ்தான் தலைநகர்.

காலம் : போதாத காலம்.

[ஜனாப் ஜின்னா ஏகாந்தமாக அமர்ந்திருக்கிறார். அவருடைய சாந்தமான முகம் கோவைப் பழம் போல் சிவந்திருக்கிறது. கண்களில் குளுகுளு வென்று தீப் பொறி பறக்கிறது.]

ஜனாப் ஜின்னா (தமக்குத் தாமே):—மூட்டாள்கள்! மூடர்கள்! சனியன்கள்! தரித்திரங்கள்! மழை விட்டும் தூவானம் விடவில்லை! பாகிஸ்தான் வந்தும் பரதவிப்புத் தீரவில்லை......! யார் அங்கே?

[வியாபாரக் அலிகான், லியாகத் அலிகான், அப்துல் ஹமீத்கான், மகமத்கமால்கான், அலிவர்தி கான், அந்தர்பல்டிகான் முதலியவர்கள் பயந்து கொண்டே பிரவேசிக்கிறார்கள்.]

ஜின்னா :—நீங்கள் எல்லாரும் யார்?

லியா :—தங்களுடைய அன்பார்ந்த பிரஜைகள்......!

ஜின்னா :—பிரஜையுமாச்சு, மண்ணாங் கட்டியுமாச்சு! உங்களை யார் இங்கே வரச்சொன்னது?

லியா :—ஹா ஹா! தாங்கள்தான் வரச் சொன்னீர்கள்.

ஜின்னா :—நான் வரச்சொன்னால் நீங்கள் வந்துவிடுவதா? வாயை மூடுங்கள்!

[எல்லோரும் வாயை மூடிக் கொள்கிறார்கள்.]

ஜின்னா:—நீங்கள் எல்லாம் ஊமையா? ஏன் வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்கள்? வாயைத் திறவுங்கள்!

[எல்லாரும் வாயைத் திறக்கிறார்கள்.]

ஜின்னா :—ஏ! அய்யா! உங்களை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய? யாராவது ஒருவர், வந்த காரியத்தைச் சொல்லித் தொலையுங்கள்.

லியா :—பாகிஸ்தான் சாம்ராஜ்யத்திலுள்ள சகல பிரஜைகளும் ஏகமனதாகத் தீர்மானித்திருப்பது என்னவென்றால் தங்களைப் பாகிஸ்தான் பாதுஷாவாகச் செய்து......

ஜின்னா :—என்ன சொன்னீர்கள்? பாகிஸ்தான் பாதுஷாவா? என்னையா பாதுஷா ஆக்கப் பார்க்கிறீர்கள்? மோசம்! நாசம்! அவமானம்! அவகேடு! திருட்டுத்தனம்! போக்கிரித்தனம்! அயோக்கியத்தனம்! சூழ்ச்சி! பித்தலாட்டம்!— இம்மாதிரி என்னை அவமதித்ததற்காக உங்களை என்ன செய்யப் போகிறேன் தெரியுமா?

[வீராவேசத்துடன் எழுந்திருக்கிறார்.]

லியா :—தலைவரே! வேண்டாம்! கோபித்துக் கொள்ள வேண்டாம். தங்கள் ஆக்ஞை எப்படியோ, அப்படிச் செய்கிறோம்.

ஜின்னா :—என் ஆக்ஞைப்படியா? அப்படியானால், தொலைந்து போங்கள்!

[எல்லாரும் போகிறார்கள்.]

ஜின்னா :—எங்கே போகிறீர்கள்?

லியா :—தொலைந்து போகிறோம்!

ஜின்னா :—அல்லா! அல்லா! அல்லா!... இவர்களைக் கட்டிக்கொண்டு எத்தனை நாளைக்கு அழ வேண்டுமோ தெரியவில்லையே?... நான் சொன்னபடி செய்ய வேண்டாமென்று எத்தனை தடவை உங்களுக்குச் சொல்வது?

லியா :—அப்படியானால்,...

ஜின்னா :—பாகிஸ்தான் பாதுஷா பதவி எனக்கு வேண்டாம்; வேண்டவே வேண்டாம்! யானை ஊர்வலம், பட்டாபிஷேகம் எதற்காவது ஏற்பாடு செய்தீர்களோ, பார்த்துக் கொள்ளுங்கள். எனக்குப் பொல்லாத கோபம் பிரமாதமாக வந்துவிடும்.

லியா :—இதோ போய் எல்லா ஏற்பாடும் செய்து விடுகிறோம். லைலாம் அலீகும்!

ஜின்னா :—சர்வ நாசம்! சகலமும் நாசம்!

காட்சி 2

இடம் : நடு வீதி.

காலம் : ராகு காலம்.

[அலங்கரிக்கப்பட்ட யானை வந்து நிற்கிறது. ஜனாப் ஜின்னா அதன் அருகில் நிற்கிறார். பாகிஸ்தான் பிரமுகர்கள் பலரும் சூழ்ந்து நிற்கிறார்கள்.]

ஜின்னா :—இது என்ன கோரம்? இது என்ன அலங்கோலம்?......ஏன் எல்லாரும் பேசாமல் நிற்கிறீர்கள்?

லியா :—ஜனாப்! பாகிஸ்தான் ராஜ்யத்தில் பேச்சுரிமை முழுதும் தங்களுக்கே கொடுத்திருப்பதைப் பணிவுடன் ஞாபகப் படுத்துகிறோம்.

அமெரியின் சுபாவத்தையும், பொதுவாக மனித சுபாவத்தையும், நாம் அறிந்துதானிருக்கிறோம்.

“காரியம் ஆகிறதற்குக் காலைப் பிடி; அப்புறம் கழுத்தைப் பிடி!” என்ற மனித சுபாவத்தை எல்லாராலும் மீற முடியாது.

இரண்டு வருஷத்துக்கு முன்பு யுத்தம் மிக நெருக்கடியாயிருந்தது; பிரிட்டிஷாருக்கு நாளா பக்கங்களிலும் தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது, சர்ச்சிலே இந்தியப் பிரச்னையைக் கவனித்தார். கிரிப்ஸைத் தூது அனுப்பினார்.

இப்போது யுத்த நெருக்கடி நீங்கிவிட்டது; நாலாபுறத்திலும் வெற்றிக்கு மேல் வெற்றியாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தியப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு இப்போது அவசரமும் இல்லை; அவசியமும் இல்லை!

ஆகையினால்தான் இப்போது அமெரி இப்படிப் பேசுகிறார்!

* * *

நம்மைப் பொறுத்த வரையில், இரண்டு வருஷத்துக்கு முன்னால் சுதந்திர மாட்டின் கழுத்துத் தும்பு நம்முடைய கையிலே இருந்தது.

அப்போது மாட்டைப் பிடித்துச் சுலபமாக முளையில் கட்டியிருக்கலாம்.

அந்தச் சந்தர்ப்பத்தைக் கை விட்டு விட்டோம்.

தும்பை யார் பிடிக்கிறது, எந்த முளையில் கட்டுகிறது, என்ன தீனி போடுகிறது, யார் பால் கறக்கிறது என்ற விவாதங்களில் ஈடுபட்டுத் தும்பையே கைவிட்டு விட்டோம்.

மாடு ஓட்டம் பிடித்து விட்டது!

இப்போது மாட்டின் வாலைப் பிடிக்க முயல்கிறோம்.

மாடு ஓடத்தான் ஓடும்; உதைக்கத்தான் உதைக்கும்.

கையில் அதன் வால் அகப்படுவதும் சுலபமில்லைதான்!

கஷ்டப்பட்டு முயற்சி செய்துதான் மாட்டைப் பிடித்தாக வேண்டும்.

ஆதலின், அமெரியின் பேச்சைக் குறித்து நமக்கு ஏமாற்றமில்லை; அதிசயமில்லை; ஆச்சரியமும் இல்லை.

* * *

ஆனால், அமெரி இப்படிப் பேசிவிட்டு, இந்தியப் பிரச்னையைத் தீர்க்காமல் தப்பித்துக்கொள்ள முடியுமா?

ஒரு நாளும் முடியாது!

நல்ல நேராக நின்றாலும், தப்ப முடியாது; குப்புற அடித்து விழுந்தாலும் தப்ப முடியாது!

மகாத்மாவின் புதுத் திட்டம் அந்த நன்மையைத்தான் நமக்குச் செய்திருக்கிறது.

“தப்பிக்க முடியாது” என்பதை அமெரியே உணர்ந்து எப்படித் தவித்திருக்கிறார், பாருங்கள்!

இந்தியாவைப் பற்றிய அவருடைய பழைய பேச்சுக்களையும், இந்தப் பேச்சையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

காங்கிரஸ்காரர்கள் ஜப்பானுடன் சேர்ந்து கொள்ளப் பார்த்தார்கள் என்றும், யுத்த முயற்சிக்குத் தடை செய்யப் பார்த்தார்களென்றும் அவர் முன்னே புளுகிய காம்பீரமான புளுகுகளுக்கும், இப்போது தயங்கித் தத்தளித்துக் கூறும் சால்ஜாப்புப் புளுகுகளுக்கும் எவ்வளவு வித்தியாசம்?

“மகாத்மா வின் அதிகாரம் முழுதும் கேட்கிறாரே? வைஸ்ராயின் விசேஷ அதிகாரத்தைப் பிடுங்கப் பார்க்கிறாரே!” என்று அமெரி ஓலமிடும் குரலில், “இதைக் கேட்டு உலகம் சிரிக்குமே?” என்ற வெட்கமும் தொனிக்க வில்லையா?

* * *

மகாத்மாவின் புதுத் திட்டம் உலகத்தின் முன்னிலையில் இந்தியாவின் கட்சியை நேர்மையாகவும் நியாயமாகவும் செய்துவிட்டது.

எனவே, அதை ஒப்புக்கொள்ளாமல் சால்ஜாப்புச் சொல்லி அமெரிக் கூட்டம் தப்பித்துக்கொள்ள முடியாது.

தப்பித்துக் கொள்ள முயல்வதும் பெரும் பிசகாகும்.

இரண்டு வருஷத்துக்கு முன்பு நாம் செய்த தவறைக் காட்டிலும் அது நூறு மடங்கு பெரிய தவறாக முடியும்.

ஒரு தேசத்தார் வெற்றியின் சிகரத்தை அடையும்போதுதான் கடவுள் அவர்களுக்குச் சோதனையையும் அனுப்புகிறார். அப்போதுதான் அவர்கள் நியாயமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும். அந்தச் சோதனையில் அவர்கள் தவறினால், பின்னால் வரும் வீழ்ச்சியும் மகத்தானதாய்த் தானிருக்கும்.

கடவுளின் பொறுமைக்கும் எல்லை யுண்டு என்று அப்போது தெரியவரும்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான “நல் செயல்” என்னும் கால க்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: கே. ஆர். கல்யாணராமன், புரசைவாக்கம், சென்னை.

தும்பும் வாலும்

கடவுள், கடவுள்தான்!

கடவுளின் பொறுமை, பொறுமைதான்!

கடவுள், இந்தியாவில் நடக்கும் பிரிட்டிஷ் ஆட்சியை இருநூறு வருஷத்துக்கு மேலாகப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்!

கடவுள், உலகத்து இராஜதந்திரிகள் பேசும் அபத்தப் பேச்சுக்களை யெல்லாம் கேட்டுக்கொண்டு பொறுமையோடிருக்கிறார்.

முக்கியமாக, கர்னல் அமெரியின் பித்தலாட்டங்களைக் கேட்டுக்கொண்டும் சும்மா இருந்து வருகிறார்!

கடவுளின் பொறுமையே பொறுமை!

* * *

அமெரி பேசி விட்டார்!

இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மகாத்மா கூறிய யோசனைகளைப் பற்றித் தமது அருமையான திருப் பிதற்றல்களைப் பிதற்றி விட்டார்!

அதைக் கேட்பதற்குக் காமன்ஸ் சபை அங்கத்தினர் 10 பேர் வந்தார்கள்; பிதற்றல் முடியும்போது 25 பேர் இருந்தார்கள்.

இவ்வளவு அழகாகக் கடமையைச் செலுத்தும் காமன்ஸ் சபை அங்கத்தினரிடம்தான் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பு இருந்து வருகிறது.

இதற்கு முடிவுகாலம் இன்னும் வந்த பாடில்லை!

கடவுள் மிகவும் பொறுமைசாலிதான்!

* * *

அமெரி என்ன சொன்னார்?

கன்னத்தில் அறைந்து கைச் செம்பைப் பிடுங்கச் சொன்னார்!

இந்தியாவிலிருந்து இதுவரையில் எவ்வளவு சுறண்டப் பட்டிருக்கிறது, இன்னும் எவ்வளவு சுறண்டலாம், அதிகமாகச் சுறண்டுவதைச் சாத்தியமாக்க இந்தியாவின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது எப்படி? — இது போன்ற விஷயங்களைப்பற்றிச் சவிஸ்தாரமாகப் பேசினார்.

ஆனால், மகாத்மாவின் திட்டத்தைப் பற்றி என்ன சொன்னார்?

அதில் புதிதாக ஒன்றும் இல்லையாம்!

பழைய பல்லவியேதானாம்!

பூராவினில் ஆட்சியையும் மகாத்மா இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறாராம்.

இவ்வளவு நாள் சிறையிலிருந்தும் புத்தி மாறவில்லையாம்!

வைஸ்ராய்க்கு விசேஷ அதிகாரங்களைக் கொடுக்க அவர் சம்மதிக்கவில்லையாம்!

ஆகையால், சமரசப் பேச்சைத் தொடங்குவதற்கு ஆதாரமான அம்சம் எதுவும்கூட மகாத்மாவின் திட்டத்தில் கிடையவே கிடையாதாம்!

வேவலின் வேண்டுகோளுக்கு அதில் பதில் ஒன்றும் இல்லையாம்!

அவ்வளவுதானாம்!

கப்-சிப்-தானாம்!

* * *

சமரசப் பேச்சுத் தொடங்குவது சாத்தியமாவதற்கு மகாத்மா என்ன சொல்லியிருக்க வேண்டுமாம்?

"அடியேன் தாஸானுதாஸன்: பாதாரவிந்தமே கதி என்று சரணாகதி அடைகிறேன்; தங்கள் சித்தம் என் பாக்கியம்" என்று சொல்லியிருக்க வேணுமா?

யுத்தத்தில் தோற்ற ஹிட்லர்கூட அப்படிச் சொல்ல மறுக்கிறாரே! "அவ்வளவு ஜெர்மானியர்களும் செத்தாலும் சாவோம்; சரணாகதி அடைய மாட்டோம்" என்கிறாரே!

பின், யுத்தமே தொடங்காத காந்தி, யுத்தமே விரும்பாத காந்தி, எதற்காகச் சரணாகதி அடைய வேண்டும்?

அல்லது மகாத்மா, "நீங்கள் உமி உமியாகவே கொண்டு வாருங்கள்; நாங்கள் அவல் அவலாகவே கொண்டு வருகிறோம். கலந்து ஊதி நீங்கள் அவலையே தின்னுங்கள்; நாங்கள் உமியையே சாப்பிடுகிறோம்!" என்று ஒப்புக் கொண்டிருக்க வேண்டுமா?

இதுதான் அமெரியின் ஆசை, மனோரதம், பகற்கனவு என்று தோன்றுகிறது.

இது ஒருநாளும் நடக்கப் போவதில்லை, நிச்சயம்!

* * *

அமெரியின் பேச்சு நமக்கு எள்ளளவும் ஏமாற்றம் அளிக்கவில்லையென்பதை ஒப்புக் கொள்கிறோம்.

தங்கள் — அவருக்கு எழுதினார். (தமது தாய் மொழியாகிய குஜராத்தியில் ஒன்றும், முஸ்லிம்களின் பொது மொழியான உருதுவில் அதன் மொழிபெயர்ப்புமாக அனுப்பி வைத்தார்.) அதற்குப் பதிலாக ஜின்னாவும் மகாத்மாவின் உடம்பு நிலையைப் பற்றி அன்புடன் விசாரித்து விட்டு, தமது வீட்டில் மகாத்மாவை வரவேற்கத் தயார் என்று தெரியப் படுத்தினார். இந்தக் கடிதப் பரிமாறல்களைப் படிக்கும்போது நமக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது; நம்பிக்கையும் ஏற்படுகிறது.

வழக்கம் பொல்லாது!

ஆனால் மேற்படி சந்தோஷத்தை நாம் அதிகமாக அனுபவித்து விடாதபடியும், அளவுக்கு மீறி நம்பிக்கை கொண்டுவிடாதபடியும் ஜனாப் ஜின்னா முஸ்லிம் லீக்கில் தமது அதி உக்கிர, மிருகோப, வீர சூரப் பிரசங்கத்தினால் நம்மை எச்சரித்திருக்கிறார். அவருடைய பேச்சில் மகாத்மா காந்தியை வேண்டிய மட்டும் அவமதித்திருக்கிறார். ராஜாஜியின் பேரிலும் அவருடைய திட்டத்தின் பேரிலும் கோப நெருப்பைக் கக்கியிருக்கிறார். இதைப் பார்க்கும்போது நாம் இரண்டில் ஒரு முடிவுக்குத்தான் வரவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒன்று, ஆதிமுதல் சிலர் சொல்லிவருவதுபோல், ஜனாப் ஜின்னாவுக்கு உண்மையில் பாகிஸ்தான் வேண்டியதில்லையென்றும், பிரிட்டிஷ் சர்க்காரின் சூழ்ச்சிக்கு உட்பட்டுச் சுயராஜ்யத்துக்கு முட்டுக்கட்டை போட அதை ஒரு ஆயுதமாக மட்டும் உபயோகப்படுத்தி வருகிறார் என்றும் நிர்மானிக்க வேண்டும். அல்லது, நல்ல மனதுடைய ராஜாஜி சொல்வதுபோல், கடுமையான வசைமொழிகளால் தாக்கிப் பேசியே வழக்கமுள்ள ஜின்னா அந்த வழக்கம் காரணமாகவே இப்போதும் அப்படிப் பேசியதாகக் கொள்ளவேண்டும். இரண்டாவது காரணத்தையே நாம் வைத்துக்கொண்டு, மகாத்மா-ஜின்னா சந்திப்பினால் நிரந்தரமான ஹிந்து—முஸ்லிம் சமரசம் ஏற்படுமென்று நம்புகிறோம். அப்படி ஏற்படவேண்டுமென்று எல்லாத் தெய்வங்களையும் பிரார்த்திக்கிறோம்.

ஆனால் நல்ல முடிவை நாம் நிச்சயமாக எதிர்பார்த்துப் பின்னால் பெரும் ஏமாற்றமடையாமலிருப்பதற்கு ஜனாப் ஜின்னாவின் பிரசங்கம் உதவி செய்கிறது என்பதையும் இங்கே குறிப்பிட்டு வைக்க விரும்புகிறோம்.

ஆகாச வெடி

“சிராத்தம் போன்ற விசேஷ சந்தர்ப்பங்களில் அளிக்கப்படும் விசேஷ போஜனத்துக்கு ஐம்பது பேர்களுக்கு மேல் அழைக்கக் கூடாது” என்று போபால் சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். —ஒரு செய்தி.

“இதில் இறந்து போன பிதிர்ப் பிதாமகர்களும் சேர்த்தியா?” என்று ஒருவர் கேட்கிறார்.

★

“எடின்பரோ நகரக் கௌன்ஸிலில் மாஜி இந்திய வைஸ்ராய் லின்லித்கோவுக்கு ‘நகரத்தின் சுதந்திரம்’ என்று கௌரவப் பட்டம் வழங்கப் பட்டது.”

—ஒரு செய்தி.

தாம் ஆட்சியிலிருந்த காலத்தில் இந்தியா தேசத்தின் சுதந்திரத்தையே பத்திரமாகக் காப்பாற்றிய அவருக்கு ‘தேசத்தின் சுதந்திரம்’ என்ற பட்டமே அளித்திருக்கலாமே?

★

“ராஜாஜி சமரசத் திட்ட சம்பந்தமாகக் காமன்ஸ் விவாதம் பற்றி ‘இது யோக்கியர்களுக்கெல்லாம் பெரிய ஏமாற்றம்’ என்று ராஜாஜி கூறினார்.”

—ஒரு செய்தி.

அநேகமாக யோக்கியரான அமெரிக்கு மட்டும் இது ஏமாற்றமாயிருக் இருக்காது என்று நம்புகிறோம்.

★

“......என்பவர் எலுமிச்சம் பழத்தையும் உருளைக் கிழங்கையும் அனுமதியின்றிப் புதுச்சேரிக்குக் கொண்டு போனதைப் போலீசார் கண்டு பிடித்து விட்டார்கள்.” —ஒரு செய்தி.

அவரைக் காட்டிக் கொடுத்தது எலுமிச்சம் பழத்தின் வாசனைதான் என்று உருளைக்கிழங்கு காரணம் கூறலாம்!


★

“காரைக்குடி ஸ்ரீ சா. கணேசனைப் பார்க்கும் பொருட்டு அவருடைய வீட்டுக்குள் நுழையும் எல்லோருடைய விலாசத்தையும் வாங்கிக் கொண்ட பிறகே போலீஸார் அவர்களை அனுமதிக்கின்றனர்.” —ஒரு செய்தி.

சூனா பானா நீனா வாயன்னா கானா ரூவன்னா இட்டன்னா டானா செட்டியார் அவர்களின் விலாசத்தைப் போலீஸார் சரியாகக் குறித்துக் கொண்டார்களா என்று அறிய விரும்புகிறோம்.

-உம்மன்


ஆட்சிப் பொறுப்பு





...ந்தியாவின் அரசியல் பிரச்னையைப் பற்றி இந்தியாமந்திரி அமெரி
... அங்கத்தினர்களை கொண்ட காமன்ஸ்சபையில் பேசியபோது, முதலில் 45பேர்
ஆஜராகியிருந்து, கடைசியில் 25பேர் மிகுந்தார்களாம்!

முந்திக் கொண்டார்

...ண்டனில் வெகுகாலமாகப் போலிஷ் கவர்ன்மென்ட் ஒன்று இருந்து வருகையில்,
...லாந்தை ஜயித்த ஸ்டாலின் அங்கே தாம் ஒரு புது கவர்ன்மென்டை
...மித்துவிட்டார்!




அமெரி பார்த்த இலட்சணம்
சமரச யோசனைகள்
“காந்திஜியின் புது யோசனையில் சமரசப்
பேச்சுத் தொடங்குவதற்கு ஆதாரமானதுகூட
ஒன்றுமே இல்லை” என்று பார்லிமெண்டில்
அமெரி தெரிவித்தார்.


ஜின்னு பார்த்த இலட்சணம்
சமரசத் திட்டம்
மகாத்மாவின் சம்மதத்துடன் ராஜாஜி
அனுப்பிய திட்டத்தை ஜனாப் ஜின்னு
ஒரே தாக்காய்த் தாக்கி யிருக்கிறார்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் { இதழ் 1

என்ன சேதி?

நாலாம் ஆண்டு

உங்கள் "கல்கி" பத்திரிகைக்கு நாலாம் ஆண்டு பிறந்திருக்கிறது. யுத்த நெருக்கடியை முன்னிட்டு இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தைத் தடபுடலாக நடத்துவதற்கில்லை. எனினும் இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கு நமது இருதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, பதிலுக்கு அவர்களுடைய மனப் பூர்வமான ஆசியைக் கோருகிறோம்.

யுத்தத்தில் மிகவும் நெருக்கடியான சமயத்தில் "கல்கி" பிறந்தது. எத்தனையோ இடையூறுகளையும் எதிர்ப்புக்களையும் சமாளித்துக் கொண்டு வளர்ந்தது. மாதம் இரண்டு முறைப் பத்திரிகையாக ஆரம்பமாகி, மாதம் மூன்று இதழாகி, இப்போது வாரப் பத்திரிகையாகத் திகழ்கிறது. இந்த அதிசயமான வளர்ச்சி தமிழ் மக்களின் இடைவிடாத ஆதரவினாலேதான் சாத்தியமாயிற்று என்பதைப் பரிபூரணமாக உணர்ந்திருக்கிறோம்.


பொங்கும் நன்றி

சென்ற மூன்று வருஷத்திலும் உங்கள் "கல்கி" தீவிரமான விவாதங்களில் தலையிடும்படி நேர்ந்தது. ஒவ்வொரு விவாதத்திலும், பொது நலம் ஒன்றையே கருதி நாம் அறிந்த உண்மையை வெளியிட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடனேயே தலையிட்டோம். தமிழ் மக்கள் நம்மிடம் வைத்துள்ள பேரன்பை இழந்து, பத்திரிகையே வீழ்ந்து விடலாம் என்று தோன்றிய சமயங்களிலும், 'பெரிய இடத்து' விரோதங்களையெல்லாம் பொருட்படுத்தாமலும் நாம் கண்ட உண்மையையே வற்புறுத்தி வந்திருக்கிறோம். அவ்விதம் நாம் தலையிட்ட விவாதம் ஒவ்வொன்றிலும் நமது கட்சியே சரியானது என்று பின்னால் தெரிய வந்திருக்கிறது.

தேசத்தில் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைக்கு மாறாக நாம் எழுதி வந்த காலத்திலும் தமிழ் மக்களின் அன்பும் ஆதரவும் நம்மிடம் அணுவளவும் குறையாம விருந்தன என்பதை எண்ணும்போது, நம் உள்ளத்தில் அளவிலாத நன்றி உணர்ச்சி பொங்கி வருகிறது. அந்த நன்றியை ஒரு நாளும் மறக்க மாட்டோமென்று இந்த நாலாம் வருஷ ஆரம்பத்தில் உறுதி கூறுகிறோம்.

நல்ல செய்தி

மகாத்மா காந்தியின் விடுதலைச் செய்திக்குப் பிறகு நமக்கு மிகவும் சந்தோஷமளிக்கும் செய்தி சென்ற வாரத்தில் கிடைத்திருக்கிறது. காந்தி மகாத்மாவும் ஜின்னா சாகிபுவும் சந்திக்கப் போகிறார்கள் என்னும் செய்தியைத்தான் குறிப்பிடுகிறோம். மகாத்மா ஒரு காரியத்தை ஆரம்பித்தாரானால் அதை ஒரு நாளும் அரைகுறையாக விடுவதில்லை. செய்வதைச் சரியாகச் செய்வதுதான் அவருடைய செயல் முறை. "ராஜாஜியின் தூது என்னத்திற்கு? காந்திஜி தம் கையெழுத்துடனே திட்டத்தை அனுப்பி வைத்தால்தான் என்ன? ஜின்னாவுக்குத் தம் கைப்பட ஒரு கடிதம் எழுதினால்தான் என்ன?" என்று கேட்டுக் கொண்டிருந்தவர்களுடைய மனக் குறை தீரும்படியாக, மகாத்மா தம் கையெழுத்துடன் ராஜாஜி திட்டத்தை லீக்குக்கு அனுப்பினார். ஜனாப் ஜின்னாவைப் பார்க்க விரும்புவதாக ஒரு கடிதம் அல்ல — இரண்டு கடி


சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!
LUX
LUX
TOILET SOAP
அஜூரி
அஜூரிக்கு தினந்தோறும் தன்னுடைய சருமத்தை மிருதுவாகவும், மாசில்லாமலும் வைத்துக் கொள்ளும் வேலை இருக்கிறது. அவர் லக்ஸ் டாய்லெட் சோப்பைத்தான் உபயோகிக்கிறார். அதன் நுரையைத்தன் சருமத்தில் தேய்த்து பிறகு சுத்த ஜலத்தினால் கழுவுகிறார். "இதுதான் என் சருமத்தை அழகுபடுத்தும் முறை" என்று சொல்லுகிறார். அநேக இந்திய சினிமா நட்சத்திரங்கள் இந்த அழகுபடுத்தும் முறையை அனுஷ்டிக்கிறார்கள்
லக்ஸ் டாய்லெட் ஸோப்
LEVER BROTHERS (INDIA) LIMITED

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 இதழ் 1 — 1944 ஆகஸ்டு 6 — தாரண ஆடி 22

[illegible]



பாரத நாட்டுக்கும் பெருமை அளிக்கும் "இமய மலை"ச் சிகரத்தை இந்த இதழ் அட்டையில் பெருமிதத்துடன் வெளியிட்டிருக்கிறோம். "ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் இமய சிகரம்" (மவுண்ட் எவரெஸ்ட்) என்று இந்த ஆசாமியைத்தான் கனம் ஜயகர் குறிப்பிட்டார். உஸ்தாத் அல்லாதியா கான் அவர்களுக்கு வயது அதிகம் ஆகிவிடவில்லை; தொண்ணூற்று நாலுதான் ஆகிறது! ஆனால் இன்னமும் மனிதர் நடமாடிக் கொண்டிருக்கிறார்; பாடிக் கொண்டும் இருக்கிறார்!

பம்பாயில் ஜுலையில் நடந்த அகில இந்திய சங்கீதக் காங்கிரஸின் கடைசி நாள் இராத்திரி முழுவதும் கச்சேரிகள் நடந்தன. சபையோரும் சலிப்பின்றிக் கண் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். எதற்காக வென்றால், 'கடைசி'யாகப் பாடிக் காங்கிரஸை முடிப்பதற்கிருந்த உஸ்தாத் அல்லாதியா கான் பாட்டைக் கேட்பதற்காகத்தான்.

அத்தனை நேரமும் அவர்கள் கண் விழித்துக் காத்திருந்தது வீண் போகவில்லை. பளபள வென்று பொழுது விடியும் சமயத்தில் உஸ்தாத் அல்லாதியா கான் பாட ஆரம்பித்து அரை மணி நேரம் பாடினார். பாட்டு, இமய மலையின் சிகரமாயிருந்தது விருந்து! சபையோர் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள்.

★



Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & Co
MADRAS
RETAIL BRANCH: 285, CHINA BAZAR ROAD

★



வைரம்
பொன்
வெள்ளி
நகைகளுக்கு
P.A.ராஜ செட்டியார் பிரதர்
தந்தி: ராஜா-கோயமுத்தூர்-போன்: 218A

★



பி.ஸி. இரண்டாம் நூற்றாண்டில் ஸ்நானம் சாவகாசமாக செய்து இன்புற வேண்டிய ஓர் முக்கிய காரியமா யிருந்தது. கல்லில் செதுக்கின மஞ்சத்தின் மீது இராஜ வம்ச ரமணிகள் சௌகர்யமாக சாய்ந்துகொண்டு வீற்றிருக்க தாதிமார்கள் ஜலத்தில் ஊற வைத்து சுத்தமான நுரை வரும்படி செய்துள்ள சோப்புக் காய்கள் தேய்த்து அவர்களை ஸ்நானம் செய்வித்து வந்தனர். இன்றோ, இன்னும் மேலானதும் அதிக சௌகர்யமுமான வழிதான் எல்லோருக்கு மிருக்கிறதே — அதாவது ஹமாம் ஸோப்பு! ஹமாமின் நறுமணங் கமழும் ஏராள நுரையானது மயிர்க் கண்களினுள் ஊடுருவிப் பாய்ந்து நன்கு சுத்தம் செய்வதோடு, களைப்பை நீக்கி மட்டற்ற உற்சாகமும் சுகமும் அளிக்கவும் செய்கிறது.


ஹமாம்



உங்கள் ஸ்நானத்திற் குகந்த பெரிய ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியர் தெரு, த. பெ. 31,
மதராஸ்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்



ஆசார்யா ஆர்ட்
புரொடக்ஷன்ஸ்
தயாரிப்பு

★

நவீன நகைச்சுவைச் சித்திரம்

ஆகே கதம்

(ஹிந்தி)

★

மோடிலால், அஞ்சலிதேவி
முபாரக், பத்மா, ராஜகுமாரி
சுக்லா, முதலியோர் நடித்தது.

3-8-44 முதல்

விஜயா டாக்கீஸ்

பெங்களூர் ஸிடி

★

இதர முக்கிய தென்னிந்திய நகரங்களில் விரைவில் எதிர்பாருங்கள்.

★



Distributors :

FAMOUS TALKIE DISTRIBUTORS

MADRAS — MADURA — BANGALORE — BEZWADA — HUBLI